# நான் இருவர்

# நான் இருவர்

R. L. ஸ்டீபன்சன்

தமிழில்
ரகுநாதன்

ஸ்டார் பிரசுரம்
திருவல்லிக்கேணி :: சென்னை - 5

முதற்பதிப்பு மே—1951

விலை ரூ. 1—8—0

STAR PUBLICATIONS
TRIPLICANE -::- MADRAS—5.

Printed at Commercial Printing & Publishing House, Madras-1.

# முன்னுரை

1870–80க்கு இடைப்பட்ட பத்து வருட காலம் ஆங்கில நாவல் இலக்கியப் பாதையிலே ஒரு மைல்-கல் என்று சொல்ல வேண்டும். இந்தக் காலத்தில் நாவலுக்குரிய மதிப்பும் வாசகர் களின் தொகையும் உயர்ந்தன. பாகம் பாகமாக, பைண்டு வால் யூம் நாவல்களை அடுக்கி வைத்துக் கொண்டு பாரதம் பண்ணிக் கொண்டிருந்த மக்களிடையே புது விழிப்பும், உணர்வும் ஏற்பட் டது. மக்கள் அந்தத் தலையணை நாவல்களைத் தள்ளினர்; அவை மவுசிழந்து தவித்தன. மேலும், மக்கள் பழைய பாதையை விட்டு விலகி, புதுப்புது பாணியிலும், முறைகளிலும் வெளிவரும் நாவல்களையே விரும்பினர். இந்த மாறுதலான மனோபாவத்தை. பதிப்பாளர்களும் உடனடியாக உணர்ந்து கொள்ள வில்லை. இந்தத் திசை மாற்றத்தை முதன் முதலாக உணர்ந்தவரும், உணர்த்தியவரும் தான் ராபர்ட் லூயி ஸ்டீவென்ஸன்.

ஸ்டீவென்ஸன் (1850–94) சிறந்த கலைஞர். அவருடைய எழுத்துக்களிலெல்லாம் அதைத்தான் அவர் நிர்மாணம் செய்து வந்தார். அவர் எதை எழுதினாலும் சரி, அவருடைய வசனப் போக்கிலும், மெருகிலும் அவர் பிரக்ஞை தவறாமல் இருப்பார். அதனால் தான் இதயத்திலிருந்து பூரண அழகையும் தமது வசனத்திலே அவரால் கொண்டுவர முடிந்தது. ஸ்டீவென் ஸன் தம் நவீனங்களைப் புதுப் பாதையில், 'கதை சொல்லும்' பாணியில் திருப்பினார். ஆனால், இந்தப் பாதையில் வண்டி லகு வில் குடை சாய்ந்துவிட நேரும்; அப்படி நேராமல் அவரால் பார்த் துக் கொள்ள முடிந்தது. காரணம், கையைவிட்டு நழுவி விடாத வசன நடையும், சமயறிந்து கதையை நடத்திச் செல்லும் கலை ஞானமும் தான். ஸ்டீவன்ஸனின் வசனம் வாசகனுக்குப் போதை தராது; எனினும் இனிமை தரும், சொற்களின் கனத்தையும், பொருளையும் உணர்ந்து, அவற்றைச் செட்டாக உபயோகித்து, அதிலே ஒரு எழிலை உண்டாக்குவதில் சித்தர், அவர். அநாவசிய மான வார்த்தைப் பிரயோகமோ, நாசக்கதையை நடுவே நிறுத்தி விட்டு, வம்பளக்கும் விவகாரமோ அவரிடம் கிடையாது.

இந்த இலக்கியப் புத்துணர்ச்சிக் காலத்தில் அவர் சிறுவர் பத்திரிகை ஒன்றில் புதையல் தீவு (Treasure Island) என்ற கதையைத் தொடர்ச்சியாக எழுதி வந்தார். அப்போது அதற்கு அத்தனை வரவேற்பில்லை. பின்னல், அந்நூல் புத்தக உருவில் வெளிவந்த போது அதற்குப் பேரும் புகழும் கிடைத்தது. அவருடைய கதை வெளிவந்த காலத்தில் அமெரிக்காவில் வாழ்ந்து வந்த எட்கார் அலன்போ அதன் நடையையும் பாணியையும் புகழ்ந்து சொன்னர். இதன் பிறகு,ஸ்டீவென்ஸன் பல நூல்கள் எழுதினர். அத்தனை நூல்களையும் அவர் தம் கண் முன்னலேயே புத்தக உருவில் கண்டார். அவர் எழுதிய கதைகளில் Kidnapped, Master of Ballantrae, The Wrong Box முதலியன முக்கியமானவை. டாக்டர் ஜெகில் அண்டு ஹைட் என்னும் இந்த நாவலை எழுதும் போது, அவர் தமது வழக்கமான பாதையை விட்டு விலகி, மனித குணங்களை உருவகமாகக் கற்பித்து எழுதினர். இந்தக் கதையைத் தான் அவருடைய கடைசிக் கதையாகக் கொள்ள வேண்டும். இதற்கடுத்த நூலை முடிப்பதற்கு முன் அவர் இறந்து விட்டார்.

"நான் இருவர்" என்று நான் பெயரிட்டிருக்கும் இந்தக் கதையில், ஸ்டீவென்ஸன் மனித உள்ளத்திலே கிடந்து உறுமும் அசுர குணத்தையும், தேவ குணத்தையும் ஸ்தூல வடிவங்களாக்கி நடமாட விட்டிருக்கிறர். இந்தக் கதைக்கு அவர் கையாண்டுள்ள கருத்து: மனிதன் என்பவன் ஒருவனல்ல; இருவர் என்பது தான்.

இந்தக் கருத்து அவருக்கு உதயமானதே ஒரு தனிக் கதை. ஸ்டீவென்ஸன் ஆயுள் காலம் முழுதுமே நோயாளியாகவே வாழ்ந்தார். மூளைக் கொதிப்பு நோயால் அவர் ஒரு தடவை படுத்த படுக்கையாயிருந்தார். பேசக்கூடக் கூடாது எனத் தடை. சம்பாஷணைகளெல்லாம் எழுத்து மூலந்தான். நண்பர்கள் கூட, அவரைப் பார்க்க முடியாது, அத்தனை கட்டுப்பாடு, இருட்டறையிலே, சிந்தனை சிதறிவிடாதபடி இருக்க வேண்டும் என்றெல்லாம் வைத்திய ஏற்பாடுகள். இப்படிப் பட்ட வேளையில், அவர் எண்ணத்தில் உதயமாயிற்று, இந்தக் கதை; அதுவும் ஒரு கனவில்! முதன் முதல் கதையை மூன்றே நாட்களில், மூவாயிரம்

வார்த்தைகளில் எழுதினார். நண்பர்களிடம் வாசித்துக் காட்டினார். ரசிகையான தமது மனைவியிடமும் வாசித்துக் காட்டினார், அவள் கூறிய குறையை, இவர் தமது நூலில் கண்டதாலோ, தமக்கே திருப்தி இல்லாததாலோ, அந்தக் கதையைத் தீயிலிட்டுக் கொளுத்தி விட்டார். மறுபடியும் உட்கார்ந்து எழுதிய கதை தான் நீங்கள் படிக்கப் போகும் "நான் இருவர்".

ஸ்டீவென்ஸனின் கதைகளில் இதுவே முதல் தரமானது அல்ல என்றாலும், இது தான் எந்தக் காலத்திலும் நிலைத்து நிற்கும் வலிமையும் கருத்தாழமும் பெற்றது எனச் சொல்லலாம்.

கதையைப் பொறுத்த வரையில், பழைய பாணியிலிருந்து ஓரளவே, விலகியது எனலாம். முகமூடி அணிந்து தீச் செயல்கள் புரிவதும், பிறகு நல்ல பிள்ளையாய்த் திரிவதும், கடைசியில் உண்மை வெளியாகி, கதை கொட்டு மேளத் தோடு முடிவது மான ஒரு சம்பிரதாய பாணி இருக்கிறதே, அது மாதிரி தான் இதுவும். ஆனால் இவர் கதையில் கையாண்டுள்ள கருத்தின் காரணமாக, கதையில் பிரமாதமான ஆவலுணர்ச்சியும், இறுதியில் தரும ஜெயத்துக்குப் பதிலாக, இரண்டின் மறைவும் வந்து சேர்கின்றன. கதையின் ஊடே பாவுநூல் போலப் பின்னிக் கிடக்கும் **மனோதத்துவந்தான்** கதைக்கு ஜீவன் அளித்து, சிரஞ்சீவித் தன்மை தருகிறது. மற்றப்படி; கதையில் வரும் பயங்கரம் கூட, நாம் எதிர் பார்க்கும் அளவுக்கு இல்லை ; அதற்குப் பதிலாக கதை முழுவதும் அந்த அதிசய திராவகத்தின் நெடி தான் வீசுகிறது.

மனிதனின் இந்தத் இரட்டைக் குணத்தை ஸ்டீவென்ஸன் இந்த ஒரு நூலில் மட்டும் கையாளவில்லை. வேறு நூல்களிலும் இந்த வாடை அவருக்குத் தட்டியிருந்தது. காரணம், ஸ்டீவென்ஸனின் வாழ்க்கை முழுவதிலுமே உள்ளத்துக்கும், உடல் நிலைக்கும் ஒரு விதமான தொடர்பு இருந்தே வந்திருக்கிறது. இந்தக் கதை அந்த மாதிரி ஒரு உணர்ச்சியின் மேல் எழுந்த கனவாகக் கூட இருக்கலாம்.

கதையிலுள்ள கருத்து நமது சிந்தனையைக் கவர்கிறது. இரட்டை மனித சுபாவம் நாம் நமது நாட்டுக் கதைகளிலேயே கண்டது தான். கூடுவிட்டுக் கூடு பாயும் விக்ரமாதித்தன்கதை

யில் படித்தது தான் என்றாலும் இதில் வரும் இருவித இயல்புகள் வேறுமாதிரியானவை. மனிதன் என்பவன் ஒரு உணர்ச்சிக் கலவை. காமம், காதல், குரோதம், நட்பு, பரிவு, கொடுமை, கோபம், முதலிய எத்தனையோ குணங்கள் குடிகொண்ட படைவீடு அவன். இந்தக் குணங்களை இரண்டாகப் பிரித்து விடலாம். ஒன்று தேவ குணம்; மற்றது அசுர குணம். முப்பத்து முக்கோடி தேவர்களும், அக்குரோணி வெள்ளம் போல் உள்ள அசுரர்களும் நமது இதயத்திலிருந்தே பிறக்கிறார்கள். சாமியும், சைத்தானும் ஒரே வீட்டில் தான் குடி இருக்கிறார்கள். இந்த இரண்டு குணங்களையும் தனித் தனிச் சதைப் பிண்டங்களாக்கி, அவற்றை உலவ விட்டு, ஒரு மகத்தான நாடகத்தை உண்டாக்கி விடுகிறார், ஸ்டீவென்ஸன். தீமையும் நன்மையும் ஒரே வயிற்றுப் பிள்ளைகள், அவர்களிருவரும் எதேச்சாதிகாரத்துக்காகச் சண்டையிட்டால் திலோத்தமைக்காகச்சண்டையிட்ட சுந்தோப சுந்தரர்கள் போல் மாண்டு மடிகிறார்கள். பேயைத் தட்டி எழுப்பி விட்டு, அதை அடக்க முடியாது தவிக்கும் ஒரு டாக்டரைக் கொண்டு இந்த மகத்தான கருத்தை விளக்குகிறார், ஆசிரியர்.

நன்மையின் கை எப்போதுமே ஓங்கியிருக்க வேண்டும். அப்போது தான் அழிவில்லை. தீமை திமிறியடித்து எழுந்து, நன்மை மேல், சவாரி போட எண்ணினால், தீமையின் அழிவுக்காக, நன்மை தன்னைத் தானே அழித்து, சர்வ பரித் தியாகம் பண்ணுகிறது. எனவே தருமத்தின்-நன்மையின் ஆட்சி ஓங்கியிருந்தால் தான், எதுவும் நிலைக்கும், பிடி தவறினால் அழிவுதான் ஏற்படும். இதைத்தான் நாம் இந்தக் கதையிலிருந்து ஊகித்தறிகிறோம்.

இந்த அருமையான கதையை ஆங்கிலத்தில் பேசும் படமாகப் பிடித்திருக்கிறார்கள்; பல மொழிகளில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். தமிழிலும் காலஞ் சென்ற கு. ப. ரா, இதை மொழி பெயர்த்திருக்கிறார். நானும் இதை மூலத்தை ஒட்டி கதையின் ஜீவன் நொடித்து விடாதபடி மொழி பெயர்க்க முயன்றிருக்கிறேன். இதை மொழி பெயர்க்கத் தூண்டிய நண்பர் திரு. வி. ஆர். எம். அவர்களுக்கு நன்றி.

ரகுநாதன்

# நான் இருவர்

## அந்தக் கதவின் மர்மம்

வக்கீல் அட்டர்ஸனின் முகத் தோற்றம் வக்கிரமானது; புன் சிரிப்பையே அறியாதது. அவருடைய பேச்சிலே இனிமை கிடையாது. பேசுவதும் அபூர்வம். பேசினாலும் மிகச் சங்கடத்தோடு தான் பேசுவார். உணர்ச்சி விஷயத்திலும் அவர் மட்டமானவர். நெட்டு விட்டு ஒல்லியாக வளர்ந்தவர்; மோஹன சக்தி அற்றவர். எனினும் யாரும் விரும்பக் கூடிய மனிதர். நண்பர்கள் கூட்டத்தில் என்றேனும், அவருக்கு மதுவில் ருசி தட்டி விட்டால் அவருடைய கண்களிலே அதீதமான இனிமை தென்படும். ஆனால் அவருடைய பேச்சில் அந்த இனிமை தென்படாது; மனத்திற்குப் பிடித்துப் போன மது விருந்துக்குப் பின் அந்த இனிமை அவருடைய சொல்லில் மட்டுமின்றி, செயலிலும் நன்கு வெளிப்படும். அவரைப் பொறுத்தவரையிலும் அவர் மிகவும் கண்டிப்பான பேர் வழி. குடிக்க வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்படும் போதெல்லாம் அந்த உணர்ச்சியைக் கொல்வதற்காக மட்ட ரகமான சாராயம் அருந்துவார். கூத்து என்றால் அவருக்கு கும்மாளந்தான். எனினும் இருபது வருட காலமாக எந்த நாடகக் கொட்டகையிலும் அவர் காலடி வைத்தது கிடையாது. ஆனால் பிறருடைய போக்கை அவரால் சகித்துப் போகத் தெரியும். சமயங்களில், பிறருடைய துன்மார்க்கச் செயல்களின் உத்வேகத்தைக் கண்டு புகைவது போலப் பார்ப்பார். ஆனால் ஆபத்துக் காலங்களில் அவரால் உபகாரம் உண்டே தவிர, உபத்திரவம் கிடையாது. "அவனவன் பாடு. எப்படியும் போகிறான்" என்றுதான் சொல்லுவார். இருந்தாலும், அவர்கள் கவிழ்ந்து போகுங் காலத்தில், இவர் தான் உற்ற தோழனாகவும், உதவியாளனாகவும் வந்து நிற்பார். அவர்கள் எந்த நிலையில் தம் வீட்டுக்கு வந்தாலும், அவருடைய வரவேற்பில் இம்மியளவு கூட வித்தியாசம் இருக்காது.

இந்த மாதிரி நடத்தை அட்டர்ஸனுக்குச் சுலபமானதே. ஏனெனில் அவர் எதையும் வெளிக் காட்டிக் கொள்வதில்லை. இந்த நல்ல குணத்தினுல் தான் அவருடைய நட்புடைமைகளும் நிலைத்து நின்றன. சந்தர்ப்பம் நேரும் போது தான் அடக்கமான மனிதன் தனது நண்பர் குழுவை விஸ்தரிக்கிருன்; அதுதான் ஒரு வக்கீலின் வழியும். அவருடைய நண்பர்களெல்லாம் சொந்த பந்து ஜனங்கள்; அல்லது வெகுநாள் பரிச்சயமுள்ளவர்கள். அவருடைய அன்பு படர் கொடியைப் போல் நாளா வட்டத்தில் வளர்வதுதான். ஆனுல் எல்லா விதத்திலும் இந்த அன்பு பொருந்திப் போகும் என்பதில்லை. அவருடைய தூர பந்துவான ரிச்சர்ட் என்பீல்ட் என்பவரிடம் அவருக்கு உண்டான அன்புக்கு இதுவே தான் காரணம். இந்த இரு நபர்களும் தமக்குள் ஒத்துப் போகக் கூடிய அப்படிப் பட்ட விஷயம் என்ன என்பதும், இவ்விருவரும் எப்படி நட்புரிமை கொண்டாடுகிருர்கள் என்பதும் யாருக்கும் விளங்காத புதிர். ஞாயிற்றுக்கிழமை அவர்களிருவரும் உலவச் செல்வதைப் பார்த்தவர்கள் இதைத்தான் கண்டார்கள். அவர்கள் ஒருவருக் கொருவர் பேசிக் கொள்வதில்லை. தமக்குத் தாமே சலித்துப் போனவர் போல் செல்வார்கள். எதிரே நண்பர் யாரேனும் வந்தால் உவப்போடு வரவேற்பார்கள். இருந்தாலும், இந்த ஞாயிற்றுக்கிழமைச் சந்திப்பில் மட்டும் அக்கறையோடு இருந்தார்கள். அவர்கள் வாழ்வில் இன்றியமையாத சுகம் என அதைக் கருதினுர்கள். அந்த நாளில் எந்தச் சோலியாயினும் போட்டு விட்டுப் போய் விடுவார்கள் அந்த இன்பத்தை முறிவின்றி அனுபவிப்பதற்காக! வழக்கம் போல் இவர்கள் ஒரு நாள் ரோந்து சுற்றி வரும் பொழுது, லண்டனில் ஜன நடமாட்டம் அதிகமுள்ள ஒரு பகுதியின் சந்தொன்றில் நுழைய நேர்ந்தது. அது ஒரு அமைதி நிறைந்த சின்னத் தெரு. ஓய்வு நாள் தவிர மற்ற நாட்களில் அது நல்ல வியாபாரப் பகுதி. அந்தத் தெரு வாசிகள் சீரோடு வாழ்பவர்கள் என்றும், முன்னேறுவதில் அக்கறை கொண்டவர்களென்றும் தெரிந்தது. அவர்கள் தங்களுடைய அமித லாபத்தை விளம்பரப் படுத்திக் காட்டினுர்கள். அதனுல், அந்தத் தெருவில் புன்முறுவலோடு வரவேற்கும் அங்காடிப் பெண்களைப் போல, கடைகள் வரிசையாக இருந்தன. ஞாயிற்றுக்கிழமையிலுங்கூட, அந்த இருள்

சூழ்ந்த வட்டாரத்தில் அந்த இடம் மட்டும் காட்டுத் தீ போலப் பொலிவோடு விளங்கியது. புதிதாக வர்ணந் தீட்டப் பெற்ற கதவுகளும், மெருகூட்டி மின்னும் பித்தளைப் பிடிகளும், பரிசுத்த மான சூழ்நிலையும் வழிப்போக்கர்களின் கண்ணைக் கவர்ந்து களிப்பூட்டின.

ஒரு மூலையிலிருந்து இரண்டு வீடு தள்ளிப்போனால், கீழ்புறம் இடது பக்கத்தில், ஒரு வீட்டின் முன்பாகம் தெருவில் துருத்திக் கொண்டு நின்றது. தெருவில் தலை நீட்டிக் கொண்டிருந்த அந்தக் கட்டிடம் பார்க்க விகாரமாயிருந்தது. இரண்டடுக்கு மாடி எனினும் ஜன்னலே இல்லை. கீழ்த்தட்டிலே மட்டும் ஒரு வாசற் கதவு; மேலே காரை விழுந்து ஜன்னலே யற்ற வெறுஞ் சுவர். வெகுகாலமாக அது கவனிப்பற்றுக் கிடக்கிறது என்பதை அதன் ஒவ்வொரு பாகங்களும் எடுத்துக் காட்டின. தட்டுவதற்கு வசதியோ, மணியோ அற்ற அந்தக் கதவு நிற மிழந்து பொரிந்து பொடிந்து போயிருந்தது. சோமாரிகள் அதன் கீழ் தங்கினார்கள். அதில் நெருப்புக் குச்சி கிழித்தார்கள். சிறு குழந்தைகள் அங்கே கடை பரப்பினார்கள். அதன் வளைவு களில் பள்ளிப் பையன்கள் தங்கள் கத்தியின் கூர்மையைப் பரிசோதித்திருந்தார்கள். ஒரு தலைமுறைக்கு மேலாகியும், அந்தக் கட்டிடத்தைப் பழுது பார்க்கவோ, அங்கு நடக்கும் அக்கிரமங்களைப் போக்கடிக்கவோ யாருமில்லை எனத் தோன் றிற்று.

என்பீல்டும் அட்டர்ஸனும் தெருவின் மறுபக்கத்திலிருந் தார்கள், அந்த வாசலுக்கு நேராக வரும்போது, என்பீல்ட் தமது கைத்தடியைத் தூக்கி, அந்த வீட்டைச் சுட்டிக்காட்டினார்.

"எப்போதாவது அந்தக் கதவைக் கவனித்திருக்கிறாயா?" என்று கேட்டார். அவருடைய நண்பர் 'ஆமாம்' என்றதும், "என் மனத்தில் அதைப் பற்றிய அதிசயக் கதை ஒன்று இருக் கிறது" என்றார்.

"அப்படியா?" என்று அட்டர்ஸன் குரலில் வேற்றுமை தொனிக்கக் கேட்டார்; "என்ன கதை?"

என்பீல்ட் சொல்ல ஆரம்பித்தார்.

"இப்படித்தான் ஒரு நாள் காலை மூன்று மணி வாக்கில் எங்கிருந்தோ இந்த வழியாய் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தேன். அது இருள் நிறைந்த மழைக் காலம். நான் செல்ல வேண்டிய வழியில் உள்ள விளக்குகளைத் தவிர, வேறு ஒளியே இல்லை. தெருவாசிகள் அயர்ந்து தூங்கினார்கள். தெருவெல்லாம் ஊர்வலத்துக்கு ஏற்றப்பட்ட மாதிரி விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. ஆனால் தெருவெங்கும் ஒரே அமைதி; தேவாலயத்தைப்போல், ஒருவருமற்று அனாதியாய்க் கிடந்தது. எவனாவது ரோந்து சுற்றும் போலீஸ்காரனின் காலடி யோசை கேட்காதா என்று காதும் மனமும் ஏங்கும் நிலைமை எனக்கு ஏற்பட்டது. திடீரென்று நான் இரண்டு உருவங்களைக் கண்டேன். ஒன்று, கிழக்கு நோக்கி நடையை எட்டிப்போடும் குள்ளமான மனிதன். மற்றது, தெருவில் குறுக்காகத் தன்னால் ஆனமட்டும் ஓடிச் செல்லும் எட்டு அல்லது பத்து வயதுள்ள சிறுமி. தெரு மூலையில் அவர்களிருவரும் ஒருவர்மேல் ஒருவர் மோதினார்கள். அதில் ஒன்றுமில்லை. ஆனால், அதன்பின் நடந்ததுதான் பயங்கரமானது. அந்த மனிதன் அந்தக் குழந்தையின் உடம்பின்மேல் சாவதானமாக மிதித்து நடந்தான். குழந்தை அவன் காலடியில் கதறிற்று! இதைச் சொல்லும் போது ஒன்றுமில்லை. ஆனால் அதைப் பார்த்தது, எனக்கு நரக வேதனையாயிருந்தது, அவன் மனிதனாகவே தோன்றவில்லை. நான் கத்திக்கொண்டே ஓடிப்போய், அந்த மனிதனைப் பிடரியைப் பிடித்து இழுத்து வந்தேன். அந்தக் குழந்தை கதறிய இடத்தில் அதற்குள் ஒரு கூட்டமே கூடிவிட்டது. அவன் தப்பியோட எண்ணாமல், அமைதியுடனிருந்தான். ஆனால், அவன் பார்த்த அந்தப்பார்வையில் என் உடம்பெல்லாம் குப்பென்று வியர்த்து வழிந்தது. அங்கு குழுமியிருந்தவர்கள் குழந்தையின் குடும்பத்தார்கள் தாம். சிறிது நேரத்தில், அந்தக் குழந்தை கூட்டிவரப்போன டாக்டரும் அங்கு வந்து சேர்ந்தார். குழந்தைக்கு ஒன்றும் ஆபத்தில்லை; மிகவும் பயந்துதான் போனாள். விஷயம் அத்துடன் முடிந்திருக்கலாமே என்றுதானே நினைக்கிறாய்? ஆனால் இன்னொரு அதிசயமான விஷயமிருந்தது. அந்த மனிதனைக் கண்டது முதலே அவன்மீது எனக்கு வெறுப்புத் தட்டியது. குழந்தையின் குடும்பத்தாருக்கும் அப்படியே

ஏற்பட்டது. அது இயற்கையே. ஆனால் டாக்டருடைய நிலை மட்டும் என் மனத்தில் பட்டது. அவருடைய குணங்கள் மிகவும் சர்வ சாதாரணமானவை, உணர்ச்சியற்ற சதைப் பிண்டம் அவர். ஆனால், அவரும் கூட எங்களைப் போலவே பரிதவித்தார். ஒவ்வொரு தடவையும் அந்தக் குற்றவாளியைப் பார்க்கும் போதெல்லாம், டாக்டருக்கு அவனைக் கொன்று விடலாமா என்னும் உணர்ச்சி மனத்தில் எழுவதால் அவர் முகம் வெளுப்பது தெரிந்தது. அவர் மனத்தில் என்ன இருந்தது என்பதை நானும் அறிந்தேன்; என் மனத்திலிருந்ததை அவரும் அறிந்தார். கொன்றுவிடுவது என்பது வேண்டாத விவகாரமாத லால், வேறு வழியைக் கையாண்டோம். லண்டன் மாநகர் முழுவதும் அவனுடைய பெயர் அடிபடும்படி, இந்தச் செய்கை பற்றிய வதந்தியைக் கிளப்பி விடுவோமென்றோம். அவனுக்கு சிநேகிதர்களோ செல்வாக்கோ இல்லாமல் ஆக்கிவிடுவோம் என்றோம்; இப்படி அவனைச் சூட்டோடு சூடாக நாங்கள் பய முறுத்தவே, பெண்களெல்லாம் அவனை வாய்வலிக்கத் திட்டினர். அந்த மாதிரி வெறுப்புப் பொங்கும் முகங்களை நான் கண்டதே இல்லை. ஆனால், அந்த மனிதன் உள்ளூரப் பயந்தாலும், மிகவும் அமைதியுடன் நின்று கொண்டிருந்தான். "இதை நீங்கள் இத் தனை பிரமாதப் படுத்துவது என்றால், நான் உண்மையிலேயே வலிமையற்றவன். கௌரவமுள்ள எவனும் இம்மாதிரியான காட் சியைக் காண விரும்ப மாட்டான், உங்களுக்கு எவ்வளவு வேண் டும்? சொல்லுங்கள்" என்றான். அந்தக் குடும்பத்தினருக்கு நூறு பவுன் கொடுத்தாக வேண்டும் என்றோம். இந்த நிபந்தனை யிலிருந்து அவன் நழுவத்தான் பார்த்தான். ஆனால், எங்கள் விஷமத்துக்கு அஞ்சி, ஒரு மட்டும் ஒத்துக்கொண்டான். பணம் வரவேண்டியதுதான் பாக்கி. அவன் எங்களை எங்கே கூட்டிச் சென்றான் என்று நினைக்கிறாய்? இதே கதவுக்குத் தான். பையி லிருந்து, ஒரு சாவியை எடுத்துக் கதவைத் திறந்து உள்ளே சென் றான். சிறிது நேரத்தில் ரொக்கமாகப் பத்துப் பவுன்களையும், மீதத்திற்கு கோட்ஸ் பாங்குக்கு ஒரு செக்கையும் கொண்டு வந்து கொடுத்தான். அந்தச் செக்கில் கையெழுத்திட்டிருந்தவர் பெயர் மிகவும் பிரபலமான பெயர்; எனினும் நான் அதைச் சொல்ல முடியாது. அந்தக் கையெழுத்து மட்டும் கள்ளக் கையெழுத்தாய்

இல்லாவிட்டால், அதை மெச்ச வேண்டியது தான். அந்த மனிதனிடம், அவனுடைய செயல் முழுதுமே மர்மமாயிருப்பதாகத் தெரிவித்தேன். இந்த மாதிரியான அகால வேளையில், எந்த மனிதனும் வேறொருத்தன் கையெழுத்திட்ட நூறு பவுன் செக் ஒன்றைத் தருவது அசாத்தியமானது என்று கூறினேன். ஆனால் அவனோ அமைதியுடனேயே பதில் சொன்னான். "ஏன் இந்தச் சந்தேகம்? வேண்டுமென்றால் காலையில் பாங்கெல்லாம் திறக்கும் வரையிலும் உங்களோடு இருந்து, நானே இதைப் பணமாக்கித் தருகிறேன்," நாங்கள் எல்லோரும் (டாக்டர், குழந்தையின் தந்தை, அந்த மனுஷன், நான் உட்பட) மீதி இரவை என் வீட்டில் போக்கினோம். விடிந்து, சிற்றுண்டியானதும் நாங்கள் எல்லோருமாக பாங்கிக்குச் சென்றோம். நானே தான் செக்கைக் கொடுத்தேன். அது கள்ளக் கையெழுத்தாயிருக்குமோ என்று கூடக் கூறினேன். ஆனால் அது தான் இல்லை. அது மிகவும் நாணயமான செக்!"

"ச்சூ ச்சூ" என்று சூள் கொட்டினார் அட்டர்ஸன்.

"நான் நினைப்பது போலவே நீயும் நினைப்பது எனக்குப் புரிகிறது. அது மிகவும் மோசமான கதைதான். அந்த மனிதனோடு யாருமே தொடர்பு கொள்ள முடியாது—அவன் படுபாவி! செக்கில் கையெழுத்திட்டிருந்த மாராசனோ கௌரவமும் கண்ணியமும் நிறைந்தவர். நன்மை என்று சொல்லிச் செய்யும் தருமவான்களில் ஒருவர். ஒரு வேளை, இந்த மனிதன் அவரைப் பயமுறுத்தியே, இந்தச் செக்கைப் பெற்றிருக்க வேண்டும். ஒரு வேளை அவருடைய இளமை ரகசியம் ஏதேனும் இவனிடம் சிக்கியிருக்கும். அதற்காக அவர் இவனுக்கு உதவுகிறார். ஆதலால்தான் இந்த வீட்டையே நான் பயங்கர வீடு என்கிறேன்," என்று சொல்லிவிட்டு யோசனையில் ஆழ்ந்தார் என்பில்ட்.

அட்டர்ஸன் திடீரெனக் கேட்ட கேள்வி என்பீல்டை நினைவுக்கிழுத்தது. "செக்கில் கையெழுத்திட்டவர் இங்கு தான் வசிக்கிறார். அது உனக்குத் தெரியாதா?"

"இருக்கலாம், அவர் விலாசத்தை மட்டும் பார்த்திருக்கிறேன், வேறு எங்கேயோ வசிக்கிறார்" என்று பதிலளித்தார் என்பீல்ட்.

"இந்த வீட்டைப் பற்றி வேறொன்றையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வில்லையோ?"

"இல்லை, எனக்கே வெட்கமாயிருந்தது" என்று பதில் வந்தது. "கேள்வி கேட்பதையே நான் மிகவும் உணர்ந்து கேட்பவன். கேள்வியும் பதிலும் சமயங்களில் விரும்பத்தகாத பயன்களைத் தந்து விடுகின்றன. நீ ஒரு கேள்வி கேட்பதென்பது, மலையுச்சியிலிருந்து கொண்டு, ஒரு கல்லை உருட்டித் தள்ளுவது போலத்தான், அந்தக் கல் தனது வழியிலுள்ள கற்களையெல்லாம் இழுத்து உருட்டிக் கொண்டு ஓடி வருகிறது. திடீரென அந்தக் கல் ஒரு அப்பாவியின் தலைமேல் விழுகிறது. அவன் சாகிறான். அவன் குடும்பம் பெயர் இழக்கிறது. அதனால் தான் நான் கேள்வி கேட்பதில்லை என்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறேன். விஷயம் ஓரளவு ஏறுக்கு மாறாயினும், அதைப் பற்றிக் கேள்விகள் கேட்பதே இல்லை."

"நல்ல கொள்கைதான்" என்றார் வக்கீல்.

"ஆனால் அந்த இடத்தைப்பற்றி நானாக ஓரளவு தெரிந்து வைத்திருக்கிறேன். அது வீடு மாதிரியே இல்லை. இந்தக் கதவைத் தவிர்த்து வேறு கதவும் இல்லை. அதன் வழியாக யாரும் போக வரக் காணோம். என்றைக்காவது அந்தப் பேர் வழி மட்டும் வருவான். முதல் மாடியில் முன்புறமாக மூன்று ஜன்னல்கள் இருக்கின்றன. கீழ்த்தட்டில் அதுவும் தான் கிடையாது. ஜன்னல்களெல்லாம் எப்போதும் மூடிக் கிடந்தாலும், சுத்தம் செய்யப்பட்டிருக்கும். ஒரு புகைக் கூண்டும் உண்டு; அதன் வழியாய்ப் புகையும் போய்க் கொண்டிருக்கும். ஆதலால், யாராவது இதில் குடியிருக்கத்தான் செய்கிறார்கள். எனினும் நிச்சயமாய்த் தெரியவில்லை. ஏனெனில் இந்த வட்டாரத்தில் கட்டிடங்களெல்லாம் நெருக்கமாக இருப்பதால், ஒரு கட்டிடத்தின் ஆரம்பம் எங்கே, அதன் முடிவு எங்கே என்பதையெல்லாம் கண்டு பிடிப்பது சிரமமாயிருக்கிறது."

இருவரும் சிறிது நேரம் மௌனமாகவே நடந்தார்கள். பிறகு அட்டர்ஸன் என்பீல்டிடம் "என்பீல்ட், உன் கொள்கை நல்ல கொள்கைதான்" என்றார்.

"அப்படித்தான், நானும் நினைக்கிறேன்" என்று பதிலளித்தார் என்பீல்ட்.

"இருந்தாலும், ஒரு விஷயம். அந்தக் குழந்தையை மிதித்துச் சென்றவனின் பெயரை அறிய விரும்புகிறேன்"

"சரி, அதைச் சொல்வதனால் என்ன நேர்ந்து விடப் போகிறது? அவன் பெயர் ஹைட்"

"உம், பார்வைக்கு அவன் எப்படி இருந்தான்?"

"அவனைப் பற்றிச் சொல்வது சுலபமான காரியமல்ல. அவனுடைய தோற்றத்திலேயே ஏதோ கோளாறு இருந்தது—மனத்திற்குப் பிடிக்காத ஏதோ ஒன்று. அத்தனை வெறுப்பூட்டும் எந்த மனித உருவத்தையும் நான் பார்த்ததில்லை, அது ஏன் என்றும் தெரியவில்லை. அவனுக்கு எங்கேனும் அங்கஹீனம் ஏற்பட்டிருக்க வேண்டும். அங்கஹீனம் இருப்பதென்னவோ வாஸ்தவந்தான். ஆனால், எங்கு என்பதை என்னால் உணர முடியவில்லை. அவன் ஒரு அமானுஷ்யப் பிறவி, இருந்தாலும் அவன் எவ்விதத்தில் மாறுபட்டவன் என்பதை என்னால் சொல்ல இயலவில்லை, இதைப்பற்றி என்னால் எதுவுமே சொல்ல முடியாது. அவன் எப்படியிருந்தான் என்பதைச் சொல்லவே இயலாது. என்னுடைய ஞாபக சக்தியைக் கூடக் குறை சொல்ல முடியாது. இந்த க்ஷணம் கூட அவன் உருவை நான் கற்பனை பண்ணிக் காண முடியும்."

அட்டர்ஸன் மௌனமாய் மேலும் நடந்தார். ஆழ்ந்த யோசனையிலிருந்த அவர், "சாவி கொண்டு தானே கதவைத் திறந்தான்?" என்று கேட்டார்.

"அட, அப்பாவி நண்பனே......" என்று ஆச்சரியத்துடன் இழுத்தார் என்பீல்ட்.

"எனக்கும் தெரியும். இது விசித்திரமாகத் தோன்றுமென்று எனக்கும் தெரியும். எப்போது அந்த இன்னொரு நபரின் (செக்

கில் கையெழுத்திட்டவர்) பெயரை நான் கேட்கவில்லையோ, அப்போதே அந்தப் பெயர் எனக்கும் தெரியும் என்றுதானே அர்த்தம். ரிச்சர்ட், உன் கதையில் ஏதேனும் தவறு இருந்தால் அதைத் திருத்திக் கொள்வது நல்லது.''

"முன்பே எச்சரித்திருக்கக் கூடாதா? நானும் மிகவும் அளந்தாற் போல்தான் சொல்லியிருக்கிறேன், அவனிடம் சாவி இருந்தது; இன்னும் இருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன் கூட, அவன் அதை உபயோகிப்பதைக் கண்டேன்."

அட்டர்ஸன் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்; பேசவில்லை. பிறகு என்பீல்டே வாய்திறந்தார். "பார்த்தாயா? ஒன்றும் பேசக் கூடாதென்பதற்கு இந்தச் சந்தர்ப்பமே உதாரணம். இனிமேல் இந்த விஷயம் பற்றியே பேசுவதில்லை என்று முடிவு செய்து கொள்வோமா?''

"ரொம்பவும் நல்லது, ரிச்சர்ட் உன்னைப் பாராட்டுகிறேன்" என்றார் அட்டர்ஸன்.

## ஹைடைத் தேடி வேட்டை

அன்று மாலை அட்டர்ஸன் எதிலும் புத்தி செல்லாமல் வீடு திரும்பினார். அன்றிரவு அவருக்குச் சாப்பாடு செல்லவில்லை. ஞாயிற்றுக் கிழமையன்று, இரவு சாப்பாடானதும் கணப்புக் குழியண்டை உட்கார்ந்து ஏதேனும் ஒரு வரட்டு மதநூலை புரட்டிக் கொண்டிருப்பார். பக்கத்துத் தேவாலய மணி பன்னிரண்டு அடித்து ஓய்ந்து விட்டால், புத்தகத்தை மூடிவிட்டுப் படுக்கப் போவது அவர் வழக்கம். அன்றிரவோ, சாப்பாட்டரங்கு ஓய்ந்ததும் அவர் விளக்கை எடுத்துக் கொண்டு தமது அறைக்குள் சென்றார். அங்குள்ள இரும்புப்பெட்டியைத் திறந்து அதனுள்ளிருந்த கள்ள அறையிலிருந்து தஸ்தாவேஜ் ஒன்றை எடுத்தார். அதன் உறையில் 'டாக்டர் ஜெகிலின் உயில்' என்று எழுதியிருந்தது. கவலை நிறைந்த இதயத்துடன் அதைப் படிக்க உட்கார்ந்தார். அந்த உயில் ஜெகிலின் சொந்தக் கைப்பட எழுதப்பட்

டிருந்தது. ஏனெனில் அட்டர்ஸன் அந்த உயிலின் பாதுகாப்பை மட்டும் ஏற்றுக் கொண்டாரே ஒழிய, அதை எழுதி முடிக்க அவர் உதவ மறுத்துவிட்டார்.

"ஹென்றி ஜெகில் எம். டி., டி. ஸி. எல்., எல். எல். டி., எப். ஆர். எஸ்., அவர்கள் காலத்துக்குப் பின் அவருடைய சொத்துக்கள் யாவும் அவருடைய ஆப்த நண்பரும், உபகாரியுமான எட்வர்ட் ஹைடுக்குப் பாத்தியதை யாகச் சேர வேண்டியது" என்பதே உயிலின் சாராம்சம். மேலும், அதில் "ஜெகில் மறைந்து போனாலோ,மூன்றுமாதகாலம் எந்தவிதத் தகவலுமின்றிக் காணாமற் போனாலோ எட்வர்ட் ஹைட் உடனடியாய் ஜெகிலின் சொத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டியது" என்றும், "ஜெகிலின் வீட்டிலிருந்தோருக்கு சில்லரையாய்க் கொடுக்க வேண்டியதைத் தவிர, வேறு எந்த விதக் கொடுக்கல் வாங்கலும் கிடையாது" என்றும் அதில் கண்டிருந்தது. இந்த உயில் வக்கீல் அட்டர்ஸனின் கண்களை நீண்ட காலமாய் உறுத்திக் கொண்டிருந்தது. வக்கீல் என்ற முறையிலும் அது அவருக்குப் பிடிக்கவில்லை. சம்பிரதாய மரபுகளைத் தழுவிச் செல்லும் மனிதன் என்ற முறையிலும் இந்த விளையாட்டுத் தனம் அவருக்குப் பிடிக்கவே யில்லை. இந்நாள் வரையிலும் ஹைட் என்ற பேர்வழியை அவர் அறியாதிருந்தார். அதுவே அவருக்குக் கோப மூட்டியிருந்தது. இப்போது யாரென்று தெரிந்தவுடன் கோபம் அதிகரித்தது. ஆசாமியைப் பற்றித் தெரியாத போதே அவருக்கு அவன் மீது வெறுப்புத்தான். இப்போது அவனைப் பற்றித் தெரிந்து கொண்ட பிறகு வெறுப்புணர்ச்சி மேலோங்கியது. அவரது கண் முன்னால் மூடுபனிபோல் கவிந்திருந்த இடத்தில், ஹைட் பைசாசம் போல் தோற்றினான்.

"இது பைத்தியக்காரத்தன மெனஎ நினைத்தேன். ஆனால், மானபிமானத்துக்குப் பயந்து செய்த காரியம் இது என்றே உணர்கிறேன்" என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டு, அந்த விபரீத உயிலை மீண்டும் அந்தக் கள்ள அறைக்குள் வைத்தார்.

விளக்கை அணைத்து விட்டு, நீல அங்கியை எடுத்துப் போட்டுக் கொண்டு, காவண்டிஷ் ஸ்கொயரிலுள்ள தமது நண்பர் டாக்

டர் லான்யன் வீட்டுக்கு நடந்தார். லான்யன் நல்ல வைத்தியர்; பல நோயாளிகள் அவரிடம் வருவார்கள். "இந்த விஷயம் பற்றித் தெரிந்தவர் ஒருவர் உண்டென்றால், அது லான்யன் தான்" என்று அட்டர்ஸன் நினைத்தார்.

லான்யனுடைய பரிசாரகனுக்கு அட்டர்ஸனைத் தெரியுமாதலால் அவரை வரவேற்று, காலத்தைக் கடத்தாமல், லான்யன் தனியாக மது அருந்திக் கொண்டிருக்கும் அறைக்குள் அழைத்துச் சென்றான். அவர் ஒரு சுமுகமான ஆசாமி. திடகாத்திரமானவர். எனினும் அதற்குள் அவருக்கு நறை தட்டி விட்டது. முகம் சிவந்திருக்கும். பேச்சும் நடத்தையும் கணீரென இருக்கும். அட்டர்ஸனைக்கண்டதும், நாற்காலியிலிருந்து துள்ளியெழுந்து இருகரங்களையும் நீட்டி அவரை வரவேற்றார் லான்யன். அந்த வரவேற்பில் சாகஸமும் நடிப்பும் இருந்தது; எனினும் உணர்ச்சியும் அவரை வரவேற்றது. இருவரும் வெகு காலத்துச் சிநேகிதர்கள். பள்ளிக் கூடத்திலும், கல்லூரியிலும் ஒன்றாய்ப் படித்தவர்கள். ஒருவரை ஒருவர் மதித்து நடப்பவர்கள். மேலும், அவர்கள் பரஸ்பரம் ஒருவர் கூட்டுறவை மற்றவர் அனுபவித்து இன்புற்றார்கள்.

சில நிமிஷம் வம்பளந்த பிறகு வக்கீல், தமது மனத்தைக் குடையும் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார்.

"லான்யன், நாமிருவருந்தான் ஹென்றி ஜெகிலுக்கு நெருங்கிய பழைய நண்பர்கள் இல்லையா?"

"இளைஞர்களான நண்பர்கள் இருந்தாலோ? அது சரி. அவனுடைய நண்பர்கள் நாம்தான். அதற்கென்ன? இப்போதெல்லாம் அவன் என் கண்ணில் படுவதுகூட இல்லை."

"அப்படியா? உங்கள் இருவருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்குமென்றல்லவா நினைத்தேன்?"

"இருந்தது. ஆனால், நானும் அவனும் நெருங்கிப் பழகியே பத்து வருடங்களுக்கு மேலாகி விட்டது. அவன் போக்கே மாறி விட்டது. புத்தி மாறிப்போய்விட்டது. எனினும் பழைய தொடர்பின் காரணமாக அவன் மீது எனக்கு அக்கறை இருக்கத் தான் செய்கிறது. அவனைக் காணுவதே இப்போது அபூர்வமாகி விட்டது. இந்த விஞ்ஞான ஆராய்ச்சியின் அரைகுறைப்

படிப்பு எந்த நண்பர்களிடையேயும்—அவர்கள் டாமனும் பிதியாஸுமாகவே இருக்கட்டுமே—கசப்பூட்டி விடும்.''

இந்த உணர்ச்சியுள்ள பேச்சு அட்டர்ஸனுக்கு ஓரளவு நிம்மதி தந்தது. 'இவர்கள் இருவரும் சாஸ்திர சம்பந்தமாக ஏதோ அபிப்பிராய பேதம் கொண்டிருக்கிறார்களென்று' தான் அவர் நினைத்தார். உணர்ச்சி வசப்படாத மனிதராகையால். "ஒன்றும் மோசமாகப் போய்விட வில்லையே'' என்று கேட்டார். லான்யன் தன்னிலைக்கு வருவதற்கு அவகாசமளித்துத் தான் கேட்க நினைத்த அந்தக் கேள்வியைப் போட்டார், அட்டர்ஸன்.

"அவருடைய பராமரிப்பிலுள்ள ஒரு ஆசாமி—ஹைட் என்பவரை, உங்களுக்குத் தெரியுமா?''

"ஹைடா? அம்மாதிரிப் பேரை இதுவரை நான் கேள்விப் பட்டதே யில்லையே!''

அன்றிரவு வக்கீல் வீட்டுக்குத் திரும்பி வரும்போது கிடைத்த தகவல் இதுதான். வீட்டுக்கு வந்து படுக்கையில் படுத்து விடியும்வரை அமைதியற்றுப் புரண்டு கொண்டிருந்தார். இருளின் வலிமையில் அவர் மனத்தைச் சுற்றி, பற்பல கேள்விகள் வியூக மிட்டன. மனம் உளைந்தது.

அவரது வீட்டுக்கு அருகிலுள்ள தேவாலயத்தில், மணி ஆறு அடித்தது. எனினும் அவர் அந்தப் பிரச்னையைத்தான் அப்போதும் ஆராய்ந்து கொண்டிருந்தார். இதுவரை அந்தப் பிரச்னை அவரது அறிவுணர்ச்சியை மட்டும் பாதிப்பதாய் இருந்தது. இப்போதோ அவருடைய கற்பனையே அதில் ஈடுபட்டு அதற்கு அடிமையாயிற்று. படுக்கையில் படுத்து, திரையிடப் பட்ட அந்த அறையின் இருளிலே மனத்தைப் போக்கிய அட்டர்ஸனின் முன், என்பீல்ட் சொன்ன அந்தக் கதை திரைப் படம்போல் ஓடிக்கொண்டிருந்தது... இருள் சூழ்ந்த ஒரு நகரம். அந்த நகரம் முழுவதும் ஒரே ஒளிமயம். எங்கும் விளக்குகள். ஒரு மனித உருவம் வேகமாக நடந்து வருகிறது. ஒரு குழந்தை டாக்டரைப் பார்த்துவிட்டு ஓடோடியும் வருகிறது. இருவரும் சாடி மோதுகிறார்கள். பிறகு அவன் அந்தக் குழந்தையின் அலறலைச் சிறிதும் கவனியாமல் அதை மிதித்துச் செல்கிறான்!... அல்லது, தனது நண்பன் ஜெகில் அந்த மாளிகையில், சுகமாக இன்

பக் கனவுகள் கண்டவாறே தூங்குகிருன். அறைக் கதவு திறக்கப்படுகிறது. படுக்கையின் திரைகள் விலக்கப்படுகின்றன. ஒரு மனிதன் அவரது நண்பனை உசுப்பி எழுப்புகிருன். அந்த மனிதனுக்கோ அதிகாரம் கையிலிருந்தது. அவன் சொல்லுவது போலெல்லாம் நண்பன் எந்த அவவேளையிலும் நடந்து தான் தீரவேண்டும்! இந்த இரண்டு உருவங்களும், அந்த இரவு முழுவதும் அட்டர்ஸன் முன்தோன்றித் தோன்றி அவரை அலட்டின. சிறிது கண்ணயர்ந்தாலும், அந்த உருவம் ஜனங்கள் உறங்கும் வீடுகளுக்குள் கள்ளத்தனமாகப் பையப் பைய நுழைவது போலவும், விளக்கேற்றப்பட்ட தெருக்களின் மூலமாக, ஒவ்வொரு தெரு மூலையிலும் ஒரு குழந்தையைக் காலடியில் போட்டு மிதித்து, அதன் அலறலைக் காதில் வாங்காமல் சென்று கொண்டிருப்பது போலவும் தோன்றும். எனினும் அந்த மனிதனின் முகத்தை அவரால் ஊகித்து உணர்ந்து கொள்ள முடியவில்லை. கனவிலுங்கூட, அதற்கு முகம் இல்லை. உருவத் தெளிவற்றுத் தெரியும் அந்த முகம் அவர் கண் முன் கரைந்து மறைந்து போயிற்று. இதனால் அட்டர்ஸனுக்கு ஹைடின் உண்மையான முகத்தைத் தீர்க்கமாகப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் பெருகி வளர்ந்தது, வலுத்தது. ஹைடை மட்டும் ஒரே ஒரு தடவை நேருக்கு நேராய்ப் பார்த்து விட்டால், அவர் மனத்திலுள்ள இந்த மர்மம்—பாரம் ஓரளவு தணியலாம் அல்லது முற்றுமே மறையலாம். சமயங்களில் சில மர்மங்கள் தீர்க்கமான ஆராய்ச்சிக்குப் பின் மடிந்து போவதுண்டு என்று அவர் நினைத்தார். அதனால் தனது நண்பருக்கு ஏற்பட்ட இந்த அதிசயமான பற்றுதலின்—பந்தத்தின் (எப்படிச் சொன்னாலும் சரி) அந்த உயிலிலுள்ள திடுக்கிடும் ஷரத்துக்களின் காரணத்தைக் கண்டுபிடிக்கவும் கூடும். எப்படியும் அது பார்க்கப்பட வேண்டிய முகந்தான். இரக்கம் என்ற ஒரு பொருள் இலாத அரக்க முகம். எதையும் கூர்ந்து கவனியாத என்பீல்டுக்கே வெறுப்புணர்ச்சியை நிரந்தரமாக்கிய அந்த முகம்—அதைக் கட்டாயம் பார்த்துத்தானாக வேண்டும்!

அந்தநாள் முதல் அட்டர்ஸன் அந்தத் தெருவிலுள்ள அந்த வீட்டின் முன்னாலேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தார். காலை

யில் ஆபீஸ் நேரத்துக்கு முன்னும், வியாபாரம் மும்முரமாய் இருக்கும் மத்தியான வேளையிலும், இரவில் மங்கிய நிலவின் ஒளி மூட்டத்திலும், இருளிலும், ஒளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும் அவர் அந்த இடத்திலே எப்போதும் தென்பட்டுக் கொண்டிருந்தார்.

* "அவன் பேர் 'ஹைடா'க இருந்தால் (ஒளிபவன்) நான் 'ஸீக்'காக (தேடுபவன்) இருக்கிறேன்" என்று நினைத்துக் கொண்டார் அவர்.

கடைசியாக அவர்பட்ட பிரயாசை பலனளித்தது. ஒரு குளிரற்ற இரவு, ஆகாயத்தில் மெல்லிய பனிமூட்டம்; தெருக்கள் நாட்டிய அரங்கைப்போல் சுத்தமாயிருந்தன. ஆடாது அசையாது எரிந்த விளக்குகள் ஒரே மாதிரியான ஒளியும் நிழலுமாய்க் கோடிட்டுக் காட்டின. இரவு பத்து மணியானதும் கடைகள் சாத்தப்பட்டன. தெருவில் அமைதி குடிகொண்டது. சுற்றுப்புற நகரத்தின் இரைச்சல் கூடத் தேய்ந்து விட்டது. மெல்லிய சத்தமும் கூட, வெகு தூரம்வரை கேட்டது. வீட்டுக்குள் செய்யும் வேலைகளின் சத்தமும் தெருவில் வந்து கேட்டது. தெருவில் எவனுவது நுழைந்தாலும், அவனுடைய காலடிச் சத்தம் தூரத்தில் வரும்போதே கேட்டது. அட்டர்ஸன் தமது வழக்கமான இடத்துக்கு வந்த சிறிது நேரத்தில், யாரோ ஒருவன் மெதுவாக நடந்து வருவது காதில் பட்டது. நகரத்தின் அகண்டமான முணு முணுப்புக்கும், இரைச்சலுக்கும் இடையே ஒரு மனிதனின் காலடிச் சத்தம் கேட்பது, அவருக்கு இத்தனை நாட்களில் பழகிப் போன விஷயம்தான். ஆனல் அந்த இரவில் கேட்ட காலடி ஓசை அவருடைய கவனிப்பை ஏனே அத்தனை தூரம் இழுத்தது. வெற்றி நிச்சயமென்ற நம்பிக்கை மனத்தில் தோன்ற, அவர் ஒதுக்குப் புறமாக ஒதுங்கி மறைந்து நின்ருர்.

காலடியோசை விரைவாக நெருங்கிற்று. தெருமூலை கடந்தவுடன் ஓசை அதிகமாயிற்று. வக்கீல் எட்டிப் பார்த்த போது, அவரால் அந்த நபரை நன்ருகப் பார்க்க முடிந்தது. சிறிய உருவம்; சாதாரண ஆடை அணிகள். அத்தனை தூரத்தி

* Hide : ஒளிதல். Seek : தேடுதல்.

விருந்தும் கூட அவனுடைய பார்வை அட்டர்ஸனை உலுப்பியது. ஆனால் அந்த மனிதனோ தெருவைக் குறுக்காகக் கடந்து வாசலுக்கு வந்தான். வந்தவுடன் சர்வ சாதாரணமாய் வீட்டுக்கு வருபவன் போல, பையிலிருந்து சாவியை எடுத்தான்.

அட்டர்ஸன் தமது இடத்திலிருந்து வெளிவந்து, அவனுடைய தோளைப் பற்றினார். "தாங்கள்தானே, மிஸ்டர் ஹைட்?" என்று கேட்டார்.

ஹைட் திடுக்கிட்டுப்போய்ச் சீறிக்கொண்டே பின் வாங்கினான். அவனுடைய பயமோ, அந்த ஒரு நிமிஷத்தோடு சரி. மறு நிமிஷம் அவன் வக்கீலை நேருக்கு நேர் பார்க்காமல், "ஆமாம், அதற்கென்ன உங்களுக்கு?" என்று சாவதானமாகச் சொன்னான்.

"நீங்கள் உள்ளே போகப் போவதைப் பார்த்தேன். நான் டாக்டர் ஜெகிலின் வெகு காலத்து நண்பன்—காண்ட் தெருவிலிருக்கும் அட்டர்ஸன். தாங்கள் என் பெயரைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். தங்களைச் சாவதானமாகச் சந்தித்துப் பேச ஆசை. சௌகரியப்படுமென நினைக்கிறேன்" என்றார்.

"டாக்டர் ஜெகில் வீட்டிலில்லையே" என்று கூறிக்கொண்டே, சாவித் துவாரத்தை வாயில் வைத்து சீட்டி ஊதினான் ஹைட். பிறகு, நிமிர்ந்து பாராமல், "என்னை உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"பதிலுக்கு, தாங்கள் ஒரு உபகாரம் செய்ய முடியுமா?"

"தாராளமாக—என்ன அது?"

"தங்கள் முகத்தை நான் பார்க்கலாமா?"

முதலில் ஹைட் தயங்குவது போல் தோன்றினான். பிறகு திடீரென முகத்தை அநாயாசமாக முன்புறம் திருப்பினான். இருவரும் ஒருவரை ஒருவர் அசையாமல் சில நிமிஷ நேரம் பார்த்தனர்.

"போதும். தங்களை இனிமேல் அடையாளம் கண்டு கொள்வேன். சமயத்துக்கு உதவும்" என்றார் அட்டர்ஸன்

"ஆமாம். நாம் சந்தித்ததும் நல்லது தான். என் விலாசத்தையும் தருகிறேன்" என்று ஹைட் கூறிவிட்டு, ஸோஹோவில் ஏதோ ஒரு தெருவின் வீட்டு நம்பரைக் குறிப்பிட்டான்.

"ஒருக்கால் அவனும் அந்த உயில் விவகாரமாய்த்தான் எண்ணிக்கொண்டிருந்திருப்பானோ?" என்று அட்டர்ஸன் நினைத்தார். எனினும் அவன் விலாசத்தைப் பெற்றுக்கொண்டதோடு வாயடங்கி விட்டார் வக்கீல்.

"சரி, என்னை எப்படி அடையாளம் கண்டீர்கள்?" என்று கேட்டான் ஹைட்.

"அங்க அமைப்பிலிருந்து"

"யார் சொன்னது அங்க அமைப்பு?"

"நம் இருவருக்கும் தெரிந்த பொது நண்பர்களிடமிருந்து"

"பொது நண்பர்களா? யார் அவர்கள்?"

"ஜெகில் என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்."

"அவர் சொல்லவில்லை. நீங்கள் பொய்யும் பேசுவீர்கள் என்று நான் நினைக்கவில்லை" என்று கடுமையாகச் சொன்னான் ஹைட்.

"தாங்கள் முறை தவறிப் பேசுகிறீர்கள்."

ஹைட் காட்டுத்தனமாய் உரக்கச் சிரித்தான். மறு நிமிஷம் விறுவிறென்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து மறைந்தான்.

ஹைட் சென்றதும் வக்கீல் அமைதியிழந்து அப்படியே சிலைபோல நின்றார். பிறகு தெருவில் மெதுவாக அடியெடுத்து வைத்து நடக்க ஆரம்பித்தார். இரண்டு அடிக்கு ஒரு தடவை அப்படி அப்படியே நின்று, மனக் குழப்பம் ஏற்பட்ட மனிதனைப் போல் நெற்றியைப் பிடித்தவாறே நின்றார். நடந்து செல்லும் போது அவர் தமக்குத் தாமே அலசிக்கொண்டிருந்த அந்தப் புதிரை அவ்வளவு லேசில் அவரால் விளக்கி விட முடியவில்லை. ஹைட் குள்ளமாயும், வெளுத்தும் இருக்கிறான். வாய் விட்டுச் சொல்ல முடிந்த அங்கஹீனம் இல்லை; எனினும் மொத்

தத்தில் ஒரு குறைபாடு இருப்பதாகவே தோன்றுகிறது. அவனுடைய புன்னகை அருவருப்பைத் தந்தது. அவன் பேச்சில் கோழைத்தனமும், தைரியமும் கலந்த கொலைகாரத்தனம் இருந்தது. உடைந்து கரகரக்கும் குரலோடு அவன் முனகிப் பேசும் பேச்சு—எதுவும் அட்டர்ஸனுக்கு அடியோடு பிடிக்கவில்லை. ஆனால், இத்தனையும் ஒன்று சேர்ந்தாலுங் கூட, அவர் மனத்தில் எழுந்த அருவருப்புக்கும் பீதிக்கும் காரணம் கூறிவிட முடியவில்லை. "ஏதோ வேறு ஒரு காரணம் இருக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டார். "வேறு ஏதோ ஒன்றுதான். ஆனால், அதன் பெயரை என்னால் கூற முடியவில்லையே. கடவுளே! இவன் மனிதன் போலவே இல்லையே! குகைகளில் வசித்து வந்த ஆதி மனிதன் என்று சொல்லலாமா? டாக்டர் பெல்லைப் பற்றிய அந்தப் பழைய கதை விவகாரமோ? அந்தத் துராத்மாவின் உள்ளொளியும் ஜ்வாலைதானோ இப்படி உடம்பிலும் தாவி, அவன் உருவத்தை மாற்றியிருக்கிறதோ? கடைசியாக, நான் நினைத்தமாதிரிதான். அட, அப்பாவி ஜெகில்! இந்தப் பிசாசு மகனை எப்படியடா சிநேகம் பிடித்தாய்?"

அந்தத் தெருமூலையை ஒட்டிச் சில பழையகாலத்துக் கட்டிடங்கள் கூட்டமாயிருந்தன. அவற்றில் பல க்ஷீணமடைந்திருந்தன. மாடியும், கீழ்த் தட்டிலுள்ள அறைகளும், தராதரமின்றி எல்லா மனிதர்களுக்கும் வாடகைக்கு விடப்பட்டிருந்தன. படம் வரைபவர்கள், சிற்பிகள், உதவாக்கரை வக்கீல்கள். சில்லரைக் கமிஷன் ஏஜெண்டுகள் — இப்படிப் பல ரகம். மூலையை அடுத்த இரண்டாவது கட்டிடம் மட்டும் ஒரு தனி மனிதனின் ஆதிக்கத்திலிருந்தது. வீட்டின் முகப்பே வீட்டின் சீரையும் சிறப்பையும் எடுத்துக் காட்டிற்று. அந்த வீட்டில் அப்போது விசிறி விளக்கு ஒளியைத் தவிர வேறு வெளிச்சம் இல்லா விட்டாலுங் கூட, அட்டர்ஸன் அந்த வீட்டின் முன் நின்று கதவைத் தட்டினார். நல்ல உடை தரித்த, கிழட்டு வேலைக்காரன் ஒருவன் கதவைத் திறந்தான்.

"டாக்டர் ஜெகில் இருக்கிறாரா, பூல்?" என்று கேட்டார் அட்டர்ஸன்.

"பார்க்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே, அட்டர்ஸனை ஒரு பெரிய ஹாலுக்குள் அழைத்துச் சென்றான். தாழ்த்தி

வேயப்பெற்ற மேல் தளமும், கீழே வரிசையாகத் தளவரிசையும் போடப்பட்டிருந்தது. கணப்புக் குழியில் நெருப்பு நன்றாக எரிந்தது. அறையில் எங்கும் உயர்ந்த சாதி மரத்தில் செய்த பீரோக்கள் இருந்தன. "கணப்பின் பக்கம் இருக்கிறீர்களா? அல்லது சாப்பாட்டு அறையில் விளக்கேற்றட்டுமா!" என்று கேட்டான் வேலைக்காரன்.

"இங்கேயே இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, கணப்பின் அருகே நெருங்கி உட்கார்ந்தார். தன்னந் தனியராய் அவர் அமர்ந்திருக்கும் இந்த ஹால் அவருடைய நண்பருக்கு மிகவும் பிடித்தமானது. லண்டன் மா நகர் பூராவிலும் இத்தனை சுகந் தரும் வேறு அறை காணக் கிடைக்காது என்று அட்டர்ஸனே சொல்லிக் கொள்வார். ஆனால், இன்றோ அவருடைய ரத்தம் உள்ளூரக் குளிர்ந்து ஓடியது. ஹைடின் முகம் அவருடைய நினைப்பை அழுத்திக்கொண்டிருந்தது. என்று மில்லாத புதிராய் இன்று அவருக்கு வாழ்க்கையிலேயே வெறுப்பும் கசப்பும் தென் பட்டன. தெளிவற்ற அவருடைய சிந்தனைகளுக்கிடையில், ஆடியசைந்து நிழல் கொடுக்கும் விளக்குகளும் கூரையில் விழும் நிழலும் பைசாச ரூபம் வளைவது போல் அவரை அலட்டிப் பய மூட்டின. பூல் திரும்பி வந்த பொழுதுதான், தான் தன்னிலை எய்தி சுதாரிப்பு அடைந்ததை எண்ணி வெட்கினார். ஜெகில் வெளிச் சென்று விட்டார் என்று அவன் அறிவித்தான்.

"பழைய ஆபரேஷன் ரூம் வழியாக ஹைட் உள்ளே வருவதை நான் பார்த்தேன். ஜெகில் வீட்டிலில்லாத போது கூட, அவர் அப்படி வருவதுண்டோ?" என்று அட்டர்ஸன் கேட்டார்.

"ஆமாம், ஸார். ஹைடிடமும் ஒரு சாவி இருக்கிறது."

"அந்த இளைஞரிடம் உன் எஜமானனுக்குச் சிறந்த நம்பிக்கை உண்டென்று தெரிகிறதே, பூல்" என்று அட்டர்ஸன் யோசனையுடன் கேட்டார்.

"ஆமாம், ஸார். வாஸ்தவம். அவருக்கு நாங்கள் எல்லோருமே ஏவல் செய்ய வேண்டுமென்று எஜமானர் உத்தரவு."

"ஒரு நாளாவது ஹைடை நான் சந்தித்ததாக ஞாபகமில்லையே!"

"இல்லை, ஸார். அவர்தான் இங்கு சாப்பிடுவதே இல்லையே. அவர் இந்தப் பக்கம் வருவதே அபூர்வம். அநேகமாய் அவருடைய போக்கு வரத்தெல்லாம் ரசாயன சாலையோடு மட்டுந்தான்."

" வருகிறேன், பூல் "

" நல்லது, ஸார் "

வக்கீல் தம் நெஞ்சில் கவலைச் சுமைதாங்கி வீட்டுக்கு நடந்தார். " ஜெகில் !—அவன் எதிலேயோ காலைவிட்டுக்கொண்டு தவிக்கிறான் என்பதை எண்ணினால், என் மனம் பேதலிக்கிறது. இளமையிலே அவன் அத்துமீறிப் போனதுண்டு. ஆனால் அதுவும் ரொம்ப நாளைக்கு முன்னால். கடவுளின் சட்டத்திற்குக் கால வரையறை உண்டா ? அதுதான் இப்படி—புதைத்து வைத்த பாவத்தின் பைசாசரூபம்—மூடி மூடி வைத்த துர்ச் செயலின் ரணவேதனை—அந்தச் செயலைப்பற்றி அறவே மறந்து, தன் குற்றத்தைத் தானே உணர்ந்து தன்னையே மன்னித்துக் கொண்ட பின்னும், இத்தனை காலத்துக்குப் பிறகும் அதற்குத் தண்டனை !" இந்த எண்ணம் மனத்தில் முளைத்ததுமே அட்டர்ஸன் பயந்துபோய், தமது வாழ்க்கையிலேயும் இம்மாதிரி ஏதேனும் உண்டா என்பதை ஞாபகப்படுத்திப் பார்த்தார். ஞாபகம் பதுங்கிக் கிடக்கும் இருட் கிடங்குகளிலெல்லாம் துழாவினார். தப்பித் தவறி ஒரு பழைய குற்றம் அந்த இருளில் தட்டுப் படாதா என்று நினைத்தார். அவருடைய கடந்த கால வாழ்க்கை பரிசுத்தமானது. அவரைப்போல் அத்தனை பயமில்லாமல் தமது வாழ்க்கை ஏடுகளைப் புரட்டிப் பார்க்கத் துணிந்தவர்கள் அபூர்வம். எனினும் தாம் தெரியாத்தனமாய் செய்துவிட்ட சிறு பிழைகளை எண்ணி அவர் மனம் புழுங்கினார் ; சில பிழைகளை சமயத்தில் உணர்ந்து, அவற்றைச் செய்யாமல் வெற்றி பெற்றதையும் எண்ணி மனம் புளகித்தார். அவருடைய சிந்தனை மீண்டும் பழைய விஷயத்துக்கே திரும்பிற்று.

"இந்த ஹைடைப்பற்றிப் புலன்விசாரித்தால், அவனுடைய ரகசியங்கள் ஏதேனும் நமக்கு அகப்படலாம். ஆளைப் பார்த்தாலே, அவனிடம் பெரும் குறைகள் இருக்கின்றன என்றுதான் தோன்றுகிறது. அவனுடைய குற்றங்களையெல்லாம் ஜெகிலின் குற்றங்களோடு வைத்து எண்ணிப் பார்த்தால், ஜெகிலின்

குற்றம் அவனுடைய எந்தக் குற்றத்தையும்விட, படுமோசமாயிருக்க முடியாது. காரியங்கள் இப்படியே நடந்துகொண்டிருக்க முடியாது. இந்தப் படுபாவி ஹைட், ஜெகிலின் படுக்கையருகே கள்ளத் தனமாய் ஊர்ந்து செல்வதைப்போல் என் மனத்தில் படும்போது, நானே நடுங்குகிறேன். ஜெகில்!—இது எத்தனை ஆபத்து! உயில் விஷயம் மட்டும் ஹைடுக்குத் தெரிந்ததோ, அவன் அதைத் தட்டிப் பறித்துச் செல்லவே வழி பார்ப்பான். நான் இதைத் தடுத்தாக வேண்டும். ஆனால்—ஆனால், ஜெகில் என்னைத் தடுக்காமல் இருக்க வேண்டுமே!" மீண்டும் அவர் மனக் கண்முன் அந்த உயிலின் விபரீத அக்ஷரத்துக்கள் தெளிவாகத் தோன்றிக் கொண்டிருந்தன.

## விருந்துக்குப் பின்

பதினைந்துநாட்களுக்குப்பின் ஜெகில் தமது நண்பர் சிலருக்கு அளித்த விருந்து, அட்டர்ஸனுக்கு அரிய சந்தர்ப்பம் ஒன்றை அளித்தது. பொறுக்கி எடுத்தாற்போல் சில நண்பர்கள். மது ருசியில் நல்ல ரஸிகமணிகளான நண்பர்கள்; பெரியவர்கள். இவர்கள்தான் விருந்தாளிகள். அன்று விருந்துக்குப் பின் அட்டர்ஸனைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் விடைபெற்றுச் சென்றுவிட்டனர். இதுமாதிரி அட்டர்ஸன் பின்தங்குவது அன்று மட்டும் புதிதல்ல; பல தடவை நேர்ந்ததுதான். அட்டர்ஸனுக்குப் பழக்கமுள்ள இடங்களிலெல்லாம், அவர்மீது எல்லோருக்குமே அளவற்ற பற்றுதல். வாயளப்பவர்களும், குஷிப்பேர் வழிகளும் வீடு திரும்பினாலும், விருந்தளிப்பவர்கள் இந்த வக்கீலை மட்டும் நிறுத்திக் கொள்வார்கள். விருந்தின் கலகலப்புக்குப்பின் அட்டர்ஸனின் மோன நிலையிலே தாமும் கலந்து கொண்டு அமைதி பெறுவதில் அவர்களுக்கு ஒரு ஆனந்தம். இந்த வழக்கத்துக்கு, டாக்டர் ஜெகிலும் புறம்பானவரல்லர். அன்று அவர் கணப்புக்குழியருகே இருந்தார். நல்ல திடகாத்திரமான சரீரம். ஐம்பது வயதாகியும், மடிப்பு விழாத முகம், அன்பையும் அருளையும் பொழியும் அந்தப் பார்வை—அட்டர்ஸனிடம் அவர் காட்டும் மனங்கனிந்த அன்புகூட, அந்தப் பார்வையிலேயே தென்பட்டது.

"உன்னோடு பேச வேண்டுமென்று காத்திருந்தேன், ஜெகில்! அந்த உயில் விஷயமாய்" என்று அட்டர்ஸன் ஆரம்பித்தார்.

அந்த விஷயத்தைப்பற்றியே டாக்டருக்குப் பேசப் பிடிக்கவில்லை என்பதை லகுவில் யாரும் கண்டு கொள்ளலாம். இருந்தாலும் அவர் அதை வெளிக்காட்டாமல் பேச்சில் கலந்து கொண்டார்.

"அட்டர்ஸன், என்னைப்போல ஒரு கட்சிக்காரன் இருப்பது உனது துரதிருஷ்டந்தான். என் உயிலைப்பற்றி உன்னைப் போல, கவலைப்படுகிற ஆசாமியை நான் பார்த்ததே இல்லை. என் விஞ்ஞான ஆராய்ச்சியைப்பற்றி, லான்யன்கூட இந்தமாதிரி தான் அல்லல் படுகிறான். அவன் ஒரு அழுகுணிச் சித்தன். முற்போக்கு எண்ணமே அற்றவன்—முகத்தைச் சுழிக்காதே—அவன் ரொம்ப நல்லவன்தான். ஆனால், படித்தும் பயனற்றவன். அவனைக் கூடப் பார்க்க எனக்கு ஆசைதான்" என்றார் ஜெகில்.

டாக்டர் சொன்னதைப் பொருட்படுத்தாமலே, "அந்த உயிலை நான் ஆதரிக்கவே இல்லை என்பது உனக்குத் தெரியாதா?" என்று அட்டர்ஸன் சொன்னார்.

"என் உயில்தானே! எனக்குத் தெரியுமே. இதைத்தான் ஆயிரம் தடவை சொல்லியிருக்கிறாயே" என்று கடுமையாகச் சொன்னார் ஜெகில்.

"இருக்கட்டும். இன்னொரு முறையும் சொல்லக் கூடாதா? அந்த ஹைடைப்பற்றி நான் சில விஷயங்களை உளவு அறிந்து வருகிறேன்."

ஜெகிலின் கண்களில் இருள் படர்ந்தது. முகம் ஒரேயடியாய் வெளிறியது. "மேலும் கேட்க, நான் தயாராயில்லை. இந்த விஷயத்தைப் பற்றிப் பேச்செடுப்பதில்லை என்று இருவரும் முன்பே ஒத்துக் கொண்டிருக்கிறோம்."

"நான் கேள்விப்பட்டது மிகவும் மோசமான தகவல்."

"அதனால் என்ன? என் நிலைமையை நீ உணரவில்லை. நான் வேதனையடைந்திருக்கிறேன். அட்டர்ஸன், அட்டர்ஸன்!

என் நிலைமை விபரீதமானது, விசித்திரமானது! அதை வெறும் பேச்சினால் சீர்திருத்திவிட முடியாது" என்று தட்டுத் தடுமாறினார், டாக்டர்.

"ஜெகில், என்னை உனக்குத் தெரியும். என்னை நம்பு. எதையும் ஒளிக்காமல், மனம் விட்டு என்னிடம் சொல். நான் உன்னை இந்தச் சங்கடத்திலிருந்து நிச்சயம் விடுவிக்கிறேன்."

"அட்டர்ஸன், உன்னுடைய அன்பை நான் எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. உன் சிரத்தையையும் அன்பையும் உள்ளத்தில் உணர்கிறேன். உன்னை மனப்பூர்வமாக நம்புகிறேன். உன்னைத் தவிர, வேறு யாரை இத்தனை தூரம் நான் நம்ப முடியும்? ஆனால், நீ பயப்படுவதுபோல் விஷயம் அத்தனை பிரமாதமில்லை. ஆனால் ஒன்று சொல்கிறேன். நான் மனது வைத்தால், எந்த நிமிஷமும் ஹைடை விலக்கிவிட முடியும். அதுமட்டும் உறுதியாகக் கையடித்துக் கொடுக்கிறேன். உனக்கு மிக மிக வந்தனம். ஆனால், அட்டர்ஸன்! ஒரு வார்த்தை சொல்கிறேன். நல்லபடியாய் அதை ஏற்றுக்கொள். இது என் சொந்த விஷயம். அதைப்பற்றி நீ இனிக் கிண்டிக் கிளறிக் கொண்டிருக்காதே."

அட்டர்ஸன் கணப்பு நெருப்பையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

"நீ சொல்வது சரி, ஜெகில்" என்று சொல்லிக் கொண்டே, எழுந்தார்.

"சரி. இனி இந்தப் பேச்சே வேண்டாம். ஆனால், இதைப் பற்றி நாம் இப்போது பேச ஆரம்பித்ததனால், ஒரே ஒரு கடைசி வார்த்தை. நீ ஒரு விஷயத்தை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஹைடின் மீது எனக்கு உண்மையிலேயே சிரத்தை இருக்கிறது. நீ அவனைப் பார்த்திருக்கிறாய் என்பதும் எனக்குத் தெரியும். அவனே அதை என்னிடம் சொன்னான். ஆனால், அவன் உன்னிடம் முரட்டுத்தனமாய் நடந்து கொண்டான் போலும். அவன் விஷயத்தில் எனக்கு உண்மையிலேயே பெருஞ் சிரத்தை உண்டு. ஒருவேளை நான் மறைந்து போனாலும், அட்டர்ஸன்,—நீ அவனுடைய குறைகளைப் பொருட்படுத்தாமல்

அவனுடைய உரிமைகளைக் காப்பாற்றிக் கொடுக்கவேண்டும். எல்லா விஷயங்களும் உனக்குத் தெரிய வந்தால், நீயே அதற்குச் சம்மதிப்பாய். ஆகட்டுமென்று சத்தியம் பண்ணித் தந்து விடு. அப்போதுதான் என் மனப்பாரம் குறையும்.''

“ அவன்மீது எனக்குப் பற்றுதல் ஏற்படும் என்று பாவனை பண்ணச் சொல்கிறாயா ?'' என்றார் வக்கீல்.

“ அதைக் கேட்கவில்லை. நியாயம் வழங்கு என்றுதான் கேட்கிறேன். நான் மறைந்து விட்டால் எனக்காக, அவனுக்கு ஒத்தாசை செய் என்றுதான் இறைஞ்சுகிறேன்'' என்று தளுதளுத்துக் கூறிக் கொண்டே, அட்டர்ஸனின் தோளைப்பற்றினார், ஜெகில்.

அட்டர்ஸன் பெருமூச்சை அடக்க முடியாமல் ஏங்கினார். சரி, ஆகட்டும்'' என்றார்.

## கொலை !

ஒருவருட காலம் கடந்தது. 18...ம் வருடம் அக்டோபர்மாதம் லண்டன்மா நகரமே அதிரும்படியாக ஒரு கோரமான கொலை நடந்தது. கொலையுண்டவர் ஒரு பிரமுகர்; எனவே, கொலையும் பிரபலமடைந்தது. கொலை சம்பந்தமான புலன்கள் சிறிதே யாயினும், அதிர்ச்சி தருவதாயிருந்தன. ஆற்றங்கரையருகே இருந்த அந்த வீட்டின் வேலைக்காரி தனியே இருந்தாள். இரவு பதினொரு மணிக்கு அவள் மாடிக்குப் படுக்கச் சென்றாள். கடைச் சாமத்தில் தான் பனிமூட்டம் நகரைக் கவிந்ததே தவிர, முன் இரவில் வானம் மேகமற்று நிர்மலமாயிருந்தது. அவளுடைய அறையின் ஜன்னல் ஒரு முடுக்கைப் பார்த்து நின்றது. ஜன்னல் வழியாக பூர்ணச் சந்திரனின் ஒளி பரவிக் கிடந்தது. அவளும் இன்பமயமான கனவுகள் கண்டு ஆனந்திப்பவள் போலிருக்கிறது. ஆதலால், ஜன்னல் பக்கம் கிடந்த பெட்டியின்மேல் அமர்ந்து கனவிலேயே மூழ்கி விட்டாள். அந்த வாக்குமூலத்தைக் கொடுக்கும்போதுகூட, அவள் எப்படிக் கண்ணீரும் கம்பலையுமாய் நின்றாள் ! உலகம் இனியது; மனிதர்கள் நல்லவர்கள் என்று அன்று உணர்ந்ததுபோல், அவள் என்றும் உணர்ந்த

திலில. அவள் அப்படி உட்கார்ந்திருந்தபோது, அந்தச் சந்தின் வழியாய் தலைநரைத்த பெரியவர் ஒருவர் வந்து கொண்டிருந்தாராம். அவரைச் சந்திக்கும் நோக்கத்தோடு இன்னொரு குள்ளமான மனிதன் விறுவிறு என்று வந்தானும். அவனை அவள் முதலில் நன்ருகக் கவனிக்கவில்லையாம். அவர்கள் ஒருவரையொருவர் நெருங்கி, அவள் வீட்டுக்குக் கீழே வந்த போது, அந்தப் பெரியவர் பவ்வியத்துடன் வணங்கி வந்தனம் செய்தார். அவர் எதிரே வந்தவனிடம் ஏதோ கேட்டார். அது ஒன்றும் முக்கியமானதாகத் தெரியவில்லை. ஒருவேளை ஏதேனும் வழி தெரிந்து கொள்ளக் கேட்பதுபோலத் தானிருந்தது. அவர் பேசும்போது அவர் முகத்தில் நிலவொளி விழுந்தது. அந்த முகத்தைக் கவனிப்பதில் அவளுக்கு இன்பம் கூட இருந்ததாம். அத்தனை சாந்தமும், அன்பும் அந்த முகத்தில் குடிகொண்டிருந்தன; மேலும் அந்த முகத்தில் ஆத்ம திருப்தியும் பிரதிபலித்தது. அப்போது அவள் அடுத்த நபரையும் கவனிக்க நேர்ந்தது. அவன்தான் ஹைட். அவன் ஒரு தடவை தன் எஜமானனைப் பார்க்க வந்தபோது அவள் அவனைப் பார்த்திருக்கிருள். அப்போதே அவளுக்கு அவன் மீது வெறுப்பு ஏற்பட்டிருந்தது. அவன் தன் கையிலிருந்த கனமான கைப்பிரம்பைச் சுழற்றிக் கொண்டிருந்தான். அவன் வாயையே திறக்காமல், பொறுமை இழந்து அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தது போலிருந்தது. திடீரென அவனுக்குக் கோபம் காட்டுத் தீ போலக் கனன்றெழுந்தது. தரையைக் காலால் உதைத்தான். கைத்தடியைச் சுழற்றிஞன். பிறகு ஒரு பைத்தியம்போல நடந்துகொண்டான். இந்த எதிர்பாராத அசம்பாவிதத்தைக் கண்டு பெரியவர் ஓரடி பின்வாங்கிஞர். அவருக்கு ஆச்சரியமும் கோபமும் வந்தது. அதைக் கண்டதும் ஹைடுக்குக் கோபம் கட்டுக் கடங்காமல் பொங்கி யெழுந்தது. பெரியவரை ஓங்கியடித்துக் கீழே தள்ளிஞன். மறுகணம் குரங்குத்தனமான ஆங்காரத்துடன் அவரை மிதியாய் மிதித்துத் தள்ளிஞன். அடிகளைச் சரமாரியாகப் பொழிந்தான். எலும்புகள் நொறுங்கும் சப்தம்கூடத் தெளிவாய்க் கேட்டது. அடியிஞல் உடல் துள்ளித் துடிப்பதுவும் தெரிந்தது. இந்தக் கோரமான காட்சியைக் காணச் சகிக்காத அந்த வேலைக்காரப் பெண் மூர்ச்சையாஞள்.

அவள் இரண்டு மணி வாக்கில் சுயப் பிரக்ஞை அடைந்து, போலீஸுக்குத் தகவல் அனுப்பினாள், கொலையாளி அப்போதே தப்பி ஓடிவிட்டான். ஆனால், கொலையுண்டவர் மட்டும் நடுச் சந்தில் சின்னாபின்னமாய்க் கிடந்தார். அவன் உபயோகித்த தடி நல்ல கனத்த மரத்திலிருந்து எடுத்ததுதான். எனினும் அவன் அடித்த அடியில் அது இரண்டாக ஒடிந்து போயிற்று. ஒரு பாதி மட்டும் பக்கத்துச் சாக்கடையிலே விழுந்து கிடந்தது. மறுபாதி—அதை அவன் கையோடேயே கொண்டு போய் விட்டான். கொலையுண்டவரின் உடையில் ஒரு தங்கக் கடிகாரமும், பணப்பையும் இருந்தன. விலாசம் அறியக்கூடிய கார்டோ, வேறு கடிதங்களோ எதுவும் இல்லை. தபாலில் சேர்ப்பதற்காக எடுத்துச் சென்றாரோ என்னவோ? ஒழுங்காக ஸ்டாம்ப் ஒட்டப் பெற்ற, ஒரு கவர்மட்டும் இருந்தது. அதில் அட்டர்ஸனின் விலாசம் எழுதப்பட்டிருந்தது !

அந்தக் கடிதம் மறுநாள் காலை அட்டர்ஸன் படுக்கையை விட்டு எழுந்திருக்கு முன் போலீஸாரால் அவரிடம் கொடுக்கப்பட்டது. அதைப் படித்து முடித்துவிட்டு, அவர் உதட்டைப் பிதுக்கினார். விவரமும் தெரிந்து கொண்டார். "பிரேதத்தைப் பார்ப்பதற்கு முன் நான் எதுவும் சொல்லமுடியாது. இது பெரிய விஷயமாயிருக்கலாம். இருங்கள், நான் சட்டை போட்டுக் கொண்டு வருகிறேன்" என்று சொன்னார். பிறகு சாப்பாட்டை முடித்துக் கொண்டு, கவலை தோய்ந்த முகத்தோடு, போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். பிரேதத்தைக் கண்டார். தலையசைத்தார் :

"ஆமாம் இவரை எனக்குத் தெரியும். இவர் தான்—ஸர் டான்வெர்ஸ் காரியூ !"

"அட கடவுளே ! இது நடக்கக் கூடியதா ?" என்று அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தர் ஆச்சரியமடைந்தார். மறு நிமிஷம் அவர் கண்களில் தமக்குக் கிடைத்துள்ள வேலையின் பெருமிதம் பிரதிபலித்தது. "நீங்கள் சொல்வது போலென்றால், இந்தக் கேஸ் ஊரெல்லாம் ஒரே பேச்சாகி விடுமே. சரி, நீங்கள் இது விஷயத்தில் உதவ முடியுமா ?" என்று கூறிவிட்டு, அந்த வேலைக்காரி சொன்னதையும் அட்டர்ஸனிடம் சொன்னார்; அந்த முறிந்த பிரம்பையும் காட்டினார்.

ஹைடின் பெயரைக் கேட்டவுடனேயே அட்டர்ஸன் நடு நடுங்கிப் போனார். அந்த முறிந்துபோன பிரம்பைக் கண்டதும் அவருடைய சந்தேகமும் நிவர்த்தியாயிற்று. ஒடிந்து, சிலும்ப லாயிருந்தாலும் அவர் அந்தத் தடியை அடையாளம் கண்டு பிடிக்க முடிந்தது. பல வருடங்களுக்கு முன்னால் அவர் ஹென்றி ஜெகிலுக்கு அளித்த பரிசு, அது !

"ஹைட் என்பவன் என்ன ? குள்ளமான ஆசாமியா ?" என்று கேட்டார்.

"குட்டைதான் என்றும், பார்ப்பதற்கே கொடியவன் என்றும் இந்த வேலைக்காரப் பெண் சொன்னாள்" என்றார் ஆபீஸர்.

வக்கீல் யோசித்தார். பிறகு தலையை உயர்த்தி, "என் காரில் வாருங்கள். அவர் இருக்குமிடம் போகலாம்" என்றார்.

இதற்குள் காலை மணி ஒன்பது ஆகிவிட்டது. அந்தப் பருவத்து மூடுபனி அன்று தான் மூட்டம் விரித்தது. சொர்க்கத்திலிருந்து இறக்கிய திரைபோல அந்தப் பனி கவிந்திருந்தது. ஆனால் காற்று மட்டும் அந்தப் பனிப்புகையை உலைத் தெறிந்து கலைத்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு தெருவாய் வண்டி நகர்ந்தது. அஸ்தமன காலத்து வர்ண ஜாலங்களைப்போல் பல வர்ணக் கலவைகள் அவர் கண்களில் பட்டன. ஒரு பக்கம் ஜோதிப் பிழம்பான ஒளி கதிர் வீசுவது போலிருந்தது. வேறோரிடத்தில் கலந்துபோன பனி மூட்டத்தின் வழியாக வெளிறிப் போன காலைக் கதிர்கள் சோர்ந்து தாவிக் கொண்டிருந்தன. ஸோஹோப் பிரதேசம் முழுவதும் சதசதப்பாயிருந்தது. மக்கள் அலங்கோலமாய்ச் சென்றார்கள். இரவு ஏற்றிய விளக்குகள் இன்னும் அணைக்கப்படாமல் எரிந்து கொண்டிருந்தன. ஒரு வேளை, பனி மூட்டத்தின் இருளை எதிர்பார்த்து ஏற்றியதாகவும் இருக்கலாம். அந்தப் பிரதேசமே ஒரு பேய்க்கனவுபோல் வக்கீலுக்குத் தோன்றிற்று. அவருடைய சிந்தனைகள் சோகத்தால் மங்கிக் கிடந்தன. இந்த நிலைமையில் பக்கத்திலிருந்த போலீஸ் உத்தியோகஸ்தரைப் பார்த்ததும் அவர் திடுக்கிட்டார். ஒரு காரணமுமில்லாத இந்தப் பயம் சமயங்களில் யாருக்குமே ஏற்படுவதுண்டு.

குறிப்பிட்ட ஸ்தலத்துக்கு வண்டி வந்து நின்றது; பனி மூட்டமும் ஓரளவு விலகியிருந்தது. ஒரு சாராயக் கடை, ஒரு கடைத்தரமான பிரெஞ்சு ஹோட்டல், மலிவான சரக்குகளை விற்கும் ஒரு குட்டிக் கடை, வாசற்படிகளில் கூனிக் குறுகிக் கிடக்கும் அநாதைக் குழந்தைகள், கையிலே சாவியைச் சுழற்றிக் கொண்டு, காலையில் தொண்டையை நனைக்கச் செல்லும் பல தேசத்துப் பெண்கள்—இத்தகைய பல காட்சிகள் அந்தத் தெருவிலே நிறைந்து காணப்பட்டன. மறுகணம் பனி மூட்டம் மீண்டும் கவிந்து அந்தக் காட்சியைக் கலைத்துவிட்டது. இது தான் ஹென்றி ஜெகிலின் பிரியமான பிள்ளையின் குடியிருப்பு—ஜெகிலின் இரண்டரை லக்ஷம் பவுன்களுக்கு வாரிசு, அவன்!

தந்தம்போல் முகம் வெளுத்தும், வெள்ளிபோல் தலை நரைத்தும்போன ஒரு கிழவி கதவைத் திறந்தாள். அவள் முகத்தில் தெரியும் தீய பாவம், அவளுடைய சாகச மாய்மால குணத்தால் ஓரளவு மங்கியிருந்தது. எனினும் அவள் நடத்தை மிகவும் நன்றாயிருந்தது. "ஆமாம். இதுதான் ஹைடின் வீடு; ஆனால் அவர் வீட்டிலில்லையே. இரவு வெகு நேரம் கழித்துத் தான் வந்தார். வந்த ஒரு மணி நேரத்தில் மறுபடியும் போய் விட்டார். ஆனால், இது மாதிரி வரத்துப் போக்கு ஒன்றும் அவருக்குப் புதிதல்ல. அவருடைய நடவடிக்கைகளே ஒரு ஒழுங்கற்றவை. சமயங்களில் அவர் வருவதே இல்லை. உதாரணமாக, இரண்டுமாத காலமாக இந்தப் பக்கமே வராதவர், நேற்றிரவு தான் வந்து சென்றார்," என்றாள்.

"ரொம்ப சரி. நாங்கள் அவர் அறைகளைப் பார்வையிட வேண்டும்" என்றார் வக்கீல். அந்தக் கிழவி அதற்கு ஒத்துக் கொள்ளாததைக் கண்டு, "இவர் யார் என்று தெரியுமா? இவர் ஸ்காட்லண்டு யார்டு போலீஸ் இன்ஸ்பெக்டர், நியூ காமென்!" என்றார்.

வேண்டா வெறுப்பாய் அவள் முகத்தில் மகிழ்ச்சி தோன்றிற்று. "அப்படியா? அவர் எதிலேனும் மாட்டிக் கொண்டாரா? அப்படி என்ன செய்து விட்டார்?" என்றாள்.

அட்டர்ஸனும் இன்ஸ்பெக்டரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். "இங்குகூட அவனுக்குச் செல்வாக்குக்

கிடையாது போலிருக்கிறதே” என்று சொல்லிவிட்டு, “சரி அம்மா. நாங்கள் இப்படியே சுற்றிப் பார்க்கலாமா?” என்ருர்.

அந்த வீட்டில் அவள் மட்டும் தன்னந் தனியே இருந்தாள். ஹைட் அந்த வீட்டில் இரண்டே இரண்டு அறைகளை மட்டும் தனது உபயோகத்தில் வைத்திருந்தான். இருந்தாலும் அவை ரசிக உணர்ச்சியோடும் சீரோடும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஒரு பீரோவில் மதுச் சரக்குகள் இருந்தன. சாப்பிடும் மேஜையும், அதிலிருந்த வெள்ளித்தட்டும் நன்ருயிருந்தன. நல்ல படமொன்று சுவரில் தொங்கியது. அது ஒருவேளை ரசிகனை ஹென்றி ஜெகிலின் பரிசாயிருக்கலாம் என்று அட்டர்ஸன் ஊகித்துக் கொண்டார். தரையில் விரித்துள்ள கம்பளங்கள் ரம்மியமான வர்ண ஜாலங்களோடு இருந்தன. ஆனல் அந்த அறைக்குள் யாரோ மிகவும் அவசரத்துடன் சாமான்களைக் கையாடி விட்டுச் சென்றதாகச் சூழ்நிலை சுட்டிக் காட்டியது. ஆடைகள் அப்படி அப்படியே தரையில் கிடந்தன. அதன் பைகள் வெளிப்புறம் இழுத்து விடப்பட்டிருந்தன. பூட்டுள்ள டிராயர்களெல்லாம் திறந்து கிடந்தன. கணப்பிலே கிடந்த சாம்பற் குவியல் ஏதோ காகிதங்கள் எரிக்கப்பட்டிருந்ததைக் காட்டிக் கொடுத்தது. அந்தக் கணப்பில் முழுதும் எரியாமல் போன ஒரு பச்சைச் செக் புத்தகத்தை மட்டும் இன்ஸ்பெக்டர் கண்டு பிடித்து எடுத்து விட்டார். அந்த ஒடிந்த கைப் பிரம்பின் மற்ருெரு பாதியும் கதவுக்குப் பின்ஞல் அகப்பட்டது. சந்தேகங்கள் தீர்ந்து விடவே, அவர் அங்கிருந்து கிளம்பத் தயாராஞர். பாங்குக்குச் சென்று புலன் விசாரித்த போது அந்தக் கொலையாளியின் பெயரால் பல ஆயிரங்கள் வரவு இருப்பதாகத் தெரிந்தது. அதுவே இன்ஸ்பெக்டருக்குப் பரம திருப்தி அளித்தது.

“இனி நிச்சயம் அவன் என் கையில் அகப்பட்ட மாதிரி தான். அவனுக்கு புத்தியே மங்கிப் போய் விட்டது. இல்லையெனில் செக் புத்தகத்தையும், பிரம்பையும் அறையிலேயே போட்டுவிட்டுச் செல்வாஞ? பணந்தான் மனிதனுக்கு உயிர், ஐயா! இனி நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான். இங்கேயே இருந்து ஆசாமியைக் கையோடு பிடிக்க வேண்டியதுதான்” என்ருர் இன்ஸ்பெக்டர்.

இந்தக் கடைசி விஷயம், அத்தனை சுலபமானதல்ல. ஏனெனில் ஹைடை நேருக்கு நேராய் சந்தித்தவர்களே அபூர்வம். அந்த வேலைக்காரியின் எஜமானனே அவனை இரண்டே தடவை தான் பார்த்திருக்கிறான். அவனுடைய குடும்ப வரலாறே யாருக்கும் தெரியாது. அவனுடைய புகைப்படமும் கிடையாது. அவனைப்பற்றி வருணிப்பவர்கள் எல்லோருமே யானை பார்த்த குருடன் போல்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குள்ளேயே பல வித்தியாசங்கள். ஆனால் எல்லோரும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் ஏக மனதாகச் சொன்னார்கள். அவனுடைய அங்க அமைப்பில் ஏதோ ஒரு கோளாறு, ஊனம் இருந்ததென்பதில் யாருக்குமே சந்தேகமில்லை. ஆனால், எங்கே என்பதுதான் எவருக்கும் தெரியாத ரகசியம்!

## கடிதம் வந்ததாம்!

மாலையில் அட்டர்ஸன் ஜெகிலின் வீடு தேடிச் சென்றார். வேலைக்காரன் பூல் அவரை வரவேற்று சமையிற்கட்டு, முன்னால் தோட்டமாக இருந்த தாரிசா இவற்றின் வழியாக டாக்டருடைய ரசாயன சாலைக்குள் அழைத்துச் சென்றான். டாக்டர் அந்த வீட்டை ஒரு பிரபல ரண வைத்தியரின் குடும்பத்தினிடமிருந்து விலைக்கு வாங்கி யிருந்தார். டாக்டருக்கோ மானிட சாஸ்திரத்தைவிட, பௌதிக ரசாயனத்திலேதான் பிடித்தம் அதிகம். ஆதலால், அந்த ஆபரேஷன் பகுதியை, 'ரசாயன சாலையாக மாற்றிவிட்டார். தமது நண்பருடைய வீட்டின் அந்தப் பகுதிக்குள் அட்டர்ஸன் அப்போதுதான் காலடி வைத்திருக்கிறார். ஒரு காலத்தில் ஆர்வமுள்ள மாணவர்கள் கூடி இருந்த அந்த இடத்தில், இன்று ஒரு ஜன்னல் கூட இல்லாமல் இருள் மூடிக் கிடப்பதை ஆச்சரியத்துடன் பார்த்தார். மேஜை முழுவதும் ரசாயனக் கருவிகள் நிறைந்திருந்தன. தரையெல்லாம் மருந்துகள் சுற்றி வந்த வைக்கோல் பரந்து கிடந்தது. தாழ்வாரத்துக் கமான் வளைவிலிருந்து சிறிது வெளிச்சம் வந்தது. மறு பக்கத்தில், சிவப்புத் திரை தொங்கவிடப்பட்டு மாடிக்கு வழி காட்டியது, படிக்கட்டு. அதன் வழியாக, அட்டர்ஸன் டாக்டருடைய அந்தரங்க அறைக்குள் சென்றார்.

அதுவும் விசாலமான அறைதான். அறை முழுதும் கண்ணுடி பீரோக்கள். அவைகளுக்கிடையில் ஒரு மேஜை; ஒரு நிலைக் கண்ணுடி. முற்றத்தில் இரும்பு அளி போட்ட மூன்று ஜன்னல்கள். கணப்புக் குழியில் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. புகைக் கூண்டின் பக்கம் பனிமூட்டத்தைக் கலைப்பதற்காக, விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. கணப்பின் அருகே ஜெகில் பிரேதக் களைதட்ட அமர்ந்திருந்தார். வந்தவரை எழுந்திருந்துகூட வரவேற்காமல், இருந்த இடத்திலிருந்தே கையை நீட்டினுர். அவர் குரலுங் கூட மாறிப்போயிருந்தது.

பூல் சென்றவுடனேயே, "நீ விஷயத்தைக் கேள்விப்பட்டிருப்பாய்" என்று ஆரம்பித்தார்.

டாக்டர் நடுங்கினுர்; "தெருவில் பத்திரிகை விற்பவர்கள் கத்தினுர்கள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது காதில் விழுந்தது."

"ஒரு விஷயம், ஜெகில். காரியூவும் என் கட்சிக்காரன்; நீயும் அப்படி. ஆதலால், இது விஷயத்தில் உன்னையும் நான் கலந்து கொள்ள வேண்டியிருக்கிறது. பைத்தியக்காரத்தனமாய் நீ ஹைடை, தலை மறைவாய் ஒளித்து வைக்க வில்லையே!' என்றுர் வக்கீல்.

"அட்டர்ஸன், ஆண்டவன் மீது ஆணையிடுகிறேன். இனி நான் அவனை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இனி இந்த ஜென்மத்தில் அவனுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்காது என்று உன்னிடம் உறுதி கூறுகிறேன். அட்டர்ஸன் அந்தத் திருவிளையாடல் முடிந்து விட்டது. இனி அவனுக்கு என் உதவியே தேவையில்லை. நானறிந்த அளவு நீ அவனை அறியமாட்டாய். அவன் பத்திரமாயிருக்கிருன். இனி அவனைப் பற்றிய தகவலோ பேச்சோ காதில் விழவே விழாது."

வக்கீல் இவற்றை விசனத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார். தமது நண்பருடைய ஜன்னி வேகத் தன்மை அவருக்குப் பிடிக்கவில்லை. "நீ என்னவோ நிச்சயமாய்ச் சொல்லுகிருய். உன்னுடைய நல்ல காலத்துக்கு அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். ஆனுல், நாளைக்கு இது விசாரணைக்கு வந்தால், உன் பெயரும் அடிபடுமே" என்றுர்.

"அவனைப் பற்றி எனக்கு நிச்சயந்தான். அதற்குப் பல காரணங்கள் உண்டு ; எனினும் அவற்றைச் சொல்வதற்கில்லை. ஆனால், ஒரு விஷயத்தில் மட்டும் நீ எனக்கு யோசனை சொல்லலாம். அவனிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதைப் போலீஸாரிடம் ஒப்படைக்கவா, வேண்டாமா என்பதே என் பிரச்சினை. அதை உன் வசமே கொடுத்து விடலாமென எண்ணுகிறேன். நீ தான் அதைப் பற்றித் தீர்மானிக்க வேண்டும். இது விஷயத்தில் உன்னை மனப்பூர்வமாக நம்புகிறேன்."

"அது அவன் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க உதவலாம் என நீ பயப்படுகிறாயா?" என்றார் வக்கீல்.

"இல்லையில்லை. ஹைடுக்கு என்ன நேர்ந்தாலும் அதைப் பற்றி நான் கவலைகொள்ளப் போவதில்லை. அவனுக்கும் எனக்கும் தொந்தம் அற்றுப் போய் விட்டது. இந்த வேண்டாத விவகாரத்தில் என் பெயரும் அடிபடுமே என்று தான் யோசனை."

அட்டர்ஸன் சில நிமிஷம் யோசித்தார். தமது நண்பரின் சுயநலத்தை எண்ணி அதிசயித்தார் ; எனினும் உள்ளூர சந்தோஷமே அடைந்தார். "ரொம்ப சரி, அந்தக் கடிதத்தைப் பார்க்கலாம்" என்றார்.

அந்தக் கடிதம் விசித்திரமான நீட்டெழுத்துக்களால் எழுதப் பெற்று எட்வர்ட் ஹைட் என்று கையெழுத்திடப்பட்டிருந்தது. கடிதத்திலிருந்தது இதுதான் : தனக்காக எவ்வளவோ உபகாரம் செய்துவந்த டாக்டர் ஜெகிலுக்கு பல வழிகளிலும் தொல்லை கொடுத்ததாயும், ஜெகில் தமது பாதுகாப்பு விஷயமாக எவ்வித பீதியும் அடையவேண்டியதில்லையென்றும், தான் தப்பித்துக் கொள்ளச் சரியான வழி இருக்கிறதென்றும் அதில் குறிப்பிட்டிருந்தது. வக்கீலுக்கு அந்தக் கடிதம் மிகவும் பிடித்திருந்தது. தான் நினைத்ததற்கு மாறாக அந்தக் கடிதம் இருந்தது. தனது பழைய சந்தேகங்களுக்காகத் தன்னையே அவர் கடிந்து கொண்டார்.

"சரி. இந்தக் கடிதத்தின் கவர் இருக்கிறதா?"

"நான் அதை எரித்துவிட்டேன். அப்போது அதைப் பற்றி நான் யோசிக்கவில்லை. அதில் தபால் முத்திரை எதுவும் குத்தப்படவில்லை. யாரோ ஆள்வசம் கொடுத்தனுப்பினன்."

"நான் இதை வைத்திருக்கிறேன். இரவில் யோசிக்கிறேன்" என்றார் வக்கில்.

"நீ எனக்காக இதைத் தீர்மானித்தாக வேண்டும். நானே தன்னிலையிழந்து தவிக்கிறேன். எனக்கே நம்பிக்கையற்றுப் போய்விட்டது."

"சரி, பார்ப்போம். ஒரே ஒரு வார்த்தை. உன்னுடைய உயிலில் நீ குறிப்பிட்டுள்ள 'மறைவை', ஹைடுதான் சொல்லிக் கொடுத்து எழுதச் சொன்னனா?"

டாக்டருக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது. வாயை இறுக மூடிக் கொண்டு தலையை அசைத்தார்.

"எனக்குத் தெரியும். அவன் உன்னையே கொலைபண்ண எண்ணினன். நீ நல்ல வேளையாகத் தப்பித்துக் கொண்டாய்" என்றார் வக்கீல்.

"போதும் போதும். எனக்கும் நல்ல பாடம் கிடைத்தது. கடவுளே!—என் புத்திக்கு இது நல்ல பாடந்தான்" என்று கூறிக்கொண்டே முகத்தைத் தம் கரங்களில் புதைத்துக் கொண்டார், டாக்டர்.

வெளியே வரும் வழியில் வக்கீல் பூலிடம் ஓரிரு வார்த்தைகள் பேசினர். "வந்து—ஒரு விஷயம். இன்று ஒரு கடிதம் கொண்டு வந்தானே, ஒரு ஆசாமி. அவன் எப்படியிருந்தான்?" என்று கேட்டார். 'அன்று தபாலைத் தவிர வேறு எதுவும் வரவில்லை; அதுவும் வெறும் அழைப்பிதழ்கள்' என்றுதான் பூல் அறிவித்தான்.

இந்தச் செய்தி வக்கீலின் மனத்தில்பழைய பீதியை மீண்டும் கிளறிவிட்டது. ரசாயன சாலை வழியாகத்தான் இந்தக் கடிதம் வந்திருக்கிறது. ஒருவேளை அதே அறையில் வைத்தே எழுதப் பட்டிருக்கலாம். ஆனல் மிகவும் எச்சரிக்கையுடன்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் வீடு செல்லும்போது, பத்தி

ரிகை விற்கும் பையன்கள் நடைபாதையில் நின்றுகொண்டு உரக்கக் கத்தினார்கள் : "விசேஷப் பதிப்பு ! பார்லிமெண்டரி அங்கத்தினரின் பரிதாபக் கொலை!" தமது கட்சிக்காரனும் நண்பருமாகிய ஒருவருக்கு ஒருபுறம் ஈமக்கடன்; மறுபுறம் இன்னொரு நண்பனும் கட்சிக்காரனுமான ஒருவரின் நல்ல பெயர் இந்தக் கொலை விவகாரத்தில் அடிபட்டு கேவலப்படுமே என்ற கவலை. இது விஷயத்தில் அவர் ஒரு முடிவுக்கு வருவதே பெரும் பாடாய் விட்டது. பல விஷயங்களில் தன்னையே நம்பக்கூடிய வராயிருந்தும், இது விஷயத்தில் யாரோடேனும் கலந்து யோசித்தால்தான் நல்லது என்று பட்டது. ஆனால், அத்தனை தூரம் நேரடியாய் அதை நடத்திவிட முடியாது. எனினும், இதற்குத் தூண்டில் வீசித்தான் ஆகவேண்டும் என நினைத்தார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவர் தம் வீட்டுக் கணப்புக் குழியருகே, தமது தலைமைக் குமாஸ்தா கெஸ்ட் எதிர்ப்புறமிருக்க, அமர்ந்திருந்தார். இருவருக்கும் இடையிலுள்ள இடத்தில் வெகு நாட்களாய் பூமிக்குள் புதைத்து வைக்கப்பட்ட மதுப்புட்டி இருந்தது. நகரத்தின் மீது பனிமூட்டம் இன்னும் சிறை விரித்துத்தான் கிடந்தது. நகரத்து விளக்குகள் மணி விளக்கம் போலத் தோன்றின. அந்தப் பனிமூட்டத்திலும், மப்பிலுங்கூட, நகரத்தின் இரைச்சலும் நடமாட்டமும் குறையவில்லை. இரத்தக் குழாய் போன்ற தெருக்களில் மனித வெள்ளம் ஓடிக்கொண்டுதானிருந்தது, அந்த அறை கணப்பின் நெருப்பால் ஒளி பெற்றிருந்தது. அந்தப் பழம் மதுவின் சாரம் பலநாள் பூமிக்குள் இருந்ததால் குறைந்துவிட்டது; நிறமும் வெளிறி விட்டது. மலைக்குன்றின் அடிவாரத்திலே உண்டான இலையுதிர் காலத்து மாலை ஒளி, விடுபெற்று வந்து லண்டனில் கவிந்து கிடக்கும் மூடுபனியைக் கலைத்தெறிய முயல்வதுபோல், அந்த மது இருந்தது. வக்கீல் தம்மையும் மறந்து தம்முள் மனம் இளகினார். கெஸ்ட்டைப்போல் வேறு யாரிடமும் அவர் தமது ரகசியங்களை உடைத்துச் சொன்னதில்லை. தமது கட்டுப்பாட்டையும் மீறி, சில விஷயங்களை அவரிடம் கூறியிருக்கிறார். கெஸ்ட் கேஸ் விஷயமாக, ஜெகிலின் வீட்டுக்குப் போவதுண்டு, பூலையும் அவர் அறிவார். ஹைடுக்கு அங்குள்ள செல்வாக்கைப் பற்றியும் அவர் அறியாமலிருக்க முடியாது. இது விஷயமாய்

அவரும் ஏதேனும் முடிவு கட்டியிருக்கலாம். அப்படியிருந்தால், இந்தக் கடிதத்தைப் பார்த்தால், ஏதேனும் சொல்லக் கூடுமெல்லவா? மேலும், கெஸ்ட் நல்ல கையெழுத்து நிபுணர்; மாணவர். குமாஸ்தா என்பதைத் தவிர, அவர் சரியான ஆலோசகரும்கூடத்தான். இதைப் படித்து அவர் ஏதேனும் சொல்லக் கூடுமென்றால், அட்டர்ஸன் அந்தப் பதிலை வைத்துக் கொண்டு மேல் நடவடிக்கை எடுக்கலாமல்லவா?

" ஸர் டான்வர்ஸ் விஷயம் ரொம்பவும் பரிதாபகரமானது—அல்லவா?" என்று ஆரம்பித்தார்.

" ஆமாம், ஸார், அது பொதுஜனங்களிடையே ஒரு பெரும் உணர்ச்சியைக் கிளப்பிவிட்டிருக்கிறது. அந்தக் கொலைகாரன் ஒரு பைத்தியமாய்த் தானிருக்கவேண்டும்" என்று பதில்வந்தது.

" அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். என்னிடம் அவன் எழுதிய கடிதம் ஒன்றிருக்கிறது, இது நமக்குள்ளாக இருக்கவேண்டிய விஷயம். அதை என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. இந்த விஷயமே ஒரு மோசமான விவகாரம். நீங்கள் பார்க்க வேண்டியது அவசியந்தான்—அந்தக் கொலைகாரனின் கையெழுத்தை!"

கெஸ்ட்டின் கண்கள் ஒளிபெற்றன. அதைக் கவனமாகப் படித்தார். " அவனுக்குப் பைத்தியம் இல்லை, ஸார். ஆனால் கையெழுத்து மட்டும் புதுத் தினுசாயிருக்கிறது."

" எழுதினவனும் ஒரு தினுசானவன் என்றுதான் தெரிகிறது" என்றார் அட்டர்ஸன்.

அப்போது வேலைக்காரன் ஒரு சீட்டுக் கொண்டு வந்தான்.

" அது டாக்டர் ஜெகிலினுடைய கையெழுத்தில்லையா? அவரிடமிருந்தா கடிதம் வந்தது. ஏதேனும் அந்தரங்கமானதோ?" என்றார் கெஸ்ட்.

" வேறொன்றுமில்லை. சாப்பிட அழைத்திருக்கிறார். ஏன்? நீங்கள் அதைப் பார்க்க வேண்டுமா?" என்றார் வக்கீல்.

" ஆம், ஒரே ஒரு நிமிஷம்."

அந்தக் குமாஸ்தா இரண்டு கடிதங்களையும் பக்கத்தில் பக்கம் வைத்துப் பார்த்தார், இரண்டையும் ஒப்பு நோக்கினார். பிறகு இரண்டு கடிதங்களையும் அட்டர்ஸனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, "நல்லது, ஸார், ஆனால், இது ரொம்பவும் சுவாரசியமான கையெழுத்து!" என்றார்.

ஒரு கணம் அட்டர்ஸன் பேசாமல் இருந்தார், பிறகு "நீங்கள் ஏன் இரண்டையும் ஒப்பு நோக்கினீர்கள்?" என்று திடீரெனக் கேட்டார்.

"இரண்டும் ஒரே வகைக் கையெழுத்துத்தான். பல விஷயங்களில் இரண்டும் ஒத்துப் போகின்றன. ஒன்று நேராயிருக்கிறது; மற்றது சிறிது சாய்ந்திருக்கிறது, அவ்வளவுதான்."

"அப்படியா? அதிசயந்தான்."

"ஆமாம். அதிசயந்தான்" என்றார் கெஸ்ட்.

"இது வெளிக்குத் தெரியக் கூடாது—தெரியுமா?"

"எனக்குத் தெரியும், ஸார்."

கெஸ்ட் போனதும் அட்டர்ஸன் கடிதத்தைப் பத்திரமாகத் தமது இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டினார். அன்று முதல் அது அங்கேயே இருந்தது. "என்ன இது? ஜெகில் ஒரு கொலைகாரனுக்காக, கள்ளக் கையெழுத்துப் போடுவதா?"

அவருடைய நரம்புகளில் ரத்தம் குளிர்ந்து ஓடியது.

## லான்யனுக்குத் தெரியும்?

காலம் கடந்தது. ஸர் டான் வெர்ஸின் மரணம் நாட்டுக்கே பெரும் நஷ்டம் எனக் கருதியதால், குற்றவாளியைக் கண்டு பிடிப்பவருக்கு ஆயிரக்கணக்கான பவுன்களைப் பரிசளிப்பதாகப் பிரகடனம் பண்ணப்பட்டது. ஆனால் ஹைட் மட்டும், ஒரேயடியாய் ஒழிந்தே போனதுபோல் போலீசாரின் பருந்துப் பார்வையிலிருந்து தப்பித்துக் கொண்டான். அவனுடைய பூர்வச் செயல்கள் பல அம்பலத்துக்குக் கொண்டு வரப்பட்டன; அவனைப் பற்றிய கதைகளெல்லாம் அவனுடைய குரூரமும் கொடுமையும்

நிறைந்த கடைகெட்ட வாழ்வைப் பற்றியதும், அவனுடைய விசித்திரத் தொடர்புகளைப் பற்றியதும், அவன் மீது உள்ள வெறுப்பினால் திரித்த கட்டுக் கதைகளைப் பற்றியதுமாய்த்தானிருந்தன. இருந்தும் அவன் தற்போது எங்கிருக்கிறான் என்பதைப் பற்றி மூச்சுப்பேச்சே கிடையாது. கொலை நடந்த தினத்தன்று ஸோஹோவிலுள்ள தனது வீட்டை விட்டுச் சென்றவன் அப்படியே மறைந்தொழிந்தான். காலம் செல்லச் செல்ல, அட்டர்ஸனும் தமது பீதியிலிருந்து தெளிந்து, பழைய நல்ல நிலைமையை அடைந்து வந்தார். ஹைட் மறைந்தொழிந்தான் என்று எண்ணும்போது, டான்வர்ஸின் மரணம் கூட அவருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. அந்தத் துஷ்ட சகவாசம் மறைந்தொழிந்ததும், ஜெகிலும் கூட புதுவாழ்வு எய்தி விட்டார். வீட்டுக்குள்ளேயே அடைத்துக் கிடந்தவர், வெளியிலே வந்து நண்பர்களோடு தோழமை பூண்டார்; விருந்துகளுக்குச் செல்வதும், இனிய வைபவங்களில் கலந்து கொள்வதும் அவர் வேலையாயிற்று. ஏற்கெனவே தமது தரும சிந்தைக்காகப் பெயர் பெற்றவர்; இப்போது அவர் மத விஷயங்களிலும் கலந்து நல்ல பேரெடுத்தார். மிகுந்த சுறுசுறுப்பு அவரிடம் குடிகொண்டது. அடிக்கடி வெளியில் வந்தார்; நல்லதைச் செய்தார். அவருடைய ஆத்ம திருப்தியின் பூரிப்பினால் அவருடைய முகம் கூட மலர்ந்து ஒளி வீசுவது போலிருந்தது. இப்படி இரண்டு மாத காலமாக ஜெகில் நிம்மதியுடனிருந்தார்.

ஜனவரி எட்டாம் தேதியன்று டாக்டர் ஜெகிலின் வீட்டில் நடந்த குட்டி விருந்துக்கு அட்டர்ஸனும் சென்றிருந்தார். லான்யனும் வந்திருந்தார். அவர்கள் மூவரும் இணைபிரியாதிருந்த அந்தப் பழைய நட்பை எண்ணி எண்ணி, ஜெகில் அவர்களை மாறி மாறிப் பார்த்தார். பன்னிரண்டாம் தேதியும், பதினாலாம் தேதியும் வக்கீல் சென்றபோது, அவர் உள்ளே செல்ல முடியவில்லை. "டாக்டர் வீட்டுக்குள்ளேயே தானிருக்கிறார். ஆனால் யாரையும் பார்ப்பதில்லை" என்றான் பூல். பதினைந்தாம் தேதியன்றும் இதே மறுதளிப்புத்தான். கடந்த இரண்டு மாத காலமாகத் தமது நண்பரை நாள் தவறாமல் சந்தித்து வந்த அட்டர்ஸனுக்கு, இந்தத் தனிமை மனத்தில் மீண்டும் பாரமேற்றியது. ஐந்தாம் நாள் இரவு அவர் தம்மோடு உணவுண்ண, கெஸ்டை

அழைத்திருந்தார். ஆனும் நாள் டாக்டர் லான்யனோடு கலந்து கொண்டார்.

அங்கு அவருக்கு வரவேற்புக் கிடைத்தது. ஆனால், அங்கு சென்றதும் டாக்டர் லான்யன் முகத்தில் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனார். அவர் முகத்தில் சாவின் நிழல் அழுத்தமாக வரையப் பெற்றிருந்தது. செக்கச் சிவந்த அந்த மனிதர் வெளுத்துப் போனார்; சதை குறைந்து விட்டது. தலையிலே வழுக்கையும், முதுமையும் தட்டியிருந்தது. ஆனால், சரீரம் க்ஷீணமெய்தி யிருப்பது கூட அவருக்குப் பெரிதாகப்பட வில்லை. அவருடைய பித்துப் பிடித்த பார்வையும் மனத்தின்மேல் இருந்து அமுக்கும் பயங்கரத்தை வெளிக்காட்டும் நடவடிக்கையுந்தான் அவருக்குப் பெரிதாகப் பட்டன. டாக்டர் மரணத்துக்கு அஞ்சுபவரில்லை; இருந்தாலும் அட்டர்ஸனுக்கு அதில் சந்தேகம் எழுந்தது. "சரி, அவர் ஒரு டாக்டர். அவருடைய உடல் நிலை அவருக்குத் தெரியும். இன்னும் தனக்கு எத்தனை நாள் வாழ்வு என்பது அவருக்குத் தெரிந்திருக்கும், அந்த எண்ணத்தைத்தான் அவரால் தாங்க முடிய வில்லை" என்று அட்டர்ஸன் நினைத்தார். ஆனால், அட்டர்ஸன் அவருடைய உடல்நிலை பற்றிவிசாரித்தபொழுது, அவர் மிகுந்த தைரியத்துடன் தான் விரைவில் சாவது நிச்சயம் எனச் சொன்னார்.

"ஒரு அதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. அதிலிருந்து இனி நான் மீள முடியாது, என் பிழைப்பு இன்னும் சில வாரங்கள் தான். வாழ்க்கை இன்பமயமானது தான். நான் அதை விரும்பினேன்; வாழ்வை நான் விரும்பியதுண்டு. அதை முற்றும் அறிந்து விட்டால், இந்த வாழ்வை விட்டு சந்தோஷமாகச் செல்லலாம் என்று நான் எண்ணியதுண்டு."

"ஜெகிலுக்கும் உடம்பு சரியில்லையாம். நீ அவனைப் பார்த்தாயா?" என்றார் அட்டர்ஸன்.

லான்யனின் முகம் மாறியது. அவர் கை நடுங்கிற்று. அதை அழுத்தி நிறுத்தினார். "டாக்டர் ஜெகிலைப் பார்க்கவோ, அவனைப் பற்றி பேசவோ நான் விரும்பவில்லை" என்றார். அவர் குரல் கனத்தது, தடுமாறிற்று. "அவனுக்கும் எனக்கும் முற்றும்

தொடர்பற்றுப் போயிற்று. என் சம்பந்தப்பட்ட மட்டில் அவன் இறந்து போனன் என்றே இருக்கிறேன். மீண்டும் அவனை ஞாபகமூட்டி, என் மனப் புண்ணைக் கிளருதே.''

''சேச்சே! இது விஷயத்தில் நான் ஏதாவது செய்ய முடியுமா? நாம் மூவரும் வெகு கால நண்பர்களாயிற்றே, லான்யன்? அதை நாம் மீண்டும் சரிப்படுத்தி விட முடியாதா?''

''ஒன்றுமே செய்ய முடியாது. அவனையே நீ கேட்டுப் பாரேன்'' என்றார் லான்யன்.

''அவன் என்னைப் பார்க்கவே மாட்டான்.''

''ஆச்சரியப் படுவதற்கில்லை. அட்டர்ஸன், நான் இறந்த பிறகு ஒருவேளை நீ உண்மையை அறிய நேரலாம். அதை இப்போது என்னல் சொல்ல முடியாது. அதுவரையில் நீ என்னோடு வேறு ஏதேனும் பேசுவதென்றால் பேசு. கடவுள் புண்ணியமாய் அப்படிச் செய். இந்தப் பேச்சு தவிர வேறு பேசுவதற்கு இல்லையென்றால், தயை செய்து எழுந்துபோய் விடு. என்னல் அதைத் தாங்க முடியாது.''

வீட்டிற்குச் சென்றதும் அட்டர்ஸன் எழுத உட்கார்ந்தார். ஜெகில் ஏன் இப்படி வீட்டுக்குள்ளே யாரையும் விடாமலிருக்கிறான் என்றும், லான்யனுக்கும் ஜெகிலுக்கும் ஏன் சிநேகம் முறிந்தது என்றும் கேட்டு எழுதி அனுப்பினார். மறுநாள் அதற்குப் பதில் வந்தது. நீண்ட பதில். பரிதாபகரமான வார்த்தைகள் நிரம்பியிருந்தன. சில இடங்களில் கடிதத்தில் ஏதோ மூடு மந்திரமிருப்பதாகத் தோன்றிற்று. ''லான்யனுடன் ஏற்பட்ட சச்சரவுக்குச் சிகிச்சை கிடையாது. நான் நமது பழைய சிநேகிதனைக் குறைகூற வில்லை. ஆனல், அவன் சொல்வதுபோல், நாம் இனிச் சந்திக்காமலிருக்க வேண்டும் என்பதை நானும் விரும்புகிறேன். அதாவது, நான் அத்துவானத் தனிமையில் தான் வாழ விரும்புகிறேன். இதைக் கண்டு நீ ஆச்சரியப்படக் கூடாது; நட்புரிமையைச் சந்தேகிக்கக் கூடாது—என் வீட்டுக்குள் வர உனக்கு அனுமதியில்லாமல் போயினும் கூட, என்னை என் வழியிலேயே செல்ல விட்டுவிடு. வாய்விட்டுச் சொல்ல இயலாத ஒரு தண்டனையையும் ஆபத்தையும் நானே விலைக்கு

வாங்கி விட்டேன். நான்தான் உலகிலேயே கொடிய பாதகன் என்ருல், நான்தான் உலகிலுள்ள கொடிய நரக வேதனைக்கும் ஆளானவன். மனிதனையே உருக்குலைக்கும் பீதியும், துன்பமும் இவ்வுலகில் இவ்வளவு நிறைந்திருக்கும் என்று என்ஞல் எண்ணவே முடியவில்லை. அட்டர்ஸன், என் தனிமையை நீ மதித்து நடந்தால், என் தலைவிதியை நீ ஓரளவு குறைக்கலாம்'' என்று ஜெகில் எழுதியிருந்தார். அட்டர்ஸன் பிரமித்துப் போனுர். ஹைடின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட ஜெகில், முன் மாதிரி வெளி வந்து பழகினுரே. ஒரு வாரத்துக்கு முன் கூட, வயது காலத்தின் அமைதியும் களிப்பும் ஏற்பட்டிருந்தது போலிருந்ததே. அதற்குள்ளாகவா, அந்த நட்பு, மன அமைதி, வாழ்வின் கதி—எல்லாம் சிதறித் திசைமாற வேண்டும்? இப்படிப்பட்ட பெரும் மாற்றம் பைத்தியத்துக்குத்தான் அறிகுறி. ஆனுல் லான்யனுடைய நடவடிக்கையையும் பேச்சையும் கவனித்தால், இதற்கெல்லாம் வேறு ஏதோ ஆழ்ந்த காரணம் இருக்கிறது என்றுதான் படுகிறது.

ஒரு வாரம் கழித்து டாக்டர் லான்யன் படுக்கையில் கிடந்தார்; இரண்டு வார காலத்துக்குள் அவர் இறந்து போனுர். பிரேத அடக்கம் ஆன மறுநாள் இரவு, அட்டர்ஸன் கவலை தோய்ந்தவராய், தாளிடப்பட்ட தமது அறைக்குள்ளே, மங்கி யெரியும் மெழுகுவத்தி ஒளியில் அமர்ந்திருந்தார். தமது இறந்து போன நண்பரின் சொந்தக் கைப்பட எழுதப்பட்டு, முத்திரையும் வைக்கப்பட்டிருந்த ஒரு கவரை எடுத்தார். அதன்மேல், "அந்தரங்கம். ஜே. ஜி. அட்டர்ஸனுக்கு மட்டும். எனக்கு முன் அவர் இறந்தால், இதை உடைக்கப்படாமலே அழித்து விட வேண்டியது'' என்ற குறிப்புக் காணப்பட்டது. அட்டர்ஸன் அதை உடைத்து, அதிலுள்ளவற்றைப் படித்து அறிந்துகொள்ளவே நடுங்கினுர். "இன்று என் நண்பன் ஒருவன் புதையுண்டதைப் பார்த்தாய் விட்டது. இதில் இன்ஞெரு நண்பனின் முடிவு இருக்குமோ?'' என்று எண்ணினுர். பிறகு அந்தப் பயம் தமது நாணயத்துக்கு நல்லதல்ல என்று மனத்தில் படவே, முத்திரையை உடைத்தார். அந்தக் கவருக்குள் மற்ஞெரு கவர் இருந்தது. இதே மாதிரி அதற்கும் ஒரு முத்திரை; ஒரு குறிப்பு: "டாக்டர் ஹென்றி ஜெகில் இறக்கும் வரையிலோ, மறையும்

வரையிலோ இது திறக்கப்படக் கூடாது.'' அட்டர்ஸனுக்குத் தம் கண்களையே நம்ப முடியவில்லை. ஆம், இதிலேயும் 'மறை வை'த்தான் காணுகிறேன். அந்தப் பைத்தியக்கார உயிலைப் போல்—தாம் ஜெகிலிடமே திருப்பிக் கொடுத்துவிட்ட அந்த உயிலில் குறிப்பிட்டபடியே, இதிலேயும் ஜெகிலின் மறைவைத் தான் குறிப்பிட்டிருந்தது. உயிலிலுள்ள அந்த ஷரத்து ஹைடின் தூண்டுதலால் ஏற்பட்டது. அதன் பயங்கர அர்த்த மும் நன்றாகப் புரிந்துவிட்டது. ஆனால், லான்யன் எழுதியுள்ள இந்தக் கடிதத்துக்கு என்ன அர்த்தம்? தமது பொறுப்புணர்ச் சியை யெல்லாம் புறக்கணித்து, அந்தக் கடிதத்துக்குள் புதைந்து கிடக்கும் மர்மங்களை யெல்லாம் அறியவேண்டும் என்ற ஆசை அவரை அலட்டியது. எனினும் உத்தியோக கௌரவ மும், நட்புரிமையும் அவரைத் தடுத்தன. உடனே அதைத் தமது இரும்புப் பெட்டியின் கள்ள அறையிலே பத்திரமாக வைத்துப் பூட்டிவிட்டார்.

ஆவலை அடக்குவதும், வெல்லுவதும் தனித்தனி விஷ யங்கள். அந்த நாள் முதல், அட்டர்ஸனுக்கு உயிரோடிருக்கும் தமது நண்பரான ஜெகிலுடன் பழகவேண்டும் என்ற ஆசை இருந்ததா என்பது சந்தேகம். அவரைப்பற்றி அன்போடுதான் எண்ணினார். ஆனால் அவருடைய எண்ணங்கள் அமைதி யிழந்து பயப்படத்தான் செய்தன. அவரைச் சந்திக்கவும் போனார். அங்கு கிடைத்த மறுதளிப்பு அவருக்குத்திருப்திகூடத் தந்திருக்க லாம். தன்னைத்தானே அடைத்துக் கொண்டு கிடக்கும் ஒருவ ரோடு பேசுவதைக் காட்டிலும், ஜனசந்தடிக்கு மத்தியில், வாசல் நடையில் நின்று, பூலுடன் பேசுவதே நல்லது என்று அவர் நினைத்தார். பூலும் பேசுவதற்கும் அப்படியொன்றும் இனிமையான விஷயங்கள் வைத்திருக்கவில்லை. டாக்டர் இப் போதெல்லாம் ரசாயன சாலைக்குப் பக்கத்திலுள்ள தனி அறை யிலே தான் இருக்கிறாராம். சமயங்களில் அங்கேயே தூங்கி விடுவாராம். உற்சாகமிழந்து, மௌனமாய்க் கிடக்கிறாராம். படிப்பது கூட இல்லையாம். மனத்தில் ஏதோ கவலைகொண்டிருப் பதுபோலிருக்கிறாராம். இதே விஷயத்தை ஒரு சிறிது மாறுதலு மில்லாமல் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போன அட்டர்ஸன் அங்கு போவதையே சிறிது சிறிதாய் நிறுத்தி விட்டார்.

## ஜன்னலில் கண்டது.

வழக்கம்போல் இந்த ஞாயிற்றுக்கிழமையும் என்பீல்டும் அட்டர்ஸனும் உலவப்போன போது, மீண்டும் அந்தச் சின்னச் சந்தின் வழியாகச் செல்ல நேர்ந்தது. அந்த வீட்டின் முன் சென்றதும் இருவரும் அதை ஏறிட்டுப் பார்த்தார்கள்.

"அந்தக் கதை ஒரு மட்டும் முடிந்து தொலைந்தது. ஹைடைப்பற்றி இனி எந்தச் செய்தியையும் காணமுடியாது" என்று ஆரம்பித்தார் என்பீல்ட்.

"நான் அப்படி நினைக்கவில்லை, நானும் அவனை ஒரு தரம் சந்தித்து, உன்னைப் போலவே அவன் மீது வெறுப்படைந்தேன் என்பதை உன்னிடம் சொல்லவில்லையா?"

"அவனைப் பார்த்தாலே அப்படித்தான், சரி: இன்னொரு சங்கதி. டாக்டர் ஜெகிலின் வீட்டுக்கு இது புறவாசல் என்பதே எனக்கு அப்போது தெரியாது. இதை நான் தெரிய வந்ததே உன்னால்தான்" என்றார் என்பீல்ட்.

"ஓஹோ, தெரிந்து கொண்டு விட்டாயோ? அப்படியானால், தாழ்வாரத்தில் நுழைந்து, ஜன்னல்களை யெல்லாம் ஒரு சுற்றுச் சுற்றிப் பார்ப்போமே. உண்மையைச் சொல்லப்போனால், ஜெகிலைப்பற்றி நான் கவலைப்பட்டுக் கொண்டேயிருக்கிறேன். வெளியில் நின்றாலும்கூட, ஒரு நண்பனின் வரவு அவனுக்கு ஆறுதலளிக்கும்" என்றார் அட்டர்ஸன்.

தாழ்வாரம் குளுமையாயிருந்தது; ஈரமாயுமிருந்தது. அஸ்தமனம் நெருங்காவிடினும், அதற்குள் மஞ்சள் வெயில் அடிக்க ஆரம்பித்து விட்டது. அந்த மூன்று ஜன்னல்களில் மத்தியிலுள்ள ஜன்னல் பாதி திறந்து கிடந்தது. அந்த ஜன்னலோரம் அமர்ந்து, அமைதியற்ற கைதியைப் போல, சோகமே உருவாய் அமர்ந்திருந்தார், டாக்டர் ஜெகில்.

"ஜெகில், ஜெகில்! சௌக்கியமா?" என்று சத்தமிட்டார் அட்டர்ஸன்.

"இல்லை. ரொம்பவும் தளர்ந்து போய்விட்டேன், ரொம்ப காலம் தாங்காது" என்று பதில் வந்தது.

"இருந்தாலும், நீ வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறாய். வெளியில் வந்து உலாவினால், ரத்த ஓட்டமும் விறு விறுப்படையும். என்னையும் என்பீல்டையும் பார். என்பீல்டா? இவர் என் மைத்துனர், ஜெகில்—வெளியே வா. தொப்பியை மாட்டிக்கொள். எங்களோடு சிறிது உலவிவிட்டு வரலாம், வா."

"ரொம்ப சந்தோஷம்! நீ சொல்வதுபோல் செய்ய எனக்கும் விருப்பந்தான். ஆனால்—அது முடியாது, அட்டர்ஸன். எனக்குத் துணிவு இல்லை. உன்னைப் பார்த்ததற்காக, நான் மகிழ்ச்சியடைகிறேன். எனக்குப் பரம சந்தோஷம். உங்கள் இருவரையும் மேலே அழைக்க வேண்டுமென்று ஆசைதான். ஆனால், இந்த இடம் இப்போது அதற்கு வசதிப்படாது."

"அது எதற்கு? இப்போது நாம் இருக்கும் இடங்களிலிருந்தே பேசிக் கொண்டால் போதுமே." என்றார் வக்கீல்.

"அதைத் தான் நானும் சொல்ல இருந்தேன்" என்று டாக்டர் புன்னகையோடு சொன்னார். ஆனால் வார்த்தைகள் விக்கித் திணறி வந்தன. புன்னகை முகத்தில் உருவெடுத்து மறையுமுன், முகத்தில் பயங்கரமும் பீதியும் உருவாயின. அவை கீழிருந்து பார்த்தவர்களின் ரத்தத்தை உறையச் செய்தது, ஒரே ஒரு கணம்தான் பார்த்தார்கள்—மறுகணம் ஜன்னல் அடைபட்டது. அந்த ஒரு கணம் பார்த்ததே போதும். ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அவர்கள் வாய் மூடி வெளியே வந்தார்கள். தெருவிலும் மௌனமாகவே நடந்தார்கள். ஞாயிற்றுக்கிழமையிலும் ஓரளவு சந்தடியுள்ள இடத்துக்கு வந்தவுடன்தான் அட்டர்ஸன் தம் நண்பரை ஏறிட்டுப் பார்த்தார். இருவரும் முகம் வெளுத்துப் போயிருந்தனர். இருவர் கண்களிலும் அர்த்தம் கலந்த பயங்கரம் ததும்பியது.

"கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!" என்றார் அட்டர்ஸன்.

என்பீல்ட் தலையை மட்டும் ஆட்டி விட்டு, மௌனமாகவே நடக்க ஆரம்பித்தார்.

## கடைசி இரவில்—

ஒரு நாள் மாலை சாப்பாட்டிற்குப் பின் அட்டர்ஸன் கணப் புக் குழியருகே உட்கார்ந்திருந்தார். அப்போது பூல் எதிர்பாராத விதமாய் அங்கு வந்து சேர்ந்தான்.

"என்னப்பா, பூல்! என்ன விஷயம்?" என்று கேட்டுவிட்டு, "சௌக்கியந்தானே. டாக்டருக்கு உடம்பு சௌக்கியமில்லையா?" என்றார்.

"ஸார், ஏதோ பெருந் தவறு ஏற்பட்டிருக்கிறது."

"உட்கார், இந்த மதுவை அருந்து. நீ சொல்ல விரும்புவதை ஆர அமரச் சொல்லு."

"உங்களுக்குத்தான் டாக்டருடைய போக்குத் தெரியுமே—அவர் அடைத்துக் கொண்டு கிடப்பதை. இப்போதும் அப்படித் தான். இதுமாதிரி இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை, ஸார். இதைவிட நான் செத்துப் போகலாம் போலிருக்கிறது. எனக்கு ஒரே பயமாயிருக்கிறது, அட்டர்ஸன்" என்றான்

"தெளிவாய்ச் சொல்லு. நீ எதைக் கண்டு பயப்படுகிறாய்?"

"ஒரு வாரமாய் எனக்கு ஒரே பயமாயிருக்கிறது, ஸார். என்னால் இதைத் தாங்க முடியாது" என்று அவர் சொன்னதைக் காதில் வாங்காமலே பேசினான்.

அவனுடைய தோற்றமே அவனுடைய பேச்சை மெய்ப் பித்தது. அவனுடைய நடத்தை கூடச் சிதைவுற்றிருந்தது. அவனுடைய பயத்தைப் பற்றிச் சொன்ன அந்த ஒரு கணந் தவிர, அவன் வக்கீலை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அந்த மதுக் கோப்பையில் இன்னும் வாய் வைக்காமலேயே இருந்தான்; அவனுடைய பார்வை எங்கோ ஒரு மூலையில் பதிந்திருந்தது. "இதை என்னால் தாங்க முடியாது ஸார்" இதை அவன் திரும்பவும் சொன்னான்.

"நீ சொல்வதில் அர்த்தமிருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். ஏதோ பெருந் தவறு நடந்துவிட்டது என்

பதை என்னால் காண முடிகிறது. அது என்ன என்று சொல் லேன்" என்றார் வக்கீல்.

"ஏதோ மோசடி நடந்திருக்கிறது ஸார்" என்று கரகரத் துச் சொன்னான்.

"மோசடியா? என்ன மோசடி? நீ என்ன சொல்கிறாய்?" என்று பயந்து போய், அவசரப்பட்டுக் கேட்டார் வக்கீல்.

"எனக்குச் சொல்ல நா எழவில்லை. என்னோடு வந்து, தாங்களே நேரில் பார்த்துக் கொள்ளுங்கள்."

அட்டர்ஸன் தமது பதிலைச் செயலிலே காட்டினார். கோட் டையும் தொப்பியையும் மாட்டிக் கொண்டு கிளம்பினார். அவர் கிளம்பியதைப் பார்த்ததும் அவன் முகத்தில் பிரகாசமான தெளிவு ஏற்பட்டது. அந்த மதுவை ருசிபார்க்காமலே அவர் பின் தொடர்ந்தான்.

மார்ச் மாதத்துக் குளிரடிக்கும் இரவு. காற்றினால் சாய்க் கப்பட்டதுபோல், மங்கிய பிறை வளைவு ஒதுங்கி ஒருச்சாய்த் துக் கிடந்தது. ஒளி பொருந்திய மேகப் படலங்கள் விரைவா கச் சென்றன. காற்றின் சிலுசிலுப்பு பேச்சைக் கூடக் கட்டி யது, முகம் குளிரால் விறைத்தது. தெருவில் ஜனநடமாட்டமே இல்லை; துடைத்து விட்டாற்போல் அத்தனை சூன்யம். அட்டர் ஸன் லண்டனில் அந்தப் பாகத்தை அத்தனை நிர்மானுஷ்யமாய் தாம் கண்டதேயில்லை என்று நினைத்தார். அப்படி இருக்கக் கூடாது என விரும்பினார். தமது சகோதரப் பிராணிகளோடு ஒட்டிப் பழகவேண்டும் என்ற தீரா ஆவல் அவர் மனத்தில் கிளர்ந்தது. ஏனெனில் ஒரு பெரும் விபத்து நேர்ந்து விட்டது என்ற விலக்க முடியாத எண்ணம் அவருடைய மனத்தில் விழுந்துவிட்டது. அந்தத் தெருவை அவர்கள் நெருங்கியதும் ஒரே பேய்க் காற்றும் புழுதியும் வாரியடித்தன. தோட்டத்தி லிருந்த ஒடிசலான மரங்கள் வளைந்து வளைந்து வேலிக் கம்பி களில் மோதி விளாசின. இரண்டடி முன்னாலேயே சென்று கொண்டிருந்த பூல் அந்தத் தளத்துக்கு வந்தவுடன் தொப்பியை எடுத்துவிட்டு முகத்து வியர்வையைத் துடைத்துக் கொண் டான்—அத்தனை குளிரிலும் அவன் முகம் வியர்த்தது! வேக

மாய் நடந்து வந்ததனால் வியர்த்த துளிகளல்ல அவை; இதயத்தைப் பிழியும் பயங்கரத்தினால் ஏற்பட்ட வியர்வைதான் அது. அவன் முகம் வெளுத்துவிட்டது; குரல் கரகரத்து உடைந்து போயிருந்தது.

"வந்துவிட்டோம். கடவுள் கிருபையால் இங்கு எதுவும் தப்புத் தண்டா நடந்திருக்கக் கூடாது, ஸார்" என்றான் அவன்.

"என் பிரார்த்தனையும் அதுதான், பூல்!" என்றார் வக்கீல்.

வேலைக்காரன் கதவை மெதுவாய்த் தட்டினான். கதவும் மெதுவாய்த் திறக்கப்பட்டது. உள்ளே இருந்து ஒரு குரல் "பூல், நீ தானா?" என்றது.

"ஆமாம். கதவைத் திற."

ஹாலுக்குள் அவர்கள் நுழைந்தார்கள். அங்கு விளக்குகள் ஏற்றப்பட்டு ஒளிமயமா யிருந்தது. கணப்புத் தீ உயரமாக எரிந்து கொண்டிருந்தது. கணப்பைச் சுற்றி வேலைக்காரர்கள் எல்லோரும் ஆட்டுமந்தைபோல் குழுமிக் கிடந்தார்கள். அட்டர்ஸனைக் கண்டவுடன் வேலைக்காரி, "மிஸ்டர் அட்டர்ஸனா?" என்று கூவிக்கொண்டே, அவரைத் தழுவ வருவது போல் ஓடி வந்தாள்.

"என்ன? நீங்கள் எல்லோருமே இங்கே கூடி இருக்கிறீர்கள். ரொம்ப மோசம். கொஞ்சங் கூடப் பொறுப்பின்றி— உங்கள் எஜமானருக்கு இப்படித்தான் சேவை செய்கிறதோ!" என்று கேட்டார் அட்டர்ஸன்.

"எல்லோருக்கும் ஒரே கிலி, ஸார்" என்றான் பூல்.

மௌனம் குடிகொண்டது. யாரும் பதில் சொல்லவில்லை. வேலைக்காரி மட்டும் திடீரென்று வாய்விட்டு அழ ஆரம்பித்து விட்டாள்.

"சீ, வாயை மூடு" என்று அதட்டினான் பூல். அவனுடைய நரம்புகள் எவ்வளவு தளர்ச்சியடைந்திருந்தன என்பதை அந்தக் குரலே காட்டிற்று. அந்தப் பெண் இப்படிக் குரலெழுப்பி அழவே எல்லோரும் ஏதோ ஒரு விபத்தை எதிர்நோக்குபவர்கள்போல், அந்த உள் கதவை உற்றுப் பார்த்தார்கள். பூல்

பக்கத்திலிருந்த பையனை நோக்கி, "போய், ஒரு விளக்கேற்றிக் கொண்டு வா. விஷயத்தைக் கையும் மெய்யுமாய்க் கண்டு பிடித்து விடுவோம்" என்று உத்தரவிட்டான், பிறகு அட்டர்ஸனை தன்னைத் தொடர்ந்து வரும்படி வேண்டிக்கொண்டு, தோட்டப் பக்கம் சென்றான்.

"ஸார், எவ்வளவு மெதுவாய் வர முடியுமோ, அவ்வளவு மெதுவாய் வாருங்கள். எல்லாவற்றையும் உற்றுக் கேளுங்கள். நீங்கள் பேசுவது கேட்கவே கூடாது. ஒரு விஷயம். எக்காரணம் கொண்டும் அவர் உள்ளே அழைத்தால்கூட நீங்கள் போகக் கூடாது" என்றான்.

அட்டர்ஸனின் நரம்புக் கால்கள் சிலிர்த்து நடுங்கி, அவருடைய நிதான நிலையைத் தவறச் செய்தது. தன்னுடைய தைரியத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, பூலைத் தொடர்ந்து ரசாயன சாலையைத் தாண்டி, ரணசிகிச்சைத் தளத்தின் வழியாக, புட்டிகளையும் பெட்டிகளையும் கடந்து, படிக்கட்டருகே வந்து சேர்ந்தார். ஒரு ஓரமாய் நின்று உள்ளே நடப்பவற்றை உற்றுக் கேட்கச் சொன்னான் பூல், அவன் மெழுகுவத்தியைக் கீழே வைத்துவிட்டு, தீர்மானமான மனத்துடன் படிக்கட்டுகளின் வழியாய் ஏறி, அறைக் கதவைத் தட்டுத் தடுமாறித் தட்டினான்.

"அட்டர்ஸன் உங்களைப் பார்க்க விரும்புகிறார்" என்றான். சொல்லும்போதே, அட்டர்ஸனை உற்றுக் கேட்கும்படி சமிக்ஞை செய்தான்.

உள்ளே இருந்து ஒரு குரல் பதிலளித்தது. "நான் யாரையும் பார்க்க முடியாது என்று சொல்" என்றது எரிச்சலுடன்.

"நல்லது ஸார்" என்று சொன்னான், அவன். அவன் தொனியில் வெற்றியின் பெருமிதம் இருந்தது. பிறகு மெழுகு வத்தியை எடுத்துக் கொண்டு அட்டர்ஸனை, பின்புறத்து வழியாகச் சமையலறைப் பக்கம் இழுத்துச் சென்றான். அங்கு நெருப்பு அணைந்து கிடந்தது; வண்டுகள் தரையில் பறந்து மோதி மோதி விழுந்து கொண்டிருந்தன.

"ஸார், அது எங்கள் எஜமானரின் குரலா?" என்றான் பூல், அட்டர்ஸனை நோக்கி.

"மிகவும் மாறிவிட்டதே!" என்று பதில் அளித்தார். வெளிறிய முகத்தோடு பூலே அவரும் பார்த்தார்.

"மாறிவிட்டதா? ஆமாம். நானும் அப்படித் தான் நினைக்கிறேன். நானும் இந்த வீட்டில் இருபது வருஷ காலமாய் வேலை செய்கிறேன். என்னையே இந்தக் குரல் ஏமாற்றுகிறதே. இல்லை ஸார், இல்லை. என் எஜமானர் உள்ளே இல்லை. அவர் மறைந்து எட்டு நாட்களாய் விட்டன, ஸார். அன்றொரு நாள் அவர் கடவுள் பெயரைச் சொல்லிக் கத்தியது எங்கள் காதில் நன்றாக விழுந்தது. அவருக்குப் பதிலாக உள்ளே இருப்பது யார், அவர் எதற்காக இருக்கிறார் என்பதுதான் புரியவில்லை."

"நீ சொல்வது விசித்திரமான கதை, பூல். மோசமான கதை;" என்று விரலைக் கடித்துக் கொண்டே சொன்னார், அட்டர்ஸன்: "நீ சொல்வது போலவே வைத்துக் கொள்வோம்; டாக்டர் ஜெகிலைக் கொலை செய்தாகி விட்டது என்றே வைத்துக் கொள்வோம். கொலை செய்தவனுக்கு உள்ளே என்ன சோலி? அதற்கென்ன காரணம்? நீ சொல்வதில் அப்போது அர்த்தமில்லாமல் அல்லவா போய்விடுகிறது?"

"உங்களைத் திருப்திப்படுத்துவது சிரம சாத்தியந்தான். எனினும், திருப்திப்படுத்துகிறேனோ இல்லையா, பாருங்கள்" என்று ஆரம்பித்தான் பூல்." போனவாரம் அவர் அல்லது அது (அந்த அறைக்குள் இருப்பது என்ன எழவாயுமிருக்கட்டும்) ராவும் பகலும் ஏதோ ஒரு மருந்தின் பெயர் ஞாபகத்துக்கு வராமல்ஒரே கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தது. சமயங்களில் என் எஜமானர், தமக்குத் தேவையானவற்றை எழுதி மாடிப்படிகளில் விட்டெறிந்து விடுவார். சென்ற வாரம் முதற் கொண்டு, இதைத் தவிர வேறு எதுவும் நடக்கவில்லை. கதவு மூடினது மூடினபடிதான்; படிக்கட்டில் துண்டுக் கடுதாசி விழுந்த வண்ணந்தான். சாப்பாட்டைக்கூட வைத்து விட்டுப் போய்விட வேண்டும். யாருங் காணாத வேளையில் உணவை உள்ளே எடுத்துக் கொண்டு விடுகிறார். ஒவ்வொரு நாளும், இரண்டு மூன்று தடவை இம்மாதிரியான உத்திரவுச் சீட்டுக்கள். லண்டனிலுள்ள மருந்துக் கடைக்கெல்லாம் ஓடியோடிப் போவதே எனக்கு வேலையாய்ப் போய்விட்டது. போய், சரக்கைக்

கொண்டு வந்தால், அதைத் திருப்பிக் கொடுத்து விட்டு வேறு சுத்தமான நல்ல மருந்தை வாங்கி வரும்படி உத்தரவுச் சீட்டு விழும். அந்த மருந்துக்கு ஏனோ அத்தனை அவசியம் ஏற்பட்டிருந்தது, ஸார்.''

"அந்தக் கடுதாசி ஏதேனும் உன்னிடம் இருக்கிறதா?'' என்றார் அட்டர்ஸன்.

பூல் பையில் கையைவிட்டு ஒரு கசங்கிப்போன கடிதத்தை எடுத்து வக்கீலிடம் நீட்டினான். மெழுகுவத்தி ஒளியில் குனிந்து நின்று அட்டர்ஸன் அதை வாசிக்க ஆரம்பித்தார். "டாக்டர் ஜெகில் மெஸர்ஸ் மா கம்பெனிக்கு வணக்கத்தோடு எழுதுவது: தாங்கள் அனுப்பிய மாதிரி மருந்து அசுத்தமாயும் உபயோகமற்றதாயுமிருப்பதால், டாக்டரின் உடனடியான காரியத்துக்கு உபயோகப்படவில்லை. 18—வருஷம் டாக்டர் ஜெகில், இந்த மருந்தை ஓரளவு அதிகமாகவே வாங்க நேர்ந்தது. கம்பெனியார் தயை செய்து மிகவும் கவனத்தோடு அந்த மருந்து எவ்வளவிருந்தாலும் அவற்றை அனுப்பிவைக்க வேண்டியது. செலவைப்பற்றிக் கவலையில்லை. இந்த மருந்தின் அவசியத்தை இதில் எழுதி முடியாது,'' இதுவரையிலும் அந்தக் கடிதம் ஒழுங்காகவே எழுதப்பெற்றிருந்தது; அதன் பிறகு, பேனா நடுநடுங்கி, எழுதியவரின் உணர்ச்சி சிதறிப்போனதையே எழுத்துக்கள் எடுத்துக் காட்டின: "உங்களுக்குப் புண்ணியம் உண்டு. அந்தப் பழைய சரக்கை எப்படியேனும் கண்டுபிடித்தனுப்பவும்.''

"இந்தச் சீட்டு விசித்திரமானதுதான். இது எப்படி உன் கையில் கிடைத்தது?'' என்றார் அட்டர்ஸன்.

"மா கம்பெனி ஆசாமி ரொம்பவும் கோபப்பட்டு, இதை என்னிடமே தூக்கி எறிந்து விட்டான், ஸார்.''

"இது டாக்டரின் கையெழுத்துத்தான். உனக்குத் தெரிகிறதா?''

"அப்படித்தான் தோன்றியது என எண்ணினேன்.'' என்று முணு முணுத்துவிட்டு, "எழுத்து என்ன ஸார், பிரமாதம்? நான் உள்ளே இருக்கும் ஆசாமியையே பார்த்து விட்டேனே!'' என்றான்.

"பார்த்திருக்கிருயா? பிறகு—"

"இப்படித்தான் ஒரு நாள்—தோட்டத்திலிருந்து நான் ஆபரேஷன் தளத்தருகே வந்துவிட்டேன். அப்போது ஏதோ ஒரு மருந்தையோ, வேறு எதையோ தேடுவதற்காக வெளியே வந்திருக்கிருர். ஏனெனில் அந்த அறைக் கதவு திறந்து கிடந்தது. அவரும் அறையின் கடைக் கோடியில், சீசாக்களி டையே எதையோ உருட்டிக் கொண்டிருந்தார். நான் வந்ததை அவர் நிமிர்ந்து பார்த்தார். உடனே ஒரு மாதிரியாகக் கத்திஞர். மாடிப்படி வழியாக ஏறி ஓடி அறைக்குள் மறைந்து விட்டார். ஒரே ஒரு நிமிஷந்தான் அவரை நான் பார்த்தேன். ஆனுல் அவ ரைப் பார்த்தேனே என்னவோ மண்டை மயிரெல்லாம் குத் திட்டு விறைத்து நின்று விட்டன. ஸார், அவர்தான் என்னு டைய எஜமானரென்ருல், முகத்துக்கு ஏன் மூடி போட்டிருக்க வேண்டும்? அவர்தான் என் எஜமானரென்ருல், என்னைக் கண்டவுடன் ஏன் எலிமாதிரிக் கத்திக்கொண்டு ஓடி ஒளிய வேண்டும்? எவ்வளவு காலமாய் நான் அவரிடம் வேலை பார்த்திருக்கிறேன். வந்து—" என்று ஆரம்பித்தவன் உணர்ச்சி மேலீட்டால் பேச முடியாமல், முகத்தை மூடிக் கொண்டான்.

"இவை யெல்லாம் விசித்திரமான சம்பவங்கள்தான். ஆனுல், எனக்கு இப்போதுதான் விஷயம் ஓரளவு தெளிவா கிறது. பூல், உடலமைப்பையே நாசமாக்கி, நோயாளியைக் கொடும் வேதனைக்குள்ளாக்கும் வியாதிகளைப் பற்றி உனக்குத் தெரியுமா? அதுமாதிரி ஏதோ ஒரு வியாதிதான் உன் எஜமான ரைப் பிடித்திருக்கிறது. ஆகையால்தான் குரலிலும்கூட ஒரு மாறுதல். அதனுல்தான், முகமூடியும், நண்பர்களைப் பார்க்க மறுப்பதும். எல்லாம் இந்த மருந்து கிடைத்தால் குணமாகும் என்று பாவம், அவர் நம்புகிருர் போலும். கடவுள் அவர் எண் ணம் போல் நடக்கச் செய்யட்டும். இதுதான் என்னுடைய முடிவு. இதுகூட வருந்தத் தக்கதுதான். இந்தக் காரணம் ஒன்றுதான் இயற்கைக்கு விரோதமில்லாமலும், சாத்தியமான தாகவும் இருக்கிறது. இந்த உணர்ச்சி நம்முடைய பீதியைப் போக்கடிக்க வில்லையா?" என்ருர்.

"ஸார். இது என் எஜமானரல்லதான். உண்மை இது தான்." என்று பயமடித்த முகத்தோடு சொன்ஞன். "என்

எஜமானர் நல்ல உயரமும் தேகக் கட்டும் உடையவர். இதுவோ ஒரு சித்திரக் குள்ளன் ஸார்'' என்றான். அட்டர்ஸன் அதை மறுக்க எண்ணினார். ''என்ன ஸார், இருபது வருஷ காலமாகியும் என்னுடைய எஜமானரை நான் அறியாமலா இருக்கிறேன்? அந்த அறைக்குள் அவர் நடமாடும்போது அவர் தலை முன்னெல்லாம் எனக்குத் தெரியுமே, ஸார்! இது டாக்டர் ஜெகிலே இல்லை. இது என்ன என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்!—இதுமட்டும் ஜெகிலாயிருக்கவே முடியாது. நான் நிச்சயமாக நம்புகிறேன். இங்கு ஒரு கொலை விழுந்து விட்டது, ஸார்!''

''பூல், நீ அப்படிச் சொல்லுவதாயிருந்தால், அதை நிரூபிப்பது என் கடமை. உன் எஜமானருடைய இஷ்டத்துக்கு மாறாக நான் நடக்கக் கூடாதென்றாலும்கூட, இந்தக் கடிதத்தால் அவர் சாகவில்லை என்பது நிச்சயமானாலுங்கூட, இந்தக் கதவை உடைத்தெறிவதுதான் என்னுடைய கடமை என நான் கருதுகிறேன்'' என்றார்.

''அப்படிச் சொல்லுங்கள். அதல்லவா, பேச்சு!'' என்றான் பூல்.

''சரி, இன்னொரு விஷயம். இதை யார் செய்வது?''

''ஏன், நாமிருவருந்தான், ஸார்'' என்று தயங்காமல் சொன்னான்.

''ரொம்ப நல்லது. என்ன வந்தாலும் அதனுடைய லாப நஷ்டத்துக்கு நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.''

''ஆபரேஷன் தளத்தில் ஒரு கோடரி இருக்கிறது. நீங்கள் தீயிடுக்கியை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றான் பூல்.

அட்டர்ஸன் அந்தக் கரடு முரடான கனத்த ஆயுதத்தைக் கையிலேந்திப் பார்த்தார். ''பூல், நாமிருவரும் பேராபத்தை எதிர் நோக்கித்தான் இதைச் செய்யத் துணிகிறோம் என்பது உனக்குத் தெரியுமல்லவா?'' என்று கேட்டார்.

''நீங்கள் சொல்லுவதில் எனக்கு ஆக்ஷேபணையே இல்லை ஸார்'' என்றான் பூல்.

"நாமிருவரும் மனம் விட்டு இப்போது பழகுவதுதான் நல்லது. நாம் பேசியதைவிட, மனத்தில்தான் பல விஷயங்கள் இருக்கின்றன. நாம் மனந் திறந்து பேசி விடுவோம். நீ கண்டாயே, அந்த முகமூடி உருவம். அதை நீ அடையாளம் கண்டு கொள்ள முடிந்ததா?"

"அது எத்தனை விரைவாய்ச் சென்றது! ஓரே ஓட்டமல்லவா ஓடியது! ஆதலால், அதைப் பற்றித் திட்டமாய் எதுவும் சொல்ல முடியாது. அதுதான் மிஸ்டர் ஹைட் என்று தாங்கள் நினைக்கிறீர்களா?—ஆம். அது ஹைடேதான் ஸார். அதே பருமன். அதே மாதிரி விறுட்டென்று தாவிச் செல்லும் நடை. மேலும் வேறு யார் ஸார், ரசாயனசாலை வழியாக உள்ளே வர முடியும்? கொலை நடந்த காலத்தில்கூட, அந்த வாசற் கதவின் சாவி அவரிடமேதான் இருந்தது. நீங்கள் அதை மறந்து விடவில்லையே, ஸார்! அது மட்டுமல்ல. நீங்கள் அவரை எப்போதாவது சந்தித்திருக்கிறீர்களா?"

"ஆம். ஒரு தடவை அவரோடு நான் பேசியுமிருக்கிறேன்."

"பின் உங்களுக்கும் எல்லோரையும் போல் தெரிந்திருக்க வேண்டுமே—அந்த மனிதனின் விசேஷத்தை! அவரைப் பார்ப்பவனுக்கு ஒரு சிலிர்ப்பு ஏற்படும். அந்த உணர்ச்சியை என்னவென்று என்னால் சொல்ல முடியவில்லை. எலும்புக் குருத்துக்குள் ஏதோ சில்லிட்டு ஊடுருவிப் பாய்வதைப்போல், உணர்ந்திருப்பீர்களே."

"நீ சொல்வது மாதிரி உணர்ச்சி ஏற்பட்டதும் உண்மை தான்."

"நிச்சயமாய், ஸார் அந்த முகமூடி உருவம் குரங்கைப் போலக் குதித்தோடி, அறைக்குள் பாய்ந்தோடியதும் என் முதுகெலும்புக்குள் ஐஸைச் சொருகுவது போலிருந்தது. ஆனால், இது போதுமான சாட்சியமாகாது. அவ்வளவுக்குக்கூட, நான் கற்றுக் கொள்ளாமலா போய்விட்டேன்? ஒரு மனிதனுடைய ஆத்ம உணர்ச்சி சாட்சி சொன்னால் போதாதா? அது ஹைட் தான் என்று உறுதி கூறுகிறேன் அட்டர்ஸன்!"

"ஆமாம். என்னுடைய பயமும், நீ சொல்வது போலத்தான். தீமைக்குத்தான் நான் அஞ்சுகிறேன். அந்தத் தொடர்பால் தீமை விளையுமே என்று அஞ்சுகிறேன்—அவர்கள் தொடர்பில் தீமைதானே சம்பவிக்கும். நான் உன்னை உண்மையிலேயே நம்புகிறேன். ஜெகில் கொலை செய்யப்பட்டார் என்பதை நானும் நம்புகிறேன். (என் மனத்தில் ஏன் அப்படிப்படுகிறதோ, அது கடவுளுக்குத்தான் தெரியும்) அந்தக் கொலையாளியும் அறைக்குள்ளேயே திரிந்து கொண்டிருக்கிறான் என்றும் நம்புகிறேன். நாம் பழிக்குப் பழி வாங்குவோம். பிராட்ஷாவைக் கூப்பிடு" என்றார் வக்கீல்.

பயமும் நடுக்கமும் கொண்ட பிராட்ஷா அழைத்தவுடன் வந்து சேர்ந்தான்.

"பிராட்ஷா, மனத்தைப் பிடித்துக் கொண்டு நில். இந்த விஷயம் உங்கள் எல்லோரையும் பாதிக்கிறது என்பதை நானறிவேன். நாம் எல்லோரும் சேர்ந்து இதற்கு இப்போதே ஒரு முடிவு காணவேண்டும். பூலும், நானுமாக, அறைக்குள் பலவந்தமாக நுழையப் போகிறோம். எல்லாம் நல்ல படியாயிருந்தால், இதனுடைய முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள எனக்குத் திராணி உண்டு. அதற்கிடையில், எந்த விதமான மோசடியும் நடந்து விடாதவாறும், ஆசாமி பின்புறமாய்த் தப்பி ஓடாமல் பார்ப்பதற்கும், நீயும் அந்தப் பையனுமாக, ஆளுக்கொரு தடியை எடுத்துக்கொண்டு, ரசாயனசாலை வாசலில் போய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். பத்து நிமிஷ அவகாசந்தான். அதற்குள் நீங்கள் அங்கு தயாராக நிற்கவேண்டும்" என்றார் வக்கீல்.

பிராட்ஷா சென்றதும் அட்டர்ஸன் கடிகாரத்தைப் பார்த்தார். "சரி, பூல். நாம் நமது வேலையைத் தொடங்கலாமா?" என்று கேட்டுக் கொண்டார். அந்தக் கிடுக்கியைக் கையிலேந்திக் கொண்டு அவர் முற்றத்துக்குச் சென்றார். ஒரு மேகத் துணுக்கு சந்திரனை மறைத்திருந்தது; எங்கும் ஒரே இருட்டு. அந்தப் பள்ளமான இடத்தில் காற்று ஏங்கி இரங்கி வீசியதால், வத்தி விளக்கு அலைந்தலைந்து எரிந்தது. அவர்கள் ஆபரேஷன் தளத்தருகே பதனமாய் ஒதுங்கி, அமைதியுடன் அமர்ந்தார்கள். லண்

டன் நகரத்து மோன அமைதியிலே ரீங்காரம் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. அவர்கள் இருந்த இடத்தின் அமைதியை அது ஒன்றுதான் கலைத்தது—அந்த அறைக்குள்ளே நடக்கும் காலடி ஓசைதான் அது!

"அது நாள் முழுவதும் நடந்து கொண்டிருக்கும்" என்றான் பூல். "ராத்திரி முழுதும் கூடத்தான் நடக்கும். மருந்துக் கடையிலிருந்து ஏதேனும் மாதிரிச் சரக்கு வந்தால் மட்டும், இது சிறிது நேரம் நிற்கும். அதனுடைய குற்றமுள்ள நெஞ்சின் குறு குறுப்புத்தான் அதை இப்படி அலைக்கழிக்கிறது. அதன் ஒவ்வொரு அடிச் சுவட்டிலும் மோசடியால் சிந்திய ரத்தந்தான் பரவியிருக்கிறது. உஷ்! கேளுங்கள் ஸார்—இன்னும் கொஞ்சம் உற்றுக் கேளுங்கள், அட்டர்ஸன்! இது டாக்டரையாவின் காலடி ஓசையா?" என்று முணு முணுத்தான் பூல்.

காலடியோசை மெதுவாய்த் தான் கேட்டது. எனினும் ஏதோ ஆட்டி ஆட்டி நடப்பதைப் போலவும் இருந்தது. ஏனெனில், காலடி ஓசை விட்டு விட்டுத் தான் கேட்டது. மிடுக்காக நடந்து செல்லும் ஹென்றி ஜெகிலின் கனத்த காலடி ஓசை மாதிரியே இல்லை. அட்டர்ஸன் பெரு மூச் செறிந்தார். "இதைத் தவிர வேறு ஏதேனும் உண்டா?" என்று கேட்டார்.

பூல் தலை யாட்டினான். "ஒரு தடவை அது அழுததைக் கூட நான் கேட்டேன்" என்றான்.

"அழுததா? எப்படி?" என்று உடம்பில் புல்லரிப்புக் குளிர்ந்தோடக் கேட்டார்.

"ஒரு பெண்ணைப் போலவோ, ஒரு துராத்மாவைப் போலவோ அழுதது, ஸார்! அதைக் கேட்ட எனக்கும் நெஞ்சில் பாரமேறி, அழுகை வந்து விட்டது."

பத்து நிமிஷமும் கழிந்தது. பூல் வைக்கோலுக் கடியில் புதைத்து வைத்திருந்த கோடரியை எடுத்தான். வெளிச்சம் தெரியும் படியாக, மெழுகு வத்தியை ஒரு மேஜை மீது வைத்தான். அந்த நள்ளிரவின் அமைதியிலே மேலும் கீழும் செல்லும் அந்தக் காலடி ஓசை கேட்கின்ற பக்கமாய் இருவரும் மூச்சை அடக்கிக் கொண்டு நெருங்கினர்.

"ஜெகில்! உன்னை நான் பார்த்தாக வேண்டும்" என்று உரக்கக் கத்தினார், அட்டர்ஸன். ஒரு நிமிஷம் காத்திருந்தார்; பதிலில்லை. "நான் உன்னை எச்சரிக்கிறேன். எங்கள் சந்தேகங்கள் வலுக்கின்றன. உன்னை நான் கட்டாயம் பார்த்தாக வேண்டும்" என்றார். பிறகு "நேரடியான வழியில் உன்னைக் காண முடியாவிடில், மோசமான வழியில் உன்னைக் காண வேண்டும். நீ அனுமதி தராவிடில், பலவந்தமாக உன்னைப் பார்த்துத் தான் தீருவேன்" என்றார்.

"அட்டர்ஸன், உனக்குப் புண்ணியம் உண்டு. என்மீது இரக்கம் காட்டு" என்றது குரல்.

"ஆ! இது ஜெகிலின் குரலே அல்ல; இது ஹைடினுடையது, பூல்! உடை, கதவை!" என்று கத்தினார் அட்டர்ஸன்.

பூல் கோடரியை தோளுக்கு மேல் உயர்த்தினான். அந்த அடி கட்டிடத்தையே ஆட்டுவித்தது. அந்த அறைக் கதவு, அதன் கீலின் பிடிப்பில் நடுங்கித் துள்ளியது; அறையினின்று உயிருக்குப பயந்தோடும் மிருகத்தின் குரல் போல், ஒரு கூச்சல் வந்தது. கோடரி மேலும் மோதிற்று. கதவின் சட்டங்கள் நொறுங்கின. நாலு அடிகள் விழுந்தன. அந்தக் கதவு கெட்டியானது; பிடிகளெல்லாம் திறமையான வேலைப்பாடு நிறைந்தவை. ஐந்தாவது அடி விழுந்ததும் பூட்டு தெறித்து விழுந்தது. உடைந்த கதவு அறையிலுள்ள கம்பளி விரிப்பில் மல்லாந்து விழுந்தது.

அவர்களிருவரும் தமது கொடூரச் செயலையும், அதன் அமைதியையும் கண்டு ஒரு நிமிஷம் திகைத்து நின்றனர்; பிறகு உள்ளே சென்றனர். விளக்கு வெளிச்சத்தில் அந்த அறை துலாம்பரமாகத் தெரிந்தது. கணப்புக் குழியில் நெருப்பு கனன்று சுழல் வீசி எரிந்து கொண்டிருந்தது. நீர் கொதிப்பேறிய கெட்டில் லேசாக இரைந்து கொண்டிருந்தது. ஒன்றிரண்டு டிராயர்கள் திறந்து கிடந்தன. மேஜையின் மேல் காகிதங்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. நெருப்புக்குப் பக்கத்தில் தேத் தண்ணீர் தயாரிப்பதற்காகச் சாமான்கள் தயாராயிருந்தன. அமைதியான அறைதான். எனினும் அறையிலுள்ள மருந்துகளின் துர்க்கந்தம் நிறைந்திருந்தது. இல்லையெனில் லண்டனி

லுள்ள பல அறைகளில் இதுவும் ஒன்று போலத்தான் தோன்றும்.

அறையின் மத்தியிலே ஒரு மனித உடல். குரக்குவலித்துப் போய்க் கிடந்தது, சிறிது இழுப்பும் இருந்தது. அதன் பக்கம் அவர்கள் மெதுவாக நகர்ந்து சென்று, அதை மல்லாத்தித் திருப்பிப் போட்டனர்—ஆ! அது எட்வர்ட் ஹைடின் முகம்! அவனுடைய ஆடைகள் அவன் அளவுக்குப் பெரிதாயிருந்தன. அவை டாக்டருக்குத் தான் சரியாயிருக்கும். அவனுடைய முகத்திலுள்ள தசைநார் இன்னும் அசைந்தது, உயிர் உள்ளது போல. ஆனால், ஆவி எப்போதோ பிரிந்து விட்டது. கையிலிருந்த உடைந்த புட்டியிலிருந்தும், அறையில் நிறைந்துள்ள திராவக துர்க்கந்தக் கமறலிலிருந்தும், அவன் தற்கொலை புரிந்து கொண்டான் என்று அட்டர்ஸன் ஊகித்துக் கொண்டார்.

"நாம் மிகவும் பிந்தி வந்து விட்டோம். தண்டிப்பதாயினும் தடுப்பதாயினும் முந்தியிருக்க வேண்டும். ஹைட் அவன் தலைவிதிப்படி தொலைந்தான். இனி உன் எஜமானரின் உடலைத் தான் கண்டு பிடிக்க வேண்டும்" என்றார் அட்டர்ஸன். அந்த ஆபரேஷன் தளம் கட்டிடத்தின் பெரும்பாகத்தை அடைத்துக் கொண்டிருந்தது. கீழ்த்தட்டு முழுவதையும் அது அடைத்திருந்தது. அதற்கு மேல் ஜெகிலின் அறை. ஒரு நடைபாதை ஆபரேஷன் தளத்தையும், தெருவையும் இணைத்தது. அறையிலிருந்தே தெருவாசலுக்கு தனிப்படிக்கட்டு இருந்தது. சில இருட்டு அரங்குகளும், ஒரு கீழறையுமிருந்தன. எல்லாவற்றையும் அவர்கள் அலசித் தேடினார்கள். எல்லா அறைகளையும் பார்ப்பதற்கு ஒவ்வொரு கண நேரம்தான் பிடித்தது ; காரணம், பல காலியாயிருந்தன. சில திறக்கப்படாமலே தூசியடைந்து கிடந்தன. கீழறையில் ஜெகிலுக்கு முன்பிருந்தவர்கள் பழஞ்சாமான்களைப் போட்டு வைத்திருந்தார்கள் போலும். அந்த அறையைத் திறந்தவுடன் அதில் பாய்த்திரை மாதிரி தொங்கிக் கிடந்த நூலாம்படை, அது வருஷக்கணக்காக உபயோகப் படுத்தப்படவில்லை என்பதைக் காட்டிற்று. ஹென்றி ஜெகில் உயிருடனோ, சவமாகவோ அந்த வீட்டில் இருப்பதற்கு எந்தவித அடையாளமும் தென்படவே இல்லை.

பூல் தளவரிசையைக் காலால் உதைத்துப் பார்த்தான். "இங்கே அவர் புதைக்கப்பட்டிருக்கலாம்" என்று சொன்னான்.

"அல்லது தப்பியோடியிருக்கலாம்" என்று சொல்லிக் கொண்டே, தெருப்பக்கம் உள்ள கதவுக்குச் சென்றார் அட்டர் ஸன். அது பூட்டிக் கிடந்தது. தளத்தருகில் ஒரு துருப்பிடித்த சாவியும் கிடந்தது.

"இது உபயோகப் படுத்தப்பட்டதாகத் தெரியவில்லையே" என்றார் வக்கீல்.

"உபயோகமா? இது ஒடிந்துபோன சாவி என்பதைத் தாங்கள் கவனிக்க வில்லையா? மேலும், யாரோ இதை மிதித் துச் சென்றிருக்கிறார்கள்."

"ஆமாம். ஒடிந்துபோன இடத்திலும்கூடத் துரு ஏறியிருக் கிறதே."

அவர்கள் ஒருவரையொருவர் ஒன்றும் புரியாமல் பார்த்துக் கொண்டனர். "இது என் புத்திக்கு எட்டவில்லை. வா, மேலே போவோம்" என்றார்.

அவர்கள் மௌனமாய்ப் படியேறி மேலே சென்றனர். பிரே தத்தைக் காணும் போதெல்லாம் நெஞ்சம் திடுக்கிட, அங்குள்ள சாமான்களைப் பரிசீலனை செய்தனர். ஒரு மேஜைமேல், ரசா யன வேலை நடந்த அறிகுறிகள் தென்பட்டன. சில கண்ணாடிச் சில்லுகளில் சில உப்புக்கள் அளந்து போடப்பட்டிருந்தன. ஏதோ ஒரு ஆராய்ச்சி இடை வழித்தட்டில் நின்றுபோய் விட்டது!

"இதுதான் நான் அடிக்கடி வாங்கி வந்த மருந்துச் சரக்கு" என்று சொன்னான், பூல். அவன் பேசும்போது கூட, கெட்டி லில் நீர் கொதித்துப் பொங்கியது. அந்தச் சப்தம் அவர்களை நடுக்கியது.

இது அவர்களை நெருப்பின் பக்கம் இழுத்து வந்தது. அங்கே ஒரு சாய்வு நாற்காலி போடப்பட்டு, உட்காருபவரின் கையெட் டும் தூரத்திலே, தேத் தண்ணீர் கோப்பையும் வைக்கப்பட்டிருந் தது. அந்தக் கோப்பையில் ஜீனிகூடப் போடப்பட்டிருந்தது!

அலமாரியில் பல புத்தகங்கள். ஒரு புத்தகம் தேத்தண்ணீர் சாமான்களின் பக்கம் திறந்து கிடந்தது. அது ஒரு புனிதமான மத நூல் என்றறிந்தவுடன் அட்டர்ஸன் திகைத்துப் போனார். ஏனெனில், ஜெகில் அதைப்பற்றி விளக்கங்கள் கொடுத்துப் பேசியது ஞாபகத்துக்கு வந்தது. ஆனால், இந்த நூலில் அதே ஜெகில் தன் கைப்பட மதத்தைத் துவேஷித்து எழுதியுள்ள குறிப்புக்களும் அவர் கண்ணில் விழுந்தன.

மீண்டும் சோதனை செய்த போது, அந்த நிலைக் கண்ணாடியின் பக்கம் அவர்கள் வந்தார்கள். அதில் வேண்டாத பயத்துடன் தம்மைப் பார்த்துக் கொண்டார்கள். அது மேலாகத் திருப்பி வைக்கப்பட்டிருந்தது. கூரையின் மேல் விழுந்த தீயொளி கண்ணாடிகளில் விழுந்து நூறு மடங்காகப் பெருகிக் காணப்பட்டது. அந்தக் கண்ணாடியில் அது பிரதிபலித்தது; அவர்களுடைய பீதியடைந்த முகங்களும் தெரிந்தன.

"இந்த நிலைக்கண்ணாடி எத்தனையோ அதிசயங்களைக் கண்டிருக்கிறது, ஸார்" என்றான் பூல்.

"ஆமாம். இதுவே ஒரு அதிசயந்தான். ஜெகில் எதற்காக இப்படி—" என்று எதிரொலித்தவர் பேச்சை மாற்றி, "இது ஜெகிலுக்கு எதற்காக?" என்றார்.

"நீங்களே சொல்லுங்கள்" என்றான் பூல்.

பிறகு அவர்கள் அந்த மேஜையைச் சோதனையிட்டார்கள். மேஜைமீது, வரிசையாக அடுக்கப்பட்டிருந்த காகிதங்களுக்குப் பக்கத்தில் அட்டர்ஸனின் விலாசமிட்டு டாக்டரின் கைப்பட எழுதிய கவர் ஒன்று இருந்தது. வக்கீல் அதை உடைத்தார். உள்ளேயிருந்து பல காகிதங்கள் விழுந்தன. ஆறுமாத காலத்துக்குத் தான் ஜெகிலிடம் திருப்பிக் கொடுத்துவிட்ட அந்த உயில், அந்தப் பைத்தியக்காரத்தனமான ஷரத்துக்களுடனேயே இருந்தது. டாக்டர் இறந்தால் மரண சாசனமாகவும், மறைந்துவிட்டால் தரும சாசனமாகவும் இருக்க வேண்டுமென்று எழுதிய அதே வரிகள். ஆனால் அட்டர்ஸனே திகைப்படைந்து பிரமிக்கும்படி அதில் இன்னொரு திருத்தம் கண்டிருந்தது. அந்த உயிலில் எட்வர்ட் ஹைட் என்ற பெயர் வரும் இடங்களிலெல்லாம்

ஜி. ஜே. அட்டர்ஸனின் பெயர் காணப்பட்டது. ஜெகிலின் சொத்துக்கு அட்டர்ஸன் வாரிசு! அட்டர்ஸன் பூலைப் பார்த்தார். பிறகு அந்தக் கடுதாசிகளைப் பார்த்தார். கடைசியாக அந்தத் தரையில் இறந்து கிடந்த கொலைகாரனையும் பார்த்தார்.

"என் தலை சுற்றுகிறது. அந்தப் பயல் ஹைடிடம்தான் இந்த உயில் இத்தனை நாளும் இருந்திருக்கிறது. என்னை அவன் விரும்புவதற்கு அவனுக்கு முகாந்திரமே இல்லை. உயிலில் என் பெயரைக் கண்ட பிறகு, அவனுக்கு ஆத்திரம் பொங்கியிருக்காதா? அப்படியானால், அவன் இந்த உயிலை ஏன் நாசமாக்காமல் வைத்திருக்கிறான்?" என்று சொல்லிக் கொண்டார்.

அடுத்த கடுதாசியை எடுத்தார். அன்றையத் தேதியிட்டு, டாக்டர் எழுதி வைத்த சிறு குறிப்பு அது. "பூல்! இன்று இங்கே, இதே இடத்தில் டாக்டர் உயிரோடு இருந்திருக்கிறார். அவ்வளவு சீக்கிரத்தில் இவன் அவரைத் தீர்த்துக் கட்டியிருக்க முடியாது. அவர் உயிருடன் தான் தப்பியோடியிருக்க வேண்டும்? ஏன் ஓட வேண்டும், எப்படி ஓடினார்? அப்படியானால், இங்கே நடந்து போனதைத் தற்கொலை என்று எப்படிச் சொல்லலாம்? நாம் வெகு கவனமாய் இருக்க வேண்டும். தப்பித் தவறி உன் எஜமானரைப் பேராபத்தில் சிக்க வைத்துவிடக் கூடாது" என்றார்.

"அதை வாசியுங்கள், ஸார்."

"எனக்கே பயமாயிருக்கிறது. ஏனென்று ஆண்டவனுக்குத்தான் தெரியும்" என்று சொல்லிவிட்டு, தம் கண்களை ஓட்டினார்.

கடிதத்தில் "என் அன்புள்ள அட்டர்ஸன்,

இந்தக் கடிதம் உன் கையில் கிடைக்கும்போது நான் மறைந்து போய் விடுவேன். எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களால் அப்படி நேரும் என்பதை என்னால் முன்கூட்டியே உணர முடியவில்லை. ஆனால் என்னுடைய உள்ளுணர்ச்சிகளும், என் நிலைமையின் சந்தர்ப்ப விபரீதங்களும் நான் தீர்ந்து விடுவது நிச்சயம். அதுவும் வெகு சீக்கிரத்தில் என்றே சொல்லுகின்றன. ஆதலால், உடனே போய் லான்யன் உன்னிடம் சில விவரங்கள்

கொடுத்திருப்பானே, அதைப் பார். மேலும் விசேஷத் தகவல்கள் வேண்டினால் யோக்கியதையும், மகிழ்ச்சியுமற்ற இந்தப் பேதை நண்பனின் வரலாற்றையும் படி.

ஹென்றி ஜெகில்.

"இன்னொரு கடிதமும் இருந்ததா?" என்றார் அட்டர்ஸன்.

"இதோ இருக்கிறது, ஸார்" என்று பூல் பல இடங்களில் முத்திரை யிடப்பட்டிருந்த கனத்த கவரைக் கொடுத்தான்.

வக்கீல் அதைப் பையில் போட்டுக் கொண்டார். "இதைப் பற்றி நான் வெளியில் சொல்லப் போவதில்லை. உன் எஜமான் உயிர் துறந்திருந்தாலும், ஓடியிருந்தாலும், நாம் அவருடைய பெருமையையும் மதிப்பையும் காப்பாற்றியாக வேண்டும். இப்போது, மணி பத்து. நான் வீட்டுக்குச் சென்று இவற்றை உடனடியாகப் படித்து ஆக வேண்டும். நள்ளிரவுக்கு முந்தியே நான் வந்து விடுவேன். அதன் பின்னர் போலீஸுக்குத் தகவல் கொடுக்கலாம்" என்றார்.

இருவரும் கதவைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தனர். வேலைக்காரர்கள் மறுபடியும் கணப்புக் குழியருகே குழுமினார்கள். அட்டர்ஸன் அந்த இரண்டு தஸ்தாவேஜிகளையும் படிப்பதற்காக விறுவிறு என்று வீட்டுக்கு நடந்தார்.

## லான்யன் கண்டறியாதன கண்டார்!

நான்கு நாட்களுக்கு முன், ஜனவரி ஒன்பதாந் தேதியன்று மாலைத் தபாலில் எனக்கு ஒரு ரிஜிஸ்தர் கவர் வந்தது. அதை எழுதியது என்னுடைய தொழில் முறைத் தோழனும், பள்ளித் தோழனுமான ஹென்றி ஜெகில். அந்தக் கடிதம் எனக்குப் பேராச்சரியம் அளித்தது. ஏனெனில் நாங்கள் இருவரும் கடிதப் போக்கு வரத்தே வைத்துக் கொள்ளவில்லை. அதற்கு முந்திய நாள் இரவில்தான் நான் அவனோடு விருந்து சாப்பிட்டேன். அப்போது பேசிக் கொண்ட பேச்சில் இது மாதிரியான ஒரு ரிஜிஸ்தர் கடிதத்துக்கு எந்தவித அவசியமும் ஏற்படப் போவதாகத் தோன்றவில்லை. கடிதத்திலிருந்த விஷயம் என் திகைப்பை மேலும் அதிகமாக்கியது. அந்தக் கடிதம் இதுதான்:

10, டிஸம்பர் 18—

அன்புள்ள லான்யனுக்கு,

நீ என்னுடைய பழைய சிநேகிதர்களில் ஒருவன். விஞ்ஞானப் பிரச்சினைகளில் நமக்குள் எத்தனையோ அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், நமது நட்புரிமையில் எந்தவித பேதமோ, பிளவோ ஏற்பட்டதாக நான் கருதவில்லை. என்றேனும் ஒருநாள், நீ என்னிடம், "ஜெகில், என் வாழ்க்கை, என் கௌரவம், என் அறிவு எல்லாம் உன் கையிலே இருக்கின்றன" என்று சொல்ல நேர்ந்திருந்தால், என் சொத்து முழுவதையும் உன்னைக் காப்பாற்றுவதற்காகத் தியாகம் பண்ணியிருப்பேன். லான்யன், இப்போது என் உயிர், என் கௌரவம், என் அறிவு எல்லாம் உன் உதவியை நாடி நிற்கின்றன. இன்றிரவு எனக்கு நீ இரங்காவிட்டால், நான் அடியோடு தொலைந்து போவேன். இப்படிப்பட்ட பீடிகையைக் கண்டு, நான் ஏதோ மரியாதைக் குறைவான செயலைச் செய்யச் சொல்லுகிறேன் என்று எண்ணாதே. நீயே அதைத் தீர்மானித்துக் கொள்.

இன்றிரவு நீ எல்லாவித அலுவல்களையும் எனக்காக ஒதுக்கி வைக்க வேண்டும். சாகக்கிடக்கும் சக்கரவர்த்தியிடமிருந்து அழைப்பு வந்தாலும் செல்லக் கூடாது. உன் வண்டி தயாராயில்லையெனில், வேறொரு வண்டியிலேனும் என் வீட்டுக்குப் போ. இந்தக் கடிதத்தைக் கையோடு உதவிக்காகக் கொண்டு செல். என் வேலைக்காரன் பூலுக்கு நான் வேண்டுவன செய்யும்படி உத்தரவிட்டிருக்கிறேன். அவன் அங்கு ஒரு பூட்டு ரிப்பேர்க்காரனுடன் காத்திருப்பான். அவனைக் கொண்டு, என் அறைக் கதவை உடையுங்கள். நீ மட்டுமே உள்ளே தனியாகச் செல்ல வேண்டும். இடது கைப்பக்கம் E என்ற அடையாளமிட்ட அலமாரியை, அது பூட்டிக் கிடந்தாலும் சரி, அதை உடைத்துத் திறக்கவும். அந்த டிராயரை அதிலிருக்கும் சாமான்களோடு அப்படியே வெளியே எடுக்கவும். கீழிருந்து அது மூன்றுவது டிராயர். மேலிருந்து அது நாலாவது. என்னுடைய மனச் சஞ்சலத்தில் எங்கே உனக்குத் தப்பான விவரம் கொடுத்துவிடுகிறேனோ என்றுகூட அஞ்சுகிறேன். நான் தப்பிதமாகவே அடையாளம் கூறிவிட்டாலும்கூட, நீ அந்த டிராயரை அதிலிருக்கும் சரக்குகளைக் கொண்டே கண்டு பிடித்து விடலாம். அதில்

சில பௌடர்களும், ஒரு புட்டியும், ஒரு நோட்டும் இருக்கும். நீ அந்த டிராயரை அப்படியே எடுத்துக் கொண்டு காவண்டிஷ் ஸ்கொயருக்கு—உன் வீட்டிற்கு உடனே வந்துவிட வேண்டும்.

" இது நீ செய்ய வேண்டிய முதல் உதவி. இரண்டாவதாக: இந்தக் கடிதம் உனக்குக் கிடைத்தவுடன் உடனடியாய் காரியங்களை முடித்துக் கொண்டு நடுச் சாமத்துக்கு முன்பே உன் வீடு வந்து விடவேண்டும். எதிர்பாராத, தள்ள முடியாத காரணங்களால், நீ வருவது தாமதமானாலும் சரி, உன் வேலைக்காரர்கள் படுக்கப் போக நேரமானாலும் சரி, நடுச் சாம வேளையில் நீ உன்னறையில் இருக்கவேண்டியது. இரவு ஒரு மனிதன் என் பெயரைச் சொல்லிக் கொண்டு வந்து உன் வீட்டுக் கதவைத் தட்டுவான். நீ அவனை வரவேற்று அவனிடம் அந்த டிராயரை ஒப்படைத்துவிட வேண்டியது. இத்தனையையும் செய்துமுடித்து விட்டால், உன் கடமை பூர்த்தியாய் விடும். என்னுடைய நன்றிக்கும் நீ பாத்திரமாவாய். அதன் பின் ஐந்து நிமிஷம் கழித்துவிட்டால், இந்த ஏற்பாடுகள் எல்லாம் எவ்வளவு ஜீவாதாரமானவை என்பது உனக்கே புரிந்துவிடும். நீ இவற்றில் எதையேனும் ஒன்றைச் செய்யத் தவறினாலும், நான் இறப்பதோ, எனக்குப் பைத்தியம் பிடிப்பதோ நிச்சயம்.

" என்னுடைய இந்தக் கோரிக்கையை நீ மறுதளிக்கமாட்டாய் என்ற நம்பிக்கை யிருந்தும், என் கையும், இதயமும் நடு நடுங்கித் தவிக்கின்றன. புது இடத்தில், கொடும் வேதனைக்குள்ளாகிக் கிடக்கும் என்னைச் சிறிது எண்ணிப்பார். நான் சொன்னபடி மட்டும் நீ நடந்துவிட்டாயானால், என் துன்பங்கள் ஒரு கதையைப்போல் உருண்டோடிவிடும். ஆதலால், என் அன்புள்ள லான்யன்! எனக்கு உதவு, என்னைக் காப்பாற்று!

உன் நண்பன்,

ஹெ. ஜெ.

பின் குறிப்பு : இதை எழுதி முடித்த பிறகு ஒரு புதிய பீதி என் மனத்தைக் கவ்விக் கொண்டது, தபாலாபீஸ்காரரால், நாளைக் காலை வரை இந்தக் கடிதம் உன் கைக்கு வந்து சேராமலிருக்கலாம். அப்படி நேர்ந்தால், பகல் வேளையிலேயே நான்

சொன்ன முதற் காரியத்தைச் செய்து முடித்துவிடு. நான் குறிப்பிட்ட ஆசாமியை அன்றிரவு நடுச்சாமத்தில் எதிர்பார்த்துக் கொண்டிரு. அதுவே மிகவும் காலதாமதம் தான். அன்றிரவு எதிர்பார்த்தபடி எதுவுமே நடக்காமல் போனுல், ஹென்றி ஜெகில் தொலைந்தான் என்று வைத்துக் கொள்."

இந்தக் கடிதத்தைப் படித்தபோது ஜெகிலுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்றுதான் நினைத்தேன். ஆனுல், அதில் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் மிகவும் தெளிவோடு, சந்தேகத்துக்கு இடமில்லாமல் இருக்கும்பக்ஷத்தில் அவன் வேண்டிக் கொண்டபடியே நான் நடக்க வேண்டியதுதான். அந்தப் பித்துக்குளித்தனம் புரியாத வரையில், அதனுடைய முக்கியத்துவத்தையும் நான் அறிய முடியவில்லை. அத்தனை பரிதாபகரமாய் வேண்டிக்கொண்ட வேண்டுகோளைப் பொறுப்பற்று உதறித் தள்ளுவது எப்படி? அவன் சொன்னபடியே ஒரு வண்டி பிடித்துக்கொண்டு நேரே ஜெகிலின் வீட்டுக்குச் சென்றேன். வேலைக்காரன் எனக்காகக் காத்து நின்றுன். அவனுக்கும் ஒரு ரிஜிஸ்தர் கடிதம் தக்கபடி வந்திருந்தது. தச்சனுக்கும், பூட்டு ரிப்பேர்க்காரனுக்கும் அவன் ஆளனுப்பி யிருந்தான். நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே அவர்கள் வந்து விட்டார்கள். நாங்கள் எல்லோரும் ஆபரேஷன் தளத்துக்கு வந்தோம். அந்த அறைக் கதவு கெட்டியானது; பூட்டும் உயர்தரமானது. கதவைத் திறப்பதே சிரமந்தான் என்றும், அதிக பலம் செலுத்திஞல், பெருஞ் சேதம் ஏற்படும் என்றும் தச்சன் சொன்னுன். பூட்டை உடைக்க வந்தவனும் திகைத்தான். இருந்தாலும் அவன் வேலையில் கெட்டியாகையால், இரண்டு மணிநேர காலத்தில், கதவு திறக்கப்பட்டு விட்டது. E குறியிட்ட அலமாரி திறந்துதான் கிடந்தது. அந்த டிராயரை நான் எடுத்து வைக்கோலில் சுற்றிக் கட்டி எடுத்துக் கொண்டு உடனே வீட்டுக்குத் திரும்பினேன்.

வந்ததும் அதிலுள்ள சாமான்களைப் பார்வையிட்டேன். பவுடர்களெல்லாம் மருந்துக்கடைப் பொட்டலங்களைப் போல் அவ்வளவு நன்ருகக் கட்டி வைக்கப்படவில்லையாயினும், அழகாகவே மடித்து வைக்கப்பட்டிருந்தன. எல்லாமே ஜெகிலின் சொந்தத் தயாரிப்பு எனத் தெரிந்தது. ஒரு பொட்டலத்தை உலைத்துப்

பார்த்தபோது அதில் வெண்மையான ஸ்படிக உப்பு ஏதோ இருந்தது. அந்தப் புட்டியில் ரத்தச் சிவப்புக் கொண்ட ஒரு திராவகம் இருந்தது. அதன் நெடி ஒரே காரமாயிருந்தது. பாஸ்பரசும் ஈதரும் கலந்தது போன்ற நாற்றம். அதில் வேறு என்னென்ன கலந்திருந்தன என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. நோட்டுப் புத்தகத்தில் வெறும் தேதிக் குறிப்புகளைத் தவிர, வேறு ஒன்றுமே இல்லை. ஆனால் இந்தக் குறிப்புக்கள் பல வருஷ காலமாய் எழுதப்பட்டு வந்தவை என அறிந்தேன். ஆனால் ஒரு வருஷ காலமாய் அதில் எந்த விதக் குறிப்புகளும் இல்லை. இங்குமங்குமாக ஒன்றிரண்டு தேதியும், அதை ஒட்டிய குறிப்புமே இருந்தன. 'இரட்டை' என்ற வார்த்தை ஆறு இடங்களில் காணப்பட்டது. குறிப்புக்களின் ஆரம்பத்தில் எத்தனையோ ஆச்சரியக் குறிகளோடு, 'படுதோல்வி !!!' என்ற குறிப்பும் இருந்தது. இதெல்லாம் என் ஆவலை மட்டும் தூண்டியதே தவிர, புதிரை விளக்கவில்லை. அந்தப் புட்டியிலுள்ள ஏதோ மருந்து, காகிதத்தில் ஏதோ உப்பு, முடிவு காணுமல் வழக்கமாய் ஜெகில் எழுதி வைக்கும் உபயோகமற்ற குறிப்புக்கள்—இவையெல்லாம் என் நண்பனுடைய அறிவை, வாழ்வை, கௌரவத்தை எந்த விதத்தில் பாதிக்கக் கூடும் என்பதை என்னால் உணர முடியவில்லை. வரப்போகும் அந்த ஆசாமி இங்கு மட்டும் வரமுடியுமென்றால், அங்கும் ஏன் வரமுடியாது? அது எப்படியும் போகட்டும். வருபவரை நான் ரகசியமாய் வரவேற்க வேண்டுமாமே! ஏன்? இதைப் பற்றி மேலும் மேலும் சிந்திப்பது, மூளை சம்பந்தமான வியாதியைப்பற்றி நான் ஆராய்வது போலிருந்தது. என் வேலைக்காரர்களைப் படுக்கப் போகச் சொல்லிவிட்டு, என்னுடைய துப்பாக்கியில் ரவைகளை நிரப்பிவைத்துக் கொண்டேன். எதற்கும் தற்காப்புடன் இருப்பது நல்லது என்றுதான் நினைத்தேன்.

பன்னிரண்டு மணி அடித்து முடியுமுன், கதவை மெதுவாகத் தட்டும் சப்தம் கேட்டது. நான் எழுந்து சென்றேன். ஒரு சின்ன மனிதன் முற்றத்திலுள்ள தூணில் சாய்ந்துகொண்டு நின்றான். "ஜெகிலிடமிருந்தா வருகிறீர்?" என்றேன். ஆம் என்ற பதில் கிடைத்தது. அவனை உள்ளே அழைத்தேன். அவன் உள்ளே வராமல், தெருவின் இருபுறத்தைத் திரும்பிப் பார்க்

தான். வெகு சமீபத்தில் ஒரு போலீஸ்காரன் பரக்கப் பரக்க விழித்துக்கொண்டு வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்ட வுடன் வந்தவன் விறுட்டென்று உள்ளே வந்து விட்டான்.

இதெல்லாம் எனக்குப் பிடிக்கவே இல்லை. அந்த ஒளி நிறைந்த அறைக்குள் நான் அவனைத் தொடர்ந்து வந்தவுடன் என் கை துப்பாக்கியைத் தயாராய்ப் பற்றிப் பிடித்தது. இங்கு தான் நான் அவனை நன்ருகப் பார்க்க முடிந்தது. அதற்கு முன் அவனை நான் நேருக்கு நேராய்ப் பார்க்கவில்லை. அவன் குள்ளமா யிருந்தான். திடுக்கிடும் உணர்ச்சி தரும் அந்த முகத்தை, அதனுடைய தசைநார்க் கூட்டத்தின் அசைவை, அவன் உடம்பி லுள்ள கூழைத் தன்மையை எல்லாவற்றிற்கும் மேலாக அவனு டைய பிரசன்னத்தால் ஏற்பட்ட விசித்திரமான உணர்ச்சியை அவை எல்லாம் அப்போதுதான் என் மனத்தில் தைத்தன. என் நாடியெல்லாம் தளர்ந்து சோர்வது போலிருந்தது. அந்த வேளை யில் அந்த உணர்ச்சி முட்டாள்தனமான வெறுப்பினுல்தான் ஏற்பட்டது என்று எண்ணினேன். ஆனுல், வெறுக்கத்தக்க செய லொன்றைக் கண்டதும் தன்னையுமறியாமல் மனஞ் சுழிக்கும் மனித சுபாவந்தான் அதற்குக் காரணம் என்றறிந்தேன்.

அந்த ஆசாமி (அவனைச் சந்தித்த க்ஷணத்திலிருந்தே அவனை எனக்குப் பிடிக்கவில்லை. நான் அவனைப் பற்றிச் சொல்லுவ தென்ருல் வெறுப்புணர்ச்சியுடன் தான் சொல்ல முடியும்) சாதாரண மனிதனும் எள்ளி நகையாடும் வண்ணம் உடை உடுத் தியிருந்தான். அவன் உடுத்தியிருந்த ஆடைகள் விலையுயர்ந்ததும், நயமானதுமானவைதான். எனினும் அவன் உடம்புக்கு அவை மிகப் பெரிதாயிருந்தன. கால்சராய் காலின்மேல் தொங்கிக் கிடந்தது. தரையைப் பெருக்கக் கூடாதே என்பதற்காக அவை மேலாகச் சுருட்டி விடப்பட்டிருந்தன. கோட் டின் இடுப்புப் பாகம் வயிற்றுக்கும் கீழே இறங்கியிருந்தது. கழுத்துப்பட்டை தோள் வரையில் அகன்றிருந்தது. இந்தக் கேலிக் கூத்தான ஆடையணிகளைக் கண்டும் எனக்குச் சிரிப்பு வராதது பெரிய அதிசயம். அந்த ஆசாமியிடம் அமானுஷ்யமான, அசாதாரணமான ஏதோ ஒன்று இருப்பதாகவே பட்டது. மனத் தைக் கவ்வி, அதைக் கவிழ்க்கும் ஏதோ ஒரு புதிர் அவனிடம்

இருந்தது. இந்த அபூர்வப் ஆகிருதிக்கு இந்த மாதிரியான வேஷமும் பொருத்தந்தான் என்று எண்ணினேன். அந்த மனிதனுடைய ஜென்ம ரகசியம், வாழ்க்கை, சொத்து, சுகம், அந்தஸ்து முதலியவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் என்னுள் எழுந்தது.

இத்தனையையும் சொல்வதற்குத்தான் இவ்வளவு பக்கம் தேவையாயிருந்ததே ஒழிய அத்தனையும் சில விநாடி நேரத்துக்குள்ளாகவே முடிந்து விட்டது. அவன் ஏதோ நெருப்பை மிதித்தவன்போலச் சஞ்சலப்பட்டான்.

"அதை எடுத்து வந்தீர்களா? அதை எடுத்து வந்து விட்டீர்களா?" என்று சத்தமிட்டான். அவனுடைய ஆத்திரத்தில் என் தோள்களைப் பற்றிப் பிடித்து உலுப்ப ஆரம்பித்து விட்டான்.

அவன் தொட்டவுடனேயே என் ரத்தம் உள்ளூர உறைவது போலிருந்தது. அவனை விலக்கித்தள்ளி, "நமக்குள் இன்னும் அறிமுகம்கூட ஆகவில்லையே. அதற்குள்—சரி. முதலில் அப்படித் தயவு செய்து உட்காரும்" என்றேன். அவனுக்கு ஒரு இடத்தைக் காட்டிவிட்டு, நானும் என் வழக்கமான இடத்தில் உட்கார்ந்தேன். அந்த நள்ளிரவில், அந்த ஆசாமியின் வரவால் மனத்தில் ஏற்பட்ட பீதியும், கலவரமும் என்னை வருத்த, மிகவும் சர்வ சாதாரணமாய் வழக்கம்போல் உட்கார முயன்று கொண்டிருந்தேன்.

"என்னை மன்னியுங்கள், டாக்டர் லான்யன்! நீங்கள் சொல்வது ரொம்ப சரி. என்னுடைய பொறுமையின்மை என்னுடைய மரியாதையைக்கூடக் குலைத்து விட்டது. சில நிமிஷ நேர ஜோலியை முன்னிட்டு, உங்கள் நண்பர் ஹென்றி ஜெகில் என்னை இங்கு அனுப்பினார். வந்து......" அவன் தயங்கினான். தொண்டைக் குழியைத் தடவினான். அவன் எவ்வளவுதான் மறைத்தாலுங்கூட, அவன் ஏதோ ஒரு வித வலிப்பு வருவதைப் பலவந்தமாகத் தடுக்க முயல்கிறான் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். "புரிகிறது. ஒரு டிராயர்—"

அவனுடைய ஆத்திரத்தைக் காண எனக்கு இரக்கம் வந்தது; என்னுடைய ஆவலின் ஆத்திரமும் தணியவில்லை.

" அதோ இருக்கிறது, ஸார் " என்று மேஜைக்குப் பின்னால் அடக்கமாய் வைக்கப்பட்டிருந்த அந்த டிராயரைக் காட்டினேன்.

அவன் அதன்மேல் தாவிப் பாய்ந்தான். மார்பில் கரத்தை வைத்துப் பிடித்துக்கொண்டே சிறிது நேரம் நின்றான். அவனுடைய தாடைகள் நெருங்குவதால், பற்கள் நரநர வென்று உரசும் சத்தமும் கேட்டது. அவனுடைய முகத்திலே படர்ந்த சவக்களை அவனுடைய உயிரைப் பற்றியும் உணர்வைப்பற்றியும் என்னைப் பயப்பட வைத்துவிட்டது.

" சுதாரித்துக் கொள்ளும் " என்றேன் நான்.

பயங்கரமான புன்னகையுடன் அவன் என்னைத் திரும்பிப் பார்த்தான். பிறகு ஏதோ முடிவு கட்டி விட்டதுபோல, துணியை விலக்கினான். அதிலிருந்த சாமான்களைக் கண்டதும், பரிபூர்ண நிம்மதியால் ஏற்பட்ட உவகை உணர்ச்சியோடு, வாய் விட்டுக் கத்தினான். நான் சிலையாயிருந்தேன். மறுகணம் அவன் நிதானமடைந்த குரலில், " உங்களிடம் ஒரு அவுன்ஸ் கிளாஸ் இருக்கிறதா ?" என்றான்.

பெருமுயற்சியோடு நான் என்னிடத்தை விட்டு எழுந்து சென்று, அவன் கேட்டதை எடுத்துக் கொடுத்தேன்.

அவன் புன்னகையுடன் வந்தனம் கூறினான். பிறகு அந்த ரத்தச் சிவப்புத் திராவகத்தில் ஓரளவு அளந்து எடுத்துக் கொண்டு, அந்தப் பவுடர்களில் ஒன்றைக் கலந்தான். அந்தக் கலவை முதலில் சிவப்பாயிருந்தது. பிறகு உப்புக் கரையக் கரைய, வர்ணம் ஒளி வீசியது ; பொங்கி வழிந்தது ; புகையும் கிளம்பியது. திடீரெனப் புகை அடங்கி, அந்த மருந்து கறும் பழுப்பு நிறமாகி, பிறகு இளம் பச்சையாக மாறியது. வந்தவன் இந்த மாறுதல்களை யெல்லாம் கூர்மையாகப் பார்த்துக்கொண்டிருந்தான் ; அவன் முகத்தில் புன்னகை அரும்பியது. கிளாஸை மேஜைமேல் வைத்துவிட்டு, என் பக்கம் திரும்பினான்.

" சரி. இனிமேல் என் நடவடிக்கையைக் கவனிக்கலாம். நான் சொல்லுகிறபடி, தாங்கள் நடக்க முடியுமா ? இல்லையெனில், இந்தக் கிளாஸை நான் கையோடு எடுத்துக்கொண்டு

வெளியே போவதை நீங்கள் அனுமதிப்பீர்களா? அல்லது உங்களை வாட்டும் அந்த ஆவலைத் தீர்க்கத்தான் வேண்டும் என்று எண்ணுகிறீர்களா? நன்ருக யோசித்துப் பதில் சொல்லுங்கள். ஏனெனில் உங்கள் சொல்படிதான் நான் நடக்க வேண்டும். மரண வேதனையிலிருந்து ஒரு மனிதனைக் காப்பாற்றினோம் என்ற திருப்தியோடு, நீங்கள் இந்த விஷயத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளாமல் முன்போலவே இருந்து விடலாம். அல்லது, நீங்கள் இஷ்டப்பட்டால், இங்கு, இதே அறையில், இதே க்ஷணத்தில் அறிவியலின் ஒரு புதுத் துறையே புகமுக்கும் சக்திக்கும் வழியாக இருக்கும் புத்தம் புதுப் பாதையே உங்கள் முன் தோன்றும். சைத்தானின் நாஸ்திக வாதத்தையே தூள்தூளாக்கும் ஒரு அதிசயம் உங்கள் முன் பிரத்தியட்சமாகத் தோன்றும்!'' என்று சொன்னுன் அவன்.

என்னிடத்தில் அமைதி இல்லை. இருந்தாலும் அமைதியோடிருப்பதுபோல் காட்டிக் கொண்டேன். "ஸார், நீர் ஏதோ புரியாததெல்லாம் பேசுகிறீர். நீர் சொல்லுவதை என்னுல் நம்ப முடியவில்லை என்ருல் உமக்கு அது ஆச்சரியமாயிராது. ஆனுல், இந்தப் புதிரான வேலைகளின் முடிவையும் நான் காணத் தயார்!'' என்றேன்.

"ரொம்ப நல்லது. லான்யன், உங்களுடைய வாக்குறுதிகளெல்லாம் நினைவிருக்கட்டும். நடக்கப் போகும் விஷயம், நமது தொழில் ரகசியத்தைச் சேர்ந்தது. ரொம்ப காலமாக நீங்கள் குறுகிய லோகாயதக் கொள்கைகளையே நம்பி வந்ததால், சாஸ்திரத்துக்குப் புறம்பான அதீத மருந்துகளையே நீங்கள் மறுதளித்து வந்தீர்கள். அதனுல், உங்களுக்கு மேலானவர்களையும் மதியாது இருந்தீர்கள்—ஆனுல், இதோ பாருங்கள்!'' என்ருன்.

அவன் கையிலிருந்த மருந்தை ஒரே மடக்கில் குடித்து விட்டான். உடனே அலறலிட்டான். சுற்றினுன், தடுமாறினுன். மேஜையை எட்டிப் பிடித்துக்கொண்டு, நிலைகுத்தி நின்ற கண்களை விழித்துப் பார்த்தான். திறந்த வாயோடு திணறினுன். நான் பார்த்துக் கொண்டிருக்கும்போது அவனிடம் ஏதோ மாறுதல் உண்டாயிற்று. உடன் உடம்பு வீங்கிப் புடைத்தது.

அவன் முகம் திடீரெனக் கறுத்தது. முகம் கரைந்து உருமாறி வந்தது. அடுத்த கணம், நான் என்னையறியாமல் துள்ளி விழுந்து சுவரில் சாய்ந்து கொண்டேன். அந்த அதிசயத்துக்குள் சிக்காது தப்பிக்க எண்ணுபவன் போல, கையை உயர்த்தினேன். என் மனம் பயங்கர உணர்ச்சியில் நடுங்கி அழுந்தியது.

"அட, கடவுளே! கடவுளே!" என்று மீண்டும் மீண்டும் கத்தினேன். ஏனெனில் என் முன்னே வெளுத்து, ஆட்டங் கொடுத்து, மயங்கித் தடுமாறி, கைகளால் தடவித் தத்தளித்து, சாவிலிருந்து காப்பாற்றப் பட்டவன்போல நின்ற அந்த மனிதன்தான்—ஹென்றி ஜெகில்!

பிறகு அவன் சொன்னதை யெல்லாம் காகிதத்தில் எழுத மனம் வரவில்லை. நான் பார்த்தது பார்த்தபடி, கேட்டது கேட்ட படி என் இதயம் பெரும் வேதனை யடைந்தது. ஆனால், இப் போதுங்கூட, நான் அந்தக் காட்சி உண்மையிலேயே நடந்தது தானு என்று என்னையே கேட்டுக் கொள்கிறேன். என்னுல் அதற்குப் பதிலே காண முடியவில்லை. என் உயிர் மூட்டோடு பெயர்த்தெடுத்த மரம் போல ஆட்டம் கண்டு விட்டது. தூக்கம் மறைந்தது. அந்தப் பயங்கரமான பீதி என் மனத்தை இரவும் பகலும் எந்த நேரமும் அலட்டுகிறது. என் வாழ் நாள் சுருங்கி விட்டது என்பதை உணர்கிறேன். நான் சாகத்தான் வேண் டும். ஆனுல், நான் கண்முன் பிரத்தியக்ஷப் பிரமாணமாகக் கண்டதை நம்பாமலே சாகிறேன். கசிந்து கண்ணீர் மல்கி அந்த மனிதன் என்னிடம் கூறிய விஷயங்களை நினைத்தாலும் எனக்கு உள்ளம் நடுக்குகிறது. அட்டர்ஸன், ஒரு விஷயம் சொல்கி றேன். நீ அதை நம்புவாயா? என் வீட்டிற்கு அன்றிரவில் வந்த ஆசாமி கார்யூவின் கொலை சம்பந்தமாக போலீஸ் வேட்டையாடித் திரிகின்ற அந்த ஹைடுதான்—ஹென்றி ஜெகிலே இதை நேரில் சொன்னுன்!

—ஹேஸ்டி லான்யன்

## ஜெகிலின் சுய சரிதம்

நான் 18—வருஷம் பிறந்தேன்; சொத்துள்ள குடும்பத் துக்கு வாரிசாய் அவதரித்தேன். இயற்கையிலேயே எனக்குப்

புத்திசாலித்தனமும், உழைப்பிலே நாட்டமும் அமைந்திருந்தது. உலகத்து அறிஞர்களும், நல்லவர்களும் என்னைப் பாராட்ட வேண்டும் என்றும், எதிர்காலத்தில் கீர்த்தியும் புகழும் பெறுவதற்கு வேண்டிய சகல அம்சங்களும் என்னிடம் நிறைந்திருக்கின்றன என்றும் நான் எண்ணினேன். இருந்தாலும் என்னுடைய குறைகளிலெல்லாம் மோசமானது என்னுடைய கட்டுப்பாடற்ற சவடால்தனம்தான். அந்தக் குணம் பலருக்கு இன்பமும் அளித்திருக்கிறதல்லவா? ஆனால் என்னுடைய மகோந்நத லட்சியங்களுக்கு, இந்தக் குணம் ஒரு பெரும் தடை என்று கருதினேன். பொது மக்களுக்கிடையில் என்னுடைய அறிவாற்றலால் தனித்துத் தலை தூக்கி நிற்க வேண்டும் என்று விரும்பினேன். ஆகையால் என்னுடைய இன்பங்களை ரகசியத்தில் அனுபவித்தேன். விஷயங்களை ஆராய்ந்து பார்க்கும் வயது வந்தபோது, வாழ்க்கையிலே நான் அடைந்த முன்னேற்றத்தையும், ஸ்தானத்தையும் பற்றி நானே ஆராய்ந்து பார்த்தேன். அப்படிப் பார்த்தபோது, நான் ஒருவிதமான இரண்டுபட்ட வாழ்க்கையே வாழ்ந்து வந்திருப்பதாக எனக்குப் பட்டது. நான் செய்த தவறான காரியங்களை வேறு யாராயினும் செய்திருந்தால் அவற்றை ஊரறிய ஒலி பரப்பியிருப்பர். ஆனால் என்னுடைய உயர்ந்த லட்சியங்களுக்கு முன்னிலையில் அம்மாதிரிச் செயல்கள் வெட்ககரமானவை என்று கருதி அவற்றை நானே மறைத்து வந்தேன். என்னை இம்மாதிரியாக வாழத் தூண்டியவை எனது லட்சியங்கள்தான்; என்னுடைய தவறுகளிலிருந்து எழுந்த அனுதாப உணர்ச்சியல்ல. எல்லா மனிதனுள்ளும் நன்மையும் தீமையும் இரட்டைப் பிறவியாக இருந்து, மனிதத்தன்மையையே இரு கூறாக்கி விடுகின்றன அல்லவா? அந்த நன்மையும் திமையும் என்னில் தனித் தனியாக வலுப் பெற்று இரண்டு நிலைகளாக நின்றன. இந்த நிலையில், இந்தக் கொடிய வாழ்க்கை நியதியைப் பற்றி நான் தீவிரமாகவும் ஆழமாகவும் சிந்தனை செய்ய விரும்பினேன். மதத்தின் மூலாதாரமே இந்த இரட்டை நியதியின் அடிப்படையிலேதான் எழுகிறது. இதிலிருந்துதான் துன்பங்கள் ஊற்றெடுத்துப் பாய்கின்றன! இம்மாதிரி நான் இரண்டுபட்டு வாழ்ந்த போதிலும், நான் மாய்மாலம் பண்ணவில்லை; வஞ்சகம் எண்

ணியதில்லை. என்னுடைய இரண்டு குணங்களும் அதனதன் வழியில் நாணயமானவை. கட்டுப்பாட்டை உதறித் தள்ளி, வெட்கரமான செயல்களில் இறங்கியதும் நான்தான்; தீராக் கவலைக்கும், ஓயாத் துன்பத்துக்கும் ஒழிவுண்டாகும் மார்க்கத்தைக் கண்டுபிடிக்க, அறிவுத் துறையில் உலகோரின் முன்னே அரும்பாடு பட்டதும் நானேதான். வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட மர்மங்களின் உண்மை நிலையை ஆராய்வதிலேயே முழுதும் கவனம் செலுத்தி வந்த என் விஞ்ஞான ஆராய்ச்சி, இந்த இரட்டைக் குணத்தின் இடைவிடாத போரின் மூலம் ஏற்பட்ட அனுபவத்தின் மீது ஒளி வீசியது. இப்படித் தினந்தோறும் என்னுடைய இதயமும் அறிவும் வெவ்வேறு வழியில் வளர வளர, நான் அந்த உண்மையைச் சிறிது சிறிதாக நெருங்கினேன். ஆனால், அந்த உண்மையைப் பரிபூர்ணமாகக் காணமல், அரை குறையாக அறிந்து கொண்டதால்தான் என்னுடைய வாழ்க்கையே கவிழ்ந்து போய் விட்டது. அந்த உண்மை இது தான்: உண்மையில் மனிதன் ஒருவனல்ல; இருவர். நான் ஏன் இருவர் என்று மட்டும் சொல்லுகிறேன் என்றால், என் அறிவு அதற்கு மேல் செல்லவில்லை. பிறர் என் வழியில் வருவார்கள்; என் அடிச் சுவட்டிலேயே பின் தொடர்வார்கள். முடிவாக மனிதன் என்பவன் பலர் நிறைந்த ஒரு சமூகம், அவனிடம் ஒன்றுக் கொன்று முரணான பல குணங்கள் தன்னிச்சையாய்க் குடிவாழ்கின்றன என்ற முடிவிற்கு வருவார்கள் என்றே நான் கருதுகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், என் சுபாவப்படி, ஒரே ஒரு திசையிலேதான் சென்றுகொண்டிருந்தேன். நன்மை தீமையை உணரும் குணத்தின் மூலம், மனிதனுக்குள் வாழும் இந்த இரட்டைக் குணத்தை அறிந்தேன். என் சித்தக் களத்திலே அவை இரண்டும் எப்போதும் மோதிக் கொண்டே யிருந்தன. அந்த இரண்டு குணங்களும் நானேதான் என்று உணரப் போய்த்தான் அவை இரண்டும் தனித்தனியாக என்னிலிருந்து கிளம்பியவை என்பதையும் என்னால் உணரமுடிந்தது. என்னுடைய விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் இப்படிப்பட்ட அதிசயம் சாத்தியமாகும் என்பதை நான் அறிவதற்கு முன்பே, இந்த இரண்டு குணங்களின் இரட்டை நிலையைப் பற்றியும் நான் பகற் கனவு கண்டு

ஆனந்தித்தேன். இப்படி இரண்டையும் தனித்தனி உருவமாகப் பிரித்து விட்டால், தாங்க முடியாத எத்தனையோ வாழ்க்கைத் தொல்லைகளிலிருந்து விடுபடலாம் என எண்ணினேன். தூய குணத்தின் ஆசாபாசங்களுக்கு உட்படாமல், தீய குணம் தன் வழியிலே சௌகரியமாகச் செல்லலாம். தூய குணமும் முன்னேற்றப் பாதையில் நிதானமாகச் சென்று, நற்காரியங்களைச் செய்யலாம்; தீய குணத்தினால் ஏற்படும் அவமானமும் அனுதாபமும் தூய குணத்தின் கருமத்தைப் பாதிக்காது. ஏறுக்கு மாறான இந்த இரண்டு குணங்களும் மனித வர்க்கத்தில் ஒன்றாகிக் கிடப்பது, மனித வர்க்கத்துக்கே ஒரு சாபக்கேடு. சித்தகர்ப்பத்திலே, இரு துருவங்களைப் போன்ற இவ்விரட்டைக் குணங்களும் இடையறாது போராடுவது பெரிய சாபக்கேடுதான். பின், இவை இரண்டையும் எப்படிப் பிரிக்கலாம்?

—இப்படி என் சிந்தனைகள் வளர்ந்து கொண்டிருக்கும் போது, என்னுடைய ரசாயன ஆராய்ச்சியிலிருந்து ஒரு ஒளிக் கீற்று அந்தச் சிந்தனையின் மீது பாய்ந்தது. அதன்பின் எனக்கு இதுவரையிலும் கண்டறியாத புது விஷயம் மனத் தாழத்தில் உருவாயிற்று. உடை உடுத்தி நாம் உலாத்துகின்ற இந்த சரீரம் உருமாற முடியும், பனியைப் போல் கரைந்து, புது உருவம் அடைய முடியும் என்று பட்டது. உப்பரிகையின் திரைகள் காற்றில் அலைவீசுவது போல, சில மருந்துகள் சரீரத்தை உலுப்பிச் சிலுப்பி உருமாற்றவும் கூடும் என்று நான் கண்டேன். இந்த ஆராய்ச்சியைப் பற்றி நான் அதிகம் சொல்லாததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று: ஒவ்வொரு மனிதனும் தன் தன் விதியையும் வாழ்வையும் தானே சுமந்து தீர வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டவன் என்பதையும் நான் அறிந்துகொண்டேன். அந்தச் சுமையை இறக்கவோ தூர எறியவோ எண்ணினால், அது கீழே சாயாமல், தாங்க முடியாத கனம் பெற்று அவனை மேலும் மேலும் அழுத்துகிறது. இரண்டு: அதை என் வாக்குமூலத்திலிருந்தே அறிந்து கொள்ளலாம். என்னுடைய ஆராய்ச்சிகள் இடைவெளித் தட்டில் முடிவடையாமல் நிற்கின்றன. தெய்வக் களியும் ஒளியும் துலங்கும் என் ஆத்மாவும், என் ஊனுடம்பும் தனித்தனியானவை என்பதை நான் அறிந்ததோடு மட்டுமில்லை. சிம்மாசனமேறியிருக்கும் ஆத்ம சக்திகளைக் கீழே

தள்ளி, அதன் சக்தியைப் பறிக்க ஒரு மருந்தைக் கண்டு பிடித்தேன். அதன் மூலம் நான் வேறொரு உருவமும் முகமும் பெற்றேன். அதுவும் நான்தான். ஏனெனில் அந்த உருவத்திலும் என் ஆத்மாவின் கடைத்தரமான குணங்களின் முத்திரையும் இருந்தது.

இந்தச் சோதனையைச் சாதனையில் கொண்டு வருவதற்கு நான் மிகவும் தயங்கினேன். சாவுக்குத் துணிந்துதான் இந்தச் செயலில் இறங்கினேன் என்பதும் எனக்குத் தெரியும். ஏனெனில், உடம்பின் கட்டுக்கோப்பையே உலைத்து உருமாற்றி, புதிய ஆகிருதியைப் படைக்கும் சக்தி பெற்ற அந்த மருந்தின் அளவில் ஒரு துளி கூடிவிட்டாலும், சந்தர்ப்ப பேதம் ஏற்பட்டாலும் சரீரத்தையே ஒரேயடியாய்த் தொலைத்தாலும் தொலைத்துவிடும். ஆனால், இப்படிப்பட்ட அபூர்வமான ஆராய்ச்சியைக் கண்டு பிடித்ததனால் உண்டான ஆவல், பயத்தை வென்று விட்டது. அந்த மருந்தைத் தயார் செய்து ரொம்ப நாள் வைத்திருந்தேன். கடைசியாக அந்த மருந்தில், கலக்க வேண்டிய உப்பை, வேண்டு மட்டும் ஒரு மருந்துக் கடையிலிருந்து வாங்கி வைத்துக் கொண்டேன். ஒருநாள் இரவு நான் மருந்துகளைச் சேர்த்தேன். அவை கொதித்து, புகை கிளம்புவதைக் கவனித்தேன். பொங்கி அடங்கியதும் அந்த மருந்தைத் தைரியத்துடன் குடித்து விட்டேன்.

பெரும் வேதனை உண்டாயிற்று. எலும்புகள் நொறுங்கி அரை பட்டதுபோலிருந்தது. வேதனை நிறைந்த ஓங்காரிப்பு வந்தது. சாக்காட்டின் போதும் ஜனனத்தின் போதும் ஏற்படுவதைவிட, அதிக பயங்கரமான பயம் ஏற்பட்டது. இந்த வேதனையெல்லாம் விரைவில் குறைந்தது; கொடும் வியாதியிலிருந்து தப்பித்தவனைப்போல், நான் தன்னிலைக்கு வந்தேன். என்னுடைய உணர்ச்சிகளில் ஒரு அதிசயம், விவரிக்க முடியாத புதுமை தென்பட்டது; அந்தப் புதுமையிலே, இனிமையுமிருந்தது. உடலிலே வாலிபம் திரும்பியது; பாரம் குறைந்தது: உற்சாகம் வந்தது. என்னுள் ஒரு பொறுப்பற்ற முரட்டு சுபாவம் தலைதூக்கியது; கோர்வையற்ற கற்பனைகள் பந்தயம் போல் ஓட்டம் ஓடின; கட்டுப்பாடுகள் உலைந்து, மனம் விடுதலை பெற்றது போலிருந்தது. அதுவரை நான் அறியாத உணர்ச்சி

அது ; எனினும் அது அப்பாவியான உணர்ச்சியல்ல. நான் புது மனிதனுன அந்த விநாடியிலேயே, என்னுள்ளே கிடந்த தீமைக்கு அடிமையாகி, துஷ்டனுய், பெருந் துஷ்டனுகி விட்டேன் என்பதையும் உணர்ந்தேன். அந்த எண்ணம் என்னில் பொங்கும் திராக்ஷை மதுவைப் போல உற்சாகமளித்தது. இந்த உணர்ச்சிகளின் புதுமையிலே தன்னை மறந்து கைகளை நீட்டினேன் ; அப்போதுதான் நான் பருமனிலும் குறைந்து போய் விட்டேன் என்பதை உணர்ந்தேன்.

அந்த வேளையில் என் அறையில் நிலைக் கண்ணுடி எதுவும் இல்லை. இதை எழுதும்போது என்முன் இருக்கும் இந்த நிலைக் கண்ணுடி இந்த மாறுதல்களைக் கண்டுகொள்வதற்காக, பின்னுல் வாங்கி வைக்கப்பட்டதே ஆகும். இரவு கடைச் சாமம் வரை ஓடிவிட்டது. குமரியிருட்டாக, பின்சாமம் இருந்தபோதிலும், பகலைப் பிரசவிக்கத் தயாராயிருக்கும் நிறை சூலியாக இருந்தது, இரவு. வீட்டிலுள்ளவர்கள் யாவரும் நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். நம்பிக்கையும் வெற்றியும் கொண்ட பெருமிதத்தோடு நான் என் படுக்கையறை வரை அந்தப் புத்துருவோடு செல்லத் துணிந்து விட்டேன். தாழ்வாரத்தைக் கடந்தேன். வானத்து நட்சத்திரங்கள் என்னைக் கண்டன. இமைக்காத நயனத்தோடு காணும் அவை தாம் என்னுடைய புது உருவத்தையும் முதன் முதலாகக் காண்கின்றன என எண்ணினேன். என்னுடைய சொந்த வீட்டில், ஒரு அன்னியன் போல, பயந்து பயந்து நடந்தேன். என் அறைக்குள் வந்து கண்ணுடியில் முதன்முதலாக எட்வர்ட் ஹைடின் உருவத்தைக் கண்டேன்.

இங்கும் நான் திட்டமாய் எதுவும் சொல்ல இயலாது ; எனக்கே தெரியாத விஷயமாய் இருக்கலாம் ; அனேகமாய் சரியான ஊகமாகவே இருக்க முடியும் என்றே படுகிறது. மருந்தினுல் உருமாற்றப்பெற்ற என்னுடைய இந்தப் புது உருவத்தில் தெம்பும் திறனும் குறைந்து போயிருந்தன. உழைப்பிலும், கட்டுப்பாட்டிலும், நற்காரியங்களிலும் ஈடுபட்டுவந்த என் வாழ்வில் தீய குணம் ஒரு சிறு பகுதிதான். ஆதலால்தான் எட்வர்ட் ஹைட், ஹென்றி ஜெகிலைவிட வயதிலும் உருவிலும், தேகக் கட்டிலும் குறைந்து விட்டான் என்று நான் நினைத்தேன். ஜெகிலின்

முக விலாசத்தில் எப்படித் தூய ஒளி வீசியதோ, அதுபோல ஹைடின் முகத்தில் அகலமாகவும், அழுத்தமாகவும் தீமை கோடு கிழித்திருந்தது. (மனிதனுடைய கடைத்தர அம்சமென நான் இன்னும் கருதிவரும்) தீமை அந்தப் புதிய உடம்பில் அங்க ஹீனத்தையும், சோஞ்சான் தன்மையையும் ஏற்படுத்தியது என நான் எண்ணுகிறேன். எனினும் அந்த அவலக்ஷணமான உருவத்தைக் கண்ணாடியில் பார்த்தபொழுது, அந்த உருவத்தின்மீது எனக்கு வெறுப்புண்டாகவில்லை; அதைக் கை நீட்டி வரவேற்றது என் உள்ளம். அந்த உருவும், நானே தான். அதுவும் மானுஷ்யமும், இயற்கைக் குணமும் பொருந்தியதுதான். தெளிவற்று, அரைகுறை உணர்ச்சியோடு இருந்த என்னுடைய முகத்தைக்காட்டிலும், இந்தப் புது முகத்தில் உணர்ச்சியும்தனித் தன்மையும், ஆத்மப் பிரதிபலிப்பும் இருப்பதாக எனக்குப் பட்டது. இந்த அளவுக்கு நான் எண்ணியது ரொம்ப சரி. நான் ஹைடாகத் திரிந்த பொழுது, என்னை நெருங்குபவர்கள் யோசித்துத் தான் நெருங்கினார்கள் என்று கண்டு கொண்டேன். நாம் சந்திக்கும் எல்லா மனிதர்களிடமும் நன்மையும் தீமையும் கலந்து வாழ்வதனாலேயே இப்படிச் செய்கிறார்கள் என்று கருதினேன். மனித சமுதாயத்தில் எட்வர்ட் ஹைட் ஒருவன் தான் சம்பூர்ண தீமைக் குணமே உருவாய்ப் பிறந்து விட்டான்!

கண்ணாடி முன் நான் ஒரு கணம் தயங்கினேன். இரண்டாவதும், இறுதியானதுமான என் சோதனை பாக்கியிருந்தது. இப்போது ஏற்பட்டுள்ள இந்த அங்க அமைப்பு மீண்டும் பழைய உருவத்தை அடைய முடியுமா அல்லது பொழுது விடிவதற்கு முன் நானே என் சொந்த வீட்டை விட்டு வெளியே ஓடிச் செல்ல வேண்டுமா என்று அறிய வேண்டியிருந்தது. மீண்டும் என் அறைக்கு ஓடி வந்தேன். மருந்தைக் கலந்தேன். மீண்டும் ஒரு முறை குடித்தேன்; அதே வேதனைகளை அனுபவித்தேன். பழையபடியும் உருவம், குணம், முகம் எல்லாவற்றிலும் ஹென்றி ஜெகிலாகவே மாறி விட்டேன்.

அன்றிரவு நான் ஆபத்தைக் கொண்டுவரும் பாதையில் திரும்பினேன். என்னுடைய ஆராய்ச்சியைப் பெருந்தன்மையான வழியில் கண்டு பிடித்திருந்தேனானால், கருணையும், அருளும்

என்னை ஆட்கொண்ட போது, இந்தச் சோதனையில் இறங்கியிருந்தேனுல், எல்லாமே வேறுவிதமாய் மாறியிருக்கும். ஜனன மரண பயத்தில் விளைந்த இந்தச் சோதனையின் மூலம் நான் ஒரு பைசாசமாக மாருமல், ஒரு தேவ மகனுக வெளி வந்திருப்பேன். மருந்து தனது வேலையில் பாரபட்சம் காட்டவில்லை. அது அசுரத் தன்மையையோ, அமரத் தன்மையையோ உண்டாக்கவில்லை. சிறையிருந்த என் மனத்தை, சிறைக் கதவுகளை உடைத்தெறிந்து விடுவித்தது. உடனே உள்ளே சிறைப்பட்டுக் கிடந்த குணங்களெல்லாம் தப்பி வெளி வந்தன. அந்த வேளையில், என் நல்ல மனம் சோர்ந்திருந்தது. என்னுடைய மனத்தின் தீய அம்சம் ஆசையோடு விழித்துக் கொண்டிருந்தது; சமயம் பார்த்து சாமர்த்தியமாகவும் விரைவாகவும், சந்தர்ப்பத்தைக் கைப்பற்றியது. அதன் விளைவு—எட்வர்ட் ஹைட்! ஆகவே நான் இருவேறு குணங்களைப் போலவே, இருவேறு உருவங்களும் கொண்டிருந்தாலும், ஒன்று தீமையே உருவான ஹைடாகவும், மற்ரென்று நன்மை அம்சம் கொண்ட ஜெகிலாகவுமே இருந்தது. இந்த அபூர்வக் கலவையைத் திருத்தவோ, முன்னேற்றவோ எனக்கு நம்பிக்கையே இல்லாமல் போய் விட்டது, ஆகவே என் போக்குக் கீழ்த்தரமாகவே சென்று கொண்டிருந்தது.

ஆராய்ச்சியினுலேயே வரண்டு காய்ந்து போன என் வாழ்வை அப்போதும் நான் விரும்பவில்லை. இருந்தாலும், சமயங்களில் சந்தோஷமாகப் பொழுதுபோக்க விரும்புவேன். என்னுடைய இன்பங்களோ இழிவானவை. நானோ பிரபலமும் பெயரும் பெற்றுவிட்டதோடு மட்டுமின்றி, வயதிலும் பெரியவனுகி விட்டேன். ஆதலால், அந்த இன்பங்களை இந்த வாழ்வுக்கு மத்தியிலே அனுபவிப்பதற்குப் பொருத்தமும், சௌகரியமும் இல்லை. அதனுல்தான் அந்தப் புதிய சக்தி என்னை மயக்கி, என்னை இன்பவழிகளில் இழுத்தது; அதற்கு நானும் அடிமையானேன். அதற்கு அந்த மருந்தைக் குடிக்க வேண்டியது. உடனே பிரபலமான டாக்டர் ஜெகிலினுடைய உடலைக் களைந்து விட்டு, எட்வர்ட் ஹைடின் உடலைக் கனத்த அங்கியைப் போல் போட்டுக் கொள்ள வேண்டியது. இந்த எண்ணத்தைப் பற்றி எனக்கே சிரிப்பு வந்தது; அந்த வேளையில், அது தமாஷாகவும்

இருந்தது. அதற்கான ஏற்பாடுகளை சர்வ ஜாக்கிரதையாகவே செய்தேன். ஸோஹோவில் போலீஸார் தேடிவந்த அந்த வீட்டை வாடகைக்கு எடுத்தேன். மனச்சாட்சியே அற்று மௌனமாயிருக்கும் ஒரு பிராணியை வேலைக்கு அமர்த்தினேன். அதே மாதிரி, இங்கு என்னுடைய வேலைக்காரர்களுக்கெல்லாம் "மிஸ்டர் ஹைடுக்கு எனது வீட்டில் பூர்ண சுதந்தரமும் அதிகாரமும் பண்ண உரிமையுண்டு' என்று தெரிவித்திருந்தேன். அறியாத் தவறுகளுக்கு அஞ்சி, நானே ஹைடின் உருவத்தோடு என் வீட்டில் வந்து போய்ப் பழகினேன். மேலும், நீ மிகமிக ஆட்சேபித்த அந்த உயிலையும் எழுதி முடித்தேன். ஏனெனில், டாக்டர் ஜெகிலுக்கு ஏதேனும் அசந்தர்ப்பம் நேர்ந்துவிட்டால், எந்தவித நஷ்டமுமின்றி, அவரது சொத்தை ஹைடின் உருவத்தில் மீண்டும் அடைந்து அனுபவிக்கட்டுமே என்பதற்காகவே அந்த ஏற்பாடு. இப்படி எல்லா வழியிலும், பாதுகாப்புக்கள் அமைத்துக் கொண்டபின், நான் என்னுடைய உருமாற்றத்தால் ஏற்பட்ட வசதியைத் துணையாகக் கொண்டு, இன்பங்கள் அனுபவித்தேன்.

முன்னெல்லாம் மனிதர்கள் பிறரைக் கொல்லுவதற்குத் தம்மிடமே கைக்கூலி நபர்களை வைத்திருந்தார்கள்; தூண்டி விட்டு, காரியத்தைச் சாதித்துவிட்டு, தமது பெயரையும், புகழையும் பத்திரமாய்க் காப்பாற்றி வந்தார்கள். ஆனால், தானே அப்படிப்பட்ட செயல்களைச் செய்து விட்டு, தானே வேறு உருவில் தப்பித்துக் கொண்ட ஆசாமி நான் ஒருவன்தான். பொது ஜனங்களிடம் மதிப்பைப் பெற்ற மனிதனாக வெளியில் உலாவிக் கொண்டு, நினைத்த மாத்திரத்தில் ஒரு பள்ளிப் பையனைப் போல, இவையெல்லாவற்றையும் களைந்து விட்டு, விடுதலை வெள்ளத்தில் பாய்ந்து நீந்தினேன். ஆனால், பிறர் கண்டு பிடிக்க முடியாத இந்தக் கூண்டில், நான் பத்திரமாகவே இருந்தேன். நான் இல்லவே இல்லை; என்பதை யோசித்துப் பார். என்னுடைய ரசாயன சாலைக்குள் செல்ல வேண்டியது; மருந்தைக் கலந்து ஒரு மடக்குக் குடிக்க வேண்டியது, அவ்வளவு தான். அவன் எது செய்திருந்தாலும் சரி, எட்வர்ட் ஹைட் கண்ணாடியிலே படியும் மூச்சுப் புகைபோல மறைந்துவிடுவான். அதற்குப் பதிலாக, விளக்கைத் தூண்டி வைத்துக் கொண்டு

ஆர அமர இருந்து ஹென்றி ஜெகில் படித்துக் கொண்டிருப் பான்; சந்தேகம் என்பதையே அவன் சந்தி சிரிக்கப் பண்ண முடியும்.

என்னுடைய மாறு வேடத்தில் நான் தேடித் தேடி அனு பவித்த இன்பங்களெல்லாம் இழிவானவை என்று கூறினேன். அதைவிடக் கடுமையான வார்த்தையை நான் கூறமாட்டேன். ஆனால் அந்த இன்பங்கள் ஹைடின் ஆட்சியில் கொடூரமானவை யாக மாற ஆரம்பித்தன. இப்படிப்பட்ட இன்பானுபவ வேட்டையாடிவிட்டுத் திரும்பினால், சமயத்தில் நானே என்னு டைய சல்லித்தனமான நடவடிக்கைகளைக் கண்டு ஆச்சரிய மடைவேன். என்னுடைய இதயத்திலிருந்து உற்பவித்த இந்த ஆசாமி, நானே இன்பானுபவத்தை அனுபவிக்க அனுப்பி வைத்த இந்த ஹைட், இயற்கையாகவே குரூரமும், சின்னத் தனமும் படைத்தவன். அவனுடைய ஒவ்வொரு செயலும் சிந் தனையும் சுயநலத்தோடு ஒட்டியவை. எந்த வகையான சித்திர வதையின் மூலமும் கண்மூடித்தனமாக, அறிவிழந்து இன்பானு பவத்தை அள்ளிப் பருகுவது அவன் செயல்; அத்தனை கல் நெஞ் சம் படைத்தவன். எட்வர்ட் ஹைடின் இந்த ஈனச் செயல்களைக் கண்டு, ஹென்றி ஜெகில் பிரமையடைவதுண்டு. ஆனால் நிலைமை சாதாரண விதிகளுக்கு அப்பாற்பட்டது போலிருந்ததால், மனச் சாட்சியின் பிடி தளர்ந்து கொண்டே வந்தது. ஹைட் மட் டுந்தான், ஹைட் ஒருவன்தான் குற்றம் செய்தவன்; ஜெகில் அப்படிப்பட்டவனில்லை. ஜெகில் வழக்கம்போல் தனது பழைய நல்ல குணங்களுக்கு ஆளானான். ஹைட் செய்யும் தீமைகளுக்கு பிராயச் சித்தமாக, ஜெகில் சமயம் வாய்த்தபோதெல்லாம் ஏதேனும் தருமம் செய்து வந்தான். ஆகவே என் மனச் சாட்சி தூங்க ஆரம்பித்து விட்டது. நானறிய நடந்த இந்தத் துராக் கிரமச் செயல்களை (அவைகளை நான்தான் செய்தேன் என்பதை இப்போதுகூட ஒப்புக்கொள்ளத் தயங்குகிறேன்) விவரமாகச் சொல்லப் போவதில்லை. இந்த வாழ்வில் எனக்கு ஏற்பட்ட எச்ச ரிக்கைகளையும், இந்த நிலைமைக்கு என்னைக் கொண்டுவந்து விட்ட வழிகளையுமே இங்கு சொல்ல விரும்புகிறேன். ஒரு விபத்து நடந்தது; ஆனால், அதனால் எதுவும் நேர்ந்துவிடவில்லை; அதை விட்டுவிடுகிறேன். ஒருநாள் ஒரு குழந்தையிடம் கொடூர

மாய் நடந்து கொண்டேன்; அது தெருவில் சென்ற ஒருவனுக்கு ஆத்திரமூட்டியது. அந்த ஆசாமி உன் உறவினன் என்பதைப் பிறகுதான் அறிந்தேன். டாக்டரும், குழந்தையின் பெற்றோரும் அவனோடு சேர்ந்து கொண்டார்கள். அப்போதெல்லாம் நான் பிராண பயத்தோடு தான் இருந்தேன். அவர்களுடைய நியாய யான கோபத்தைப் போக்குவதற்காக, ஹைட் அவர்களைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்து, ஜெகிலின் பேரால் நஷ்டஈட்டுக் காக, செக் கொடுக்க நேர்ந்தது. பிறகு இம்மாதிரிச் சங்கடங்களை நிவர்த்திப்பதற்காக, இன்னொரு பாங்கில், ஹைடின் பேருக்கு தனியாகப் பணம் போட்டு, கணக்கு வைத்தேன். என்னுடைய கையெழுத்தைப் பின்பக்கமாகச் சாய்த்தெழுதி, ஒரு கையெழுத்தையும் போட்டேன். இனிமேல் எந்த விதியும் என்னைப் பாதிக் காது என எண்ணினேன்.

இரண்டு மாதங்களுக்கு முன், ஸர் டான்வர்ஸின் மரணத்துக்கு முன்னால், நான் என்னுடைய வேட்டைப் பிரதாபத்துக்குப் பின்னர் இரவு வெகு நேரம் கழித்து வீட்டில் வந்து படுத்தேன். காலையில்எழுந்திருக்கும்போது உடம்பில் விபரீதஉணர்ச்சி தென்பட்டது. ஒன்றும் விளங்காமல் திருகத் திருக விழித்தேன், என் அறையிலுள்ள சாமான்களும், அலமாரிகளும், படுக்கைத் திரைகளும் நன்றாக அடையாளம் தெரிந்தன. இருந்தாலும் நானிருந்த இடத்தில் இல்லையெனவே பட்டது. வழக்கமான இடத்தில் படுத்து எழுந்ததாக எனக்குப் படவில்லை. ஆனால் எட்வர்ட் ஹைடின் உடம்போடு ஹோஹோவிலுள்ள வீட்டில் தூங்கியதாகவே பட்டது. எனக்கே சிரிப்பு வந்தது. இந்த மாதிரியான மன உணர்ச்சிக்கு என்ன காரணம் என்று பார்த்தேன். இந்த மாதிரியான உணர்ச்சிப் புதிரில் அகப்பட்டுக் கிடந்த என் கண்ணில் என் கரம் பட்டது. நீ பார்த்திருக்கிறாயே, ஜெகிலின் கை—நீளமாக, உருவ அமைப்பு சரியாக அமைந்த ஜெகிலின் கரம்! காலை நேரத்தின் மஞ்சள் வெயிலில் அதை நன்றாகப் பார்த்தேன். அந்தக் கை ஒல்லியாகவும், ஒழுங்கற்றதாகவும், மயிர் அடர்ந்ததாகவும் இருந்தது—அது ஹைடின் கை!

இந்த அதிசயத்தை அரை நிமிஷ நேரம் பிரமிப்புடன் பார்த்தேன். பிறகு பறையொலி கேட்டதுபோல் நடுநடுங்கி,

என் மனத்தில் பயங்கரம் குடிகொள்வதைக் கண்டேன். உடனே படுக்கையை விட்டு எழுந்து, நிலைக் கண்ணாடிக்கு ஓடினேன். அதில் கண்ட காட்சி என் உடம்பின் ரத்தத்தில் மெல்லிய ஐஸைப் பாய்ச்சுவது போலிருந்தது. ஆம். நான் ஹென்றி ஜெகிலாக, படுக்கச் சென்றேன். எட்வர்ட் ஹைடாக எழுந்திருந்தேன்! இதை நான் எப்படி விளக்குவது? என்னையே நான் கேட்டுக் கொண்டேன். உடனே வேறொரு பீதி மனத்தைப் பற்றிக் கொண்டது. இதை எப்படி மாற்றுவது? நன்றாக விடிந்து விட்டது. வேலைக்காரர்கள் எழுந்து விட்டனர். என்னுடைய மருந்து வகையறுக்களோ ரசாயன சாலையில் இருந்தன. அதற்கோ படுக்கை யறையிலிருந்து இரண்டு மாடிப் படிகளைத் தாண்டிப் போகவேண்டும். பின்கட்டு வழியாக, வான வெளியான முற்றத்தின் வழியாக, ஆபரேஷன் மேடை வழியாகச் செல்லவேண்டும்—எப்படிப் போவது? முகத்தை மூடிக்கொள்ளலாம். அதனால் என்ன பிரயோஜனம்? என் உடலின் உயரத்தை என்ன பண்ணுவது? பிறகுதான் என் வேலைக்காரர்கள் என்னை ஹைடின் உருவத்தில் வந்து போவதைக் கண்டிருக்கிறார்களே என்ற எண்ணம் உதித்தது; அதன் மூலம் நிம்மதியும் பிறந்தது. உடனே உடைகளைச் சரிசெய்து கொண்டு வெளி வந்தேன். வரும்போது பிராட்ஷா என்னைப் பார்த்தான். அந்த வேளையில், அந்த மாதிரி வேஷத்தில் ஹைட் செல்லுவதைக் கண்டு அவன் பிரமித்தான். பத்து நிமிஷம் கழித்து ஜெகில் சுய உருவம் பெற்று, காலை உணவை அருந்திக் கொண்டிருந்தான்.

பசியே எடுத்ததாகத் தெரியவில்லை. இந்த விபரீத சம்பவம் சுவரில் எழுதிய தெய்வ நீதியை வாசித்த பாபிலோனியக் கரத்தைப் போல், என் அநுபவத்துக்கு எதிரிடையாகிப் பயமுறுத்தியது. என்னுடைய இரட்டை வாழ்வின் பிரச்சினைகளை நன்கு ஆராயத் தொடங்கினேன். நான் படைத்துவிட்ட அந்தப் புது உருவம் காலக்கிரமத்தில் நன்றாக வளர்ந்து விட்டது போலப் பட்டது. எட்வர்ட் ஹைடின் ஆகிருதியும் வளர்ந்து, அதில் ரத்த விருத்தியும் தேக புஷ்டியும் உண்டாகியிருந்தன. இப்படியே விட்டு விட்டால், என்னுடைய சுயரூபமே இல்லாது மறைந்து, என்னுடைய தீய குணம் மட்டும் நிலைத்து நின்று, நான் ஹைடாகவே இருந்துவிட நேருமோ என்ற பயம் மனத்தைப் பற்றியது.

மருந்தோ எப்போதும் ஒரேமாதிரி பலன் அளித்ததில்லை. ஆரம்ப காலத்தில், அதனால் படுதோல்விதான் ஏற்பட்டது. ஒரு தடவை உயிருக்கே ஆபத்தாகி விடுமோ என்னும்படி மருந்தை மூன்று மடங்கு உட்கொள்ள வேண்டியிருந்தது. இதெல்லாம் எனக்குப் பெரும் கவலையை உண்டாக்கவில்லை. ஆனால், அன்று காலை நடந்துவிட்ட விபரீதத்திலிருந்து ஒரு புது விஷயம் விளங்கிற்று, ஜெகிலின் உருவாக மாற்றுவதில் சிரமமிருந்தது; ஹைடின் உருவமோ மருந்தின் உதவியின்றியே வந்து விடுகிறது. ஆகையால், எல்லாம் இதைத் தான் கூறின: என்னுடைய நல்ல குணத்தின் உயர்வே மறைந்து, தீய அம்சம் தலைதூக்கி வளர்ந்து வந்தது.

இந்த இரண்டில் நான் ஏதேனும் ஒன்றை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டியவனானேன். செயல் முறையைத் தவிர, ஞாபக சக்தியில் இரண்டு உருவங்களும் ஒத்துப் போயிருந்தன. ஹைடின் இன்பங்களையும், திருவிளையாடல்களையும் ஜெகில் சமயங்களில் கண்டு ஆனந்திப்பதுண்டு; சமயங்களில் கவலையுறுவதும் உண்டு. ஹைடோ ஜெகிலைக் கவனிப்பதே இல்லை. தப்பித் தோடி வரும் மலைக் கள்ளனுக்கு, ஒரு குகை தென்பட்டது போலத்தான் ஜெகில் அவனுக்குப் பயன்பட்டான். ஜெகிலுக்கு ஹைடிடம் ஒரு தந்தையின் பரிவும் கரிசனையும் இருந்தது; ஹைடோ தறுதலைப் பிள்ளைபோல தன்னிச்சையாய்த் திரிந்தான். நான் ஜெகிலாகவே மாறிவிடுவதென்றால், ஹைட் இத்தனை நாளும் ரகசியத்தில் அனுபவித்த இன்பானுபவங்களை விட்டொழிக்க வேண்டும், ஹைடோடு சேர்வதென்றால் என்னுடைய ஆயிரமாயிரம் கனவுகளையும் லட்சியங்களையும் கைவிட்டு விட்டு, நட்புரிமைகளை இழந்து அடியோடு கவிழ்ந்துவிட வேண்டும். இந்த எடையில் ஏற்றத் தாழ்விருக்கலாம். இருந்தாலும், வேறு ஒரு அளவையும் இருந்தது. புலனடக்கத்தின் புகை நெருப்பில் ஜெகில் சமயங்களில் தவிப்பதுண்டு; ஹைடோ, தான் பெற்றிராத நற்குணத்தைப் பற்றி பிரக்ஞைகூட அற்றிருப்பான். இந்தப் பிரச்சினையின் சிக்கல்கள் மனிதனைப் போலவே பழமையானது; பழக்கமானவை. பயந்து பயந்து பாவச் செயலில் இறங்கும் எவனுக்கும் இம்மாதிரியான நடுக்கங்களும் எண்ணங்களும் உண்டாவதுண்டு. அவர்களைப்போல எனக்கும் ஏற்பட்

டது. நான் தூயவைதான் துணிந்தேன்; எனினும் அதில் காலூன்றி நிற்க வலியிழந்து போய்விட்டேன்.

ஆம். நண்பர்கள் புடைசூழ,நல்ல எண்ணங்களோடு நிம்மதி யற்றுப் பொழுதைக் கழிக்கும் ஒரு வயதான டாக்டரின் அம்சத் தையே நான் விரும்பினேன். ஹைடென்ற மாறுவேடத்தி லிருந்து கொண்டு நான் அனுபவித்த சுதந்திரம், இளமை, ரத்தக் கொழுப்பு, ரகசிய இன்பங்கள் எல்லாவற்றிற்கும் ஒரு கும்பிடு போட்டு வழியனுப்பினேன். இந்த முடிவைச் செய்தபோதிலும், என்னை யறியாமலே அவ்வுருவில் உலவ நேரலாம் என்பதற்காக ஸோஹோ வீட்டை விடாமல் வைத்திருந்தேன்; ஹைடின் துணி மணிகளையும் பத்திரமாக வைத்திருந்தேன். இரண்டு மாத கால மாய் என்னுடைய தீர்மானத்தைக் குலைக்க வில்லை. அத்தனை அடக்கத்தோடும் கட்டுப்பாடோடும் வாழ்ந்து வந்தேன். மனச் சாட்சியின் குதூகலத்தில் வாழ்ந்தேன். ஆனால் காலம் என்னு டைய பிரதிக்ஞையை உடைத்து, பீதியைக் குலைத்தது. மனச் சாட்சியின் பாராட்டு மனத்துக்குப் பிடிக்கவில்லை. மனத்துக் குள்ளே ஹைட் விடுதலைப் போராட்டம் செய்வதுபோல், மனத்திலே ஆசைகள் எழும்பி அல்லற்படுத்தின. மனம் தளர்ந்திருந்த வேளையில், மீண்டும் ஒரு தடவை மருந்தைக் குடித்தே விட்டேன்.

ஒரு குடிகாரன் தனது குடிப்பழக்கத்தைப் பற்றி எண்ணும் போது, நூற்றுக்கு மேலான தடவைகளில் அந்தப் பழக்கத் தால் ஏற்பட்ட அபாயங்களைத் தெரிந்திருந்தும், அதைப்பற்றி யோசிக்கமாட்டான் என்றே நான் கருதுகிறேன். நானும் அப் படித்தான். எத்தனை தடவை ஆராய்ந்து நோக்கியும், ஹைடின் தீய செயல்களையும் ஒழுக்கக் கேட்டையும் நான் ஓரளவு அனு மதித்துத்தான் வந்திருக்கிறேன். அதனாலேயே நான் தண்டனை யும் அடைந்தேன். என் மனத்திலுள்ள பிசாசு வெகுநாள் சிறைப் பட்டுக் கிடந்தது. அதனால் அது கர்ஜித்துக் கொண்டு வெளி வந்தது. மருந்தைச் சாப்பிடும்போதே, என் மனத்தில் மகா கோர மான ஒரு செயலைச் செய்தாக வேண்டும் என்று பட்டது. நான் கொலை செய்த அந்த அப்பாவி டான்வெர்ஸின் பேச்சைக் கேட்டு, நான் பொறுமையிழந்து சீறியதற்குக் காரணமே, இதுவாயிருக்

கலாம். கடவுளின் சந்நிதானத்தில் இதைத்தான் கூறுவேன். அறிவுள்ள எந்த மனிதனும் அந்த அற்பக் காரணத்தால் அறிவிழந்து அந்தக் கொடும் பழியைச் சுமந்திருக்க மாட்டான். நோயின் நச்சரிப்பைத் தாங்காத குழந்தை எப்படி விளையாட்டுப் பொருளை உடைத் தெறியுமோ, அப்படியே நானும் பொறுப் பற்று நடந்து கொண்டேன். முழு மோசமானவர்களுக்கும் இம் மாதிரியான சோதனைகளில், தம்மைத் தாமே சுதாரித்துக் காப் பாற்றும் சில அபூர்வ குணங்கள் உண்டு. அந்தக் குணங்களை யெல்லாம் நான் வேண்டுமென்றே உதறி அடித்து விட்டதனுல், எப்போது கொஞ்சம் தடுமாறினுலும், நான் தவறி விடுவேன்.

அது முதல், என்னுள் கிடந்த நரகக் குணம் விழித்தெழுந்து வீறுடன் கிளம்பிற்று. மகிழ்ச்சியிலே என் உடம்பை நானே அடித்து வதைத்தேன்; அந்த இன்ப வேதனையிலே மகிழ்ந் தேன். எனக்கே களைப்பேற்பட்ட பின்தான், என் பித்துக்குளித் தனத்தின் ஜன்னி வெறியினூடே, என் இதயத்தில் பயம் குளிர்ந்தோடிப் பாய்ந்தது. மயக்கம் தெளிந்தது, என் வாழ்க்கை கை கடந்து விட்டதாக உணர்ந்தேன். என்னுடைய தீய குணத் தின் தீரா ஆவல் தணிந்த அந்த இடத்திலிருந்து தப்பி ஓடினேன். உயிராசை என்னை முற்றும் பற்றியது: ஸோஹோவிலிருந்த வீட்டுக்குச் சென்று அங்கிருந்த காகிதங்களை யெல்லாம் நாச மாக்கினேன். பிறகு விளக்கெரியும் தெருக்கள் வழியாகத் தப் பிச் சென்றேன். என் குற்றத்தின் வெற்றியும், பயமும் மனத்தை உலுப்பின. செல்லும் வழியெல்லாம் மேற்கொண்டு என்னென்ன செய்வது என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டு போனேன். யாரேனும் பின் தொடர்கிருர்களா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றேன். வீடு சென்று மருந்தைக் கலந்து குடித்த பின்தான் ஹைடுக்கு உயிர் வந்தது. உருமாற்றத் தின் வேதனைகள் ஓய்ந்து, ஹென்றி ஜெகில் உருவானவுடன் அவன் கண்ணீர் விட்டு அழுதான். பரிதாப உணர்ச்சி அவனைப் பற்றியது. நன்றியறிதலோடு கடவுளை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டான். சுயநலமித்தனம் என்னிடமிருந்து விலகிய பின், என் வாழ்க்கையை முழுதாகக் கவனித்துப் பார்த்தேன். சிறு குழந்தையாயிருக்கும்போது, அப்பாவின் கையைப்பிடித்து நடை பழகிச் சென்ற காலத்திலிருந்து, சொந்த ஆசா பாசங்களை

ஒதுக்கி, தொழில் முறையில் உழைத்த மனத்தைக் கொண்டு, அன்று இரவு நடந்து விட்ட ரத்த பயங்கரம் வரை ஆராய்ந்து பார்த்து உண்மையைக் காண முடியாமற் தவித்தேன். வாய்விட்டுக் கதறிவிட வேண்டும்போற் பட்டது. என் சிந்தனையைச் சுற்றித் தட்டாமாலை சுற்றும் பயங்கர உருவங்களையும், சத்தங்களையும் கண்ணீராலும், பிரார்த்தனையாலும் ஒதுக்க முயன்றேன். எனினும், எனது தீய செயல்கள் தனது அவலட்சணமான முகத்தை என் கண் முன் காட்டிக் கொண்டேயிருந்தன. பரிதாப உணர்ச்சி படிப்படியாய் மங்கி மறையவும், மீண்டும் மகிழ்ச்சி தலைதூக்கியது. ஒரு மட்டும் பிரச்சினை தீர்ந்தது என எண்ணினேன். ஹைட் இனி வரமாட்டான் என எண்ணினேன். மனமிருந்தாலும், இல்லாவிட்டாலும், நான் ஜெகிலின் உருவத்திலே தான் வாழ வேண்டும், அப்பா! அது எவ்வளவு ஆனந்தகரமானது! எவ்வளவு மனம் கனிந்த சம்மதத்துடன் இயற்கையான மனித வாழ்வை நான் ஒப்புக்கொண்டு விட்டேன்! எவ்வளவு நேர்மையான சித்தத்தோடு, நான் ரகசியமாய் வெளிச் சென்றுவர உதவிய வாசலைப் பூட்டி, அதன் சாவியையும் காலடியில் போட்டு மிதித்து உடைத்தேன்!

மறுநாள் கொலையைப் பற்றிய செய்திகள் வந்தன. ஹைடின் கொலைக் குற்றம் பகிரங்கமாயிற்று. கொலையுண்டவர் பொதுஜன அபிமானம் பெற்ற பெரிய மனிதர். அது ஒரு குற்றம் மட்டுமல்ல, பயங்கரமான தவறு என்று பேச்செழுந்தது. இதைக் கேட்டு, நான் மகிழ்ந்தேன். மரண தண்டனையின் நினைப்பு என்னுடைய நல்லெண்ணத்துக்கு ஒரு அரணாக அமைந்தது. ஜெகில்தான் இனி எனக்குப் பாதுகாப்பளிக்கும் பாசறை. ஹைட் ஒரு கணம் தலை காட்டினாலும், பொது ஜனங்கள் ஒன்றாகக் கிளர்ந்தெழுந்து அவனைக் கொன்றுவிடத் தயாராயிருந்தார்கள்.

எதிர்கால வாழ்வின் மூலம் கடந்தகால அனுபவத்தைச் சீர்படுத்தி விடலாம் என நினைத்தேன். என்னுடைய முடிவின்படி ஓரளவு பலனும் கிடைத்ததென்றே சொல்லலாம். போன வருடத்தின் இறுதிப் பாகத்தில் நான் உலகத்துத் துன்பத்தைத் துடைப்பதில் எவ்வளவு தூரம் பாடு பட்டேன் என்பதும் உனக்

குத் தெரியும். என் வாழ்க்கை அமைதியோடும், மகிழ்ச்சியோ டும் கழிந்ததையும் நீ அறிவாய். இந்தப் பரோபகார வாழ்வில் நான் சலித்து விட்டேன் என்று சொல்ல முடியாது. அதற்குப் பதிலாக, நித்த நித்தம் அதை நன்கு அனுபவித்தேன். எனி னும் அந்தச் சாபக் கேடான இரட்டைக் குணம் மறையவில்லை. என் அனுதாப உணர்ச்சியின் கூர்மை தேயத் தேய, உள்ளத்தி னுள்ளே விடுதலை பெற்றுத் திரிந்து, பின் அடைபட்ட அந்தத் தீய குணம் மனக் குகையில் உறுமியது. ஹைடை மீண்டும் உருவாக்குவது என்பதைக் கனவிலும் கருதவில்லை. என்னுடைய மனச்சாட்சிப் போராட்டத்திலே, நான் தடுமாறினேன். சாதா ரணக் குற்றவாளியைப் போல், மனத்தில் மீண்டும் தீய எண் ணங்களுக்கு இடங்கொடுத்து அடிமையானேன்.

எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. எத்தனை பெரிய அண்டாவானாலும் நிறைந்துதானே போகும். தீய எண்ணத் துக்கு மனத்தில் சிறிது இடங் கொடுத்ததும் அது, என் ஆத்ம உணர்ச்சியின் சமன் நிலையைத் தள்ளிவிட்டது. எனினும் நான் அஞ்சவில்லை. ஏனெனில் அந்த வீழ்ச்சி, நான் அந்த மருந்தைக் கண்டு பிடிப்பதற்கு முன்னிருந்தது போலத்தான் இருந்தது.

ஜனவரி மாதத்தில், நிர்மலமான ஒரு நாள். தரையில் படிந்திருந்த பனி மறைந்து கொண்டிருந்தது. மேகம் துளிக் கூடக் கிடையாது. ரீஜண்ட்ஸ் பார்க்கில், வசந்தத்தின் இனிய மணமும், பனிக்காலத்தின் எழிலும் நிறைந்திருந்தது. சூரிய ஒளியில் நான் ஒரு பெஞ்சுமீது உட்கார்ந்திருந்தேன். என் மனத் திலே குடிவாழும் மிருகம், நினைவின் கறித் துண்டங்களை நக்கி நக்கிச் சுவை கண்டு கொண்டிருந்தது. ஆத்ம சக்தி அயர்ந்திருந் தது. மேலும், குற்றத்துக்குப் பிராயச் சித்தம் செய்துவிட முடியும் என்ற எண்ணம் வேறு கிளர்ந்தது. நானும் மற்ற மனிதர்களைப் போலத்தானே என்று கருதினேன். என்னுடைய சுறு சுறுப்பு மிகுந்த நற்காரியங்களையும், அவர்கள் அதைப் புறக்கணித்து எவ்வளவு கொடுமையாகச் சோம்பிக் கிடக்கிறார் கள் என்பதையும் நினைத்துச் சிரித்தேன். தற்பெருமை அந்த நிமிஷமே தலையெடுத்தது. உடனே உடலிலே ஒரு நடுக்கம், பயங்கர ஓங்கரிப்பு, ஓரே சிலி சிலிர்ப்பு! பிறகு ஓரே மயக்

கம்! மயக்கம் தெளிந்ததும், என்னுடைய சிந்தனையிலே மாறுதலும், துணிச்சலும், ஆபத்தைப் பற்றிய அலட்சியமும், பொறுப்பை உதறி யெறியும் உணர்ச்சியும் ஏற்பட்டிருப்பதை அறிந்தேன். குனிந்து பார்த்தேன். குறுகிப் போன அங்கங்களில் என் உடை தொள தொளத்துத் தொங்கியது; முழங்கால் மேல் கிடந்த கரம் மயிர் அடர்ந்து மெலிந்திருந்தது. நான் மீண்டும் எட்வர்ட் ஹைடாகி விட்டேன்! எல்லா மனிதர்களுடைய நன்மதிப்பிற்கும், அன்பிற்கும் பாத்திரமாயிருந்த செல்வனாக ஒரு நிமிஷத்துக்கு முன்னிருந்தேன். என் வீட்டிலே எனக்கு சாப்பாடு காத்திருந்தது. ஆனால் இப்போதோ, விடற்ற, அனாதை; ஊரறிந்த கொலைகாரன்; தூக்குமேடைக்கு உரியவன்; உலகமே வேட்டையாடித் திரியும் ஒரு பிராணி!

என் அறிவு அலைக்கழிந்தது. எனினும் பிரக்ஞை தவறவில்லை. என்னுடைய இரண்டாவது அவதாரத்தில் என்னுடைய மூல சக்திகள், தீக்ஷண்யத்துடன் நடந்து கொண்டதை நான் அறிவேன். ஆகவே, ஜெகில் அவ்வேளையில் இல்லாதொழிந்தாலும், ஹைடே தன் நிலைமையைச் சமாளிக்கத் தயாரானான். என்னுடைய மருந்துகளோ வீட்டறையில் ஒரு அலமாரியில் இருந்தன. அவைகளை எப்படி அடைவது? அந்தப் பிரச்சினைதான் என் மண்டையைக் குடைந்தது. நெற்றிப் பொருத்தை அழுத்திப் பார்த்தேன். அதைப் பற்றியே யோசித்தேன். ரசாயன சாலையையும் நான் பூட்டியிருந்தேன். இதே உருவில் நான் வீட்டுக்குச் சென்றால், என் வேலைக்காரர்களே என்னைப் பிடித்து, தூக்குமேடைக்கு அனுப்பி விடுவார்கள். அதற்கு வேற்றாள் உதவி வேண்டும்; அப்போதுதான் எனக்கு லான்யனின் நினைப்பு வந்தது. அவனை எப்படி அடைவது? எப்படி அவனை வழிக்குக் கொண்டு வருவது? தெருவிலுள்ளவர்களின் கண்ணில் படாமலே தப்பித்துக் கொண்டு போய் விட்டாலும், அவன் முன்னால் இந்த உருவில் எப்படிச் செல்லுவது? முன்பின் அறியாத, பார்த்தாலே வெறுப்பூட்டும் ஆசாமியாக, அவன் முன் சென்று அந்த டாக்டரை வழிக்கு இழுத்து, எப்படி ஜெகிலின் அறையைச் சோதனை போடச் சொல்வது? அப்போதுதான் எனக்கு என் மனத்திலே ஒரு சிறிது மாறாது கிடந்த ஜெகிலின் எண்ணம் உதித்தது. ஜெகிலாகவே நான் ஒரு கடிதம்

எழுத முடியும். இந்த சிந்தனைப் பொறி தெறித்து விழுந்ததுமே, என்னுடைய திட்டத்தின் முழுவழிகளும் மனத்தில் தோன்றிவிட்டன.

அதன் மேல், ஆடைகளை ஒரு விதமாய்ச் சரிப்படுத்திக் கொண்டு, ஒரு வண்டியிலே, போர்ட்லண்ட் தெருவிலுள்ள ஒரு ஹோட்டலுக்குச் சென்றேன். என் தோற்றம் என்னுடைய ஆடைகளின் கோளாறால், கோமாளி வேஷமாகத்தான் வெளிக்குத் தோன்றியது. என்னுடைய வேஷத்தைக் கண்டு வண்டிக்காரனுக்குச் சிரிப்பு அடக்க முடியாமல் வந்தது. பைசாச கோபத்தோடு நான் பற்களைக் கடித்துக்கொண்டே அவனைப் பார்த்தேன். அவனுடைய சிரிப்பு வாடி வதங்கியது. நல்லவேளை! இல்லாவிடில் அந்த இடத்திலேயே வண்டியிலிருந்து அவனை இழுத்தெறிந்திருப்பேன். அந்த ஹோட்டலில் நான் நுழைந்ததைக் கண்டதும், வேலைக்காரர்கள் நடுங்கினார்கள். என்னைப் பார்க்கக்கூட அவர்கள் அஞ்சினார்கள். சொன்னதை மட்டும் செய்தார்கள். தனியறை ஒன்று அளித்தார்கள். எழுத வேண்டியதற்குத் தேவையான உபகரணங்களும் தந்து உதவினார்கள். பயந்து சாகும் ஹைடை நான் அப்போதுதான் கண்டேன். அவன் அசாதாரணமான கோபத்தால் நடுங்கிக்கொண்டு, கொலைக்கும் துணிந்த மனத்தோடு இருந்தான். எனினும் அப்போது அடங்கிக் கிடந்தான். கோபத்தை உள்ளடக்கி விட்டான். இரண்டு கடிதங்களையும் எழுதினான். ஒன்று லான்யனுக்கு, மற்றது பூலுக்கு. அவை தபால் கட்டில் சேர்ந்தன என்பதை நிச்சயப் படுத்துவதற்காக அவற்றை ரிஜிஸ்தர் பண்ணவேண்டும் என்று சொல்லி யனுப்பினான்.

அன்று முழுதும் அறைக்குள்ளேயே நகத்தைக் கடித்துக் கொண்டே, கணப்புக் குழியருகே உட்கார்ந்திருந்தான். பயமே துணையாகக் கொண்டு, சாப்பிட்டான். உணவு கொண்டு வந்தவனோ அவன் முன் நடு நடுங்கினான். இருட்டியதும், ஒரு மூடியிட்ட காரிலே பதுங்கிக்கொண்டு தெருத்தெருவாய்ச் சுற்றினான். அவன் என்றுதான் இன்னும் சொல்கிறேன். நான்தான் என்று சொல்ல என்னால் முடியவில்லை. அந்த நரகத்தின் சிசுவினிடம் மனிதத்தன்மையே கிடையாது. பயத்தையும் பகைமையையும்

தவிர வேறு எதுவும் அவனிடம் கிடையாது. கார் ஓட்டி வந்தவனுக்கே ஏதோ சந்தேகம் உண்டாகிறது என்று அறிந்தவுடன் அந்த வண்டியை அங்கேயே வழியனுப்பிவிட்டு, அந்தத் தொள தொளத்த ஆடைகளோடு, எல்லோருடைய கவனத்தையும் இழுக்கும் நடையோடு, உள்ளத்திலே இரு பெரும் உணர்ச்சிகளும் சூறுவளியைப் போல் சுழன்று எழும்ப அவன் நடந்து வந்தான். அவனுடைய பயங்கர எண்ணங்களே அவனை விரட்டின. விரைவாக நடந்தான். தனக்குத் தானே முனகிக் கொண்டு, ஜனநடமாட்டம் குறைந்த தெருக்கள் வழியாக நடந்தான். அர்த்த சாமத்தின் ஒவ்வொரு விநாடியையும் எண்ணிக் கொண்டே நடந்தான். வழியில் ஒரு பெண் அவனிடம் விளக்குகள் நிறைந்த ஒரு பெட்டியைக் கொடுக்க வந்தாள். அவன் அவள் முகத்தில் ஓங்கி அறைந்தான்; அவள் ஓடியே போனுள்.

லான்யனின் வீட்டில் நான் என் சுய உருவத்தை அடைந்தவுடன், என்னுடைய நண்பனின் பயமும் பிரமையும் என்னை ஓரளவு பாதித்தன. அதற்குமுன் கழிந்த நேரத்தில் நடந்தவற்றை நினைத்தால், இந்த அனுதாபம் கடலில் காயம் கரைத்த மாதிரிதான். என்னிடம் மாறுதல் ஏற்பட்டிருந்தது. தூக்குமேடையைப் பற்றிய பயம் ஒழிந்தது. ஆனல், மீண்டும் ஹைடாக இருக்க நேருமோ என்ற திகிலே என்னை வாட்டிற்று. லான்யன் கண்டித்ததையெல்லாம் கனவு நிலையிலேயே கேட்டேன். கனவில் நடப்பவன் போலவே, வீட்டுக்கு வந்து படுக்கைக்குச் சென்றேன். அன்றைய அலைச்சலினுல் ஏற்பட்ட அலுப்பில் நன்ருகத் தூங்கினேன். என்னுடைய பேய்க் கனவுகள் கூட என்னை உசுப்பவில்லை. காலையில் நான் தளர்ந்து போய் எழுந்தேன்; எனினும் உற்சாகம் இருந்தது. என் இதயத்திலே தூங்கிக் கொண்டிருக்கும் அந்தக் கொடிய மிருகத்தைக் கண்டு நான் பயந்தேன், வெறுத்தேன். முந்தின நாள் என்னை அலைக் கழித்த பயங்கரமான ஆபத்துக்களையும் நான் மறக்கவில்லை. நல்ல வேளை. நான் என் வீட்டில், மருந்துகளின் துணையோடு இருந்தேன். தப்பி வந்ததற்காக என்னுள்ளாகவே எழுந்த நன்றி யுணர்ச்சி என் ஆத்மாவிலே ஒளி சிதறி, நல்ல நம்பிக்கையை ஊட்டியது.

காலையில் சாப்பிட்டானதும் தாழ்வாரத்தில் ஆர அமர உலாவிக் கொண்டு, குளிர் காற்றின் இன்பத்தைப் பருகிக் கொண்டிருந்தேன். அப்போது மீண்டும் அந்த மாறுதலுக்குரிய விபரீத உணர்ச்சிகளும், வேதனைகளும் வந்து என்னைப் பற்றின. அறைக்குள் ஓடி ஒளியத் தான் நேரமிருந்தது. மீண்டும் நான் கோபாவேசமும் குரூரமும் கொண்ட ஹைடாக மாறித் துடித்தேன். என் சுய உருவத்தைப் பெற, இந்தத் தடவை நான் இரண்டு மடங்கு மருந்தைக் குடிக்க வேண்டியிருந்தது. ஆறு மணி காலத்துக்குப் பிறகு, நான் கவலையோடு கணப்புக் குழிய ருகே அமர்ந்திருந்தபோது, மீண்டும் பழைய வேதனைகள் உண் டாயின. மறுபடியும் மருந்தை உட்கொள்ள வேண்டியதாயிற்று. அன்று முதல் மருந்தின் உதவியாலும், மனத்திடத்தின் பகீரத முயற்சியாலும் தான் நான் ஜெகிலாக இருக்க முடியும் என்பதைக் கண்டு கொண்டேன். இரவிலும் பகலிலும், திடீரென்று இந்த நடுக்கம் வந்து விடும்: எல்லாவற்றிற்கும் மேலாக, தூங்கினாலும், சிறிது அயர்ந்து மறந்தாலும் நான் ஹைடாகவே எழுந்திருந்தேன். இந்தத் தோல்வியினால் ஏற்பட்ட கவலையாலும், வேண்டுமென்றே தூக்கத்தைக் கட்டுப்படுத்தியதாலும், மனித சக்திக்கு அப்பாற்பட்டு, நான் நோய்வாய்ப் பட்டு நொந்து கரைந்து, மனத்திலும் உடலிலும் தெம்பும் திராணியும் இழந்தேன். என் மனத்தை ஒரே எண்ணந்தான் அலட்டியது. நான் தூங்கினாலும், மருந்து வேலை செய்யத் தவறி விட்டாலும், மாறுதல்களின் வேதனைகள் குறைந்திருந்தும், பயங்கர மன நிலையும், காரண காரியமற்ற பகைமை உணர்ச்சியும், பொங்கிப் புடைக்கும் உணர்ச்சியைத் தாங்கச் சக்தியற்ற தேகமும் கொண்டவனாகி விடுவேன். ஜெகிலின் நோயின் பலவீனத்திலே, ஹைடின் சக்தி பெரிதும் வளர்ந்து விட்டதாகத் தோன்றிற்று. அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் கொண்ட பகை யுணர்ச்சி சம நிலைக்கு வந்து விட்டது. ஜெகிலின் வெறுப் புணர்ச்சி அவனுடைய பிறவிக் குணம். தன்னுள்ளே கிடந்த ஒரு மிருகம் தனது மரணத்திலும், சித்த உணர்ச்சியிலும் பாகம் பிரித்தாலும் வாரிசாகி, முழுக்க முழுக்கக் கெட்டலைந்தது, ஜெகிலின் மனத்தில் பட்டது. இந்தத் தொடர்பே அவனுடைய வேதனைக்கும் துன்பத்துக்கும் காரணம் என ஜெகில் கருதினான். ஏனெனில், ஹைடின்

வாழ்க்கைச் சக்தி முழுமையும் உருவமற்ற கொடுமை ஒன்றே தான் என்று நினைத்தான். இது அவனைத் திடுக்கிட வைத்தது. கட்டுக் கிடைச் சக்தி வாய் விட்டுக் கத்துவது போலிருந்தது; கண்ணுக்குத் தெரியாத ஒன்று அட்டகாசமாய்த் திரிந்து, பாவங்களைச் செய்தது! மடிந்து போய், உருவமற்றிருந்த ஒன்று உயிரின் உத்தியோக ஸ்தானங்களைக் கைப்பற்றியது! இந்தக் கோரமான கொடுமை, கண்ணின் மணி போல், கண்ணுட்டியைப் போல், அத்தனை நெருக்கமாய் ஒட்டிக் கிடந்தது. ஜெகிலின் சரீரக் கூண்டிலே தான் அதுவும் அடைபட்டுக் கிடந்தது. உள்ளே கிடந்து உறுமுவதும் வெளிவரத் தவிப்பதும் தெரிந்தது. எப்போதாவது அவன் அயர்ந்து விட்டால் அல்லது கண் சொக்கி விட்டால், அந்தப் பேயுணர்ச்சி அவனைக் கவிழ்த்து வெளி வந்து விடும். ஹைட் ஜெகிலிடம் கொண்ட வெறுப்போ, வேறு மாதிரி. தூக்கு மேடையில் ஏறிச்சாவதைவிட, தற்கொலைக்கு அவன் சம்மதித்தான். ஆனால், அதற்குப் பதிலாகத் தான் வெறும் உருவ மாற்றத்திலே தப்பிப்பதை விரும்பினான்; இந்தச் சௌகரியம் தவிர, வேறு அவனுக்கு இல்லை. ஜெகிலுக்கு ஏற்பட்டுள்ள தளர்ச்சியை அவன் விரும்பவில்லை. ஜெகில் தன்னை விரும்பாததும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான், அவன் என்னிடம் குரங்குத் தனமான குறும்புகள் செய்தான். என் புத்தகங்களில் என்னைத் திட்டித் திட்டி எழுதுவான். என் கடிதங்களைத் தீக்கு இரையாக்கி, என் தந்தையின் புகைப் படத்தை நாசமாக்கினான். மரண பயம் ஒன்று மட்டும் அவனுக்கில்லா விட்டால், ஜெகிலை அழிப்பதற்கே அவன் வழி தேடியிருப்பான். அவனுடைய உயிராசை அதிசயமானது. நான் இன்னும் அதிகமாகக் கூடச் சொல்லுவேன். அவனைப் பற்றி எண்ணும் போதெல்லாம் அருவையும் பயமும் ஏற்பட்டாலும், அவனுக்கிருந்த உயிராசையும், நான் தற்கொலை செய்தால் அவனும் தீர்ந்து விடுவான் என்ற உண்மை அவனுக்குத் தெரிந்திருந்ததாலும் தான் அவன் என்னிடம் பணிந்து நடந்தான் என்பதை எண்ணினால், அவன் மீது எனக்கு அனுதாபமே பிறக்கிறது.

இந்த விவரங்களை விவரமாக எழுதுவதில் பயனுமில்லை; நேரமும் இல்லை. என்னைப் போல யாருமே துன்புற்றிருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம். பழக்க தோஷத்தினாலும், இந்த

வேதனை குறையவில்லை. நொடித்துப் போன ஆத்மாவோடு வாழ்ந்து தொலைக்க வேண்டி நேர்ந்தது. இந்தத் தண்டனை பல வருஷ காலம் என்னை வாட்டியெடுக்கக் கூடும். ஆனால், இப் போது ஒரு பெரும் விபத்துக் கடைசியாக நேர்ந்துவிட்டது. இதன் மூலம் என் உருவ மாற்றத்துக்கே இடமில்லாமல் போய் விட் டது. என்னிடமிருந்த அந்த உப்புக் குறைந்து போய் விட்டது. முதல் தடவை வாங்கியதற்குப்பின் செலவின் குறையை, நான் ஒழுங்காக நிறை செய்து வரவில்லை. புதிதாக உப்பு வாங்கி னேன். மருந்தில் கலந்தேன், பொங்கியது. நிறம் மாறியது. மீண் டும் நிறம் மாற வில்லை. அதைக் குடித்தேன்; அது செயலிழந்து போய் விட்டது! அந்த உப்புக்காக எப்படி லண்டன் நகரத் தையே சலித்து அலசிப் பார்த்து விட்டேன் என்பதை, பூல் உன் னிடம் சொல்வான். எல்லாம் பலனளிக்கவில்லை. முதலில் வாங் கிய உப்பு அவ்வளவு சுத்தமானதில்லை. ஆனால், அந்த இனந் தெரியாத அசுத்தந்தான் மருந்தின் வேகத்தைக் கூட்டியிருக் கிறது என்று நான் கருதுகிறேன்.

ஒரு வாரம் கழிந்து விட்டது. கடைசியாக மிச்சம் மிஞ்சாடி யாக உள்ள உப்பின் உதவி கொண்டு தான், இந்த சரிதத்தை நான் எழுத முடிகிறது. ஹென்றி ஜெகில் தன்னுடைய சுய நினைவோடு இன்று தான் கடைசி முறையாக ஏதேனும் எண்ண முடியும், தன் முகத்தைக் கடைசி முறையாகக் காண முடியும்! ஒரு பெரும் அதிசயம் நடந்தாலன்றி இதில் முன்னேற்றம் காண முடியாது. இதை எழுதுவதிலேயே நான் பொழுதைக் கழிக்க வும் முடியாது. இது வரையில் ஹைட் இந்த வரலாற்றையும் பிடுங்கி நாசமாக்காமல் இருக்கிறான் என்றால் அதற்கு அதிருஷ் டமும், எச்சரிக்கையுந்தான் காரணம். இதை எழுதிக் கொண்டி ருக்கும் போதே என்னில் மாறுதல் ஏற்பட்டால் ஹைட் இதைத் தும்பு தும்பாகக் கிழித்தெறிந்து விடுவான். இதை எழுதி முடித்து வைத்தபின் அவன் உருப் பெற்றால் தான், இது தப்பிப் பிழைக் கும். சுய நலமும், சந்தர்ப்பத்தை உணரும் சக்தியும் இருந்தால், குரங்குத் தனமான குணத்தை அவன் அடக்கி, இதைப் பிழைக்க வைப்பான். அரை மணி நேரத்துக்குள் நான் அந்தப் பாழாய்ப் போன ஹைடின் ரூபத்தை நிரந்தரமாகப் பெற்று விடுவேன்! என் ஆசனத்தில் கிடந்து எப்படிக் கதறி அழுவேன் என்பதும்,

பேயடித்த மாதிரி இந்த அறைக்குள் எப்படிக் குறுக்கும் நெடுக்குமாக நடந்து அவன் காலடி யோசையைக் காது கொடுத்துக் கேட்பேன் என்பதும் எனக்கே தெரியும். இந்த அறைதான் இவ்வுலகில் எனக்குக் கடைசிப் புகலிடம். ஹைட் தூக்கிலிடப் பட்டுச் சாவானு அல்லது கடைசி நேரத்தில், தன்னை விடுவித்துக் கொள்ளும் அளவுக்குத் தைரியம் பெறுவானு என்பதெல்லாம் கடவுள் ஒருவனுக்குத் தான் தெரியும். எனக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. இது தான் என்னுடைய உண்மையான மரண காலம். இனிமேல் நடை பெறப் போவதெல்லாம் இன்னொருவனுடைய சொந்த விஷயம். ஆதலால், இப்போதே என் பேனுவைக் கீழே வைத்து விடுகிறேன். இந்தச் சரிதத்தை முத்திரையிட்டு மூடுவதோடு, துர்ப்பாக்கிய ஜெகிலின் வாழ்வையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விடுகிறேன்.



## பாலும் பாவையும்

காலேஜிலே காதல் வயப்பட்டு ஒரு வாலிபனுடன் பெற்றோரைத் துறந்து வெளியேறுகிற பெண். அவளிடம் பணம் பெறும் நோக்கத்தோடு கூட்டிச் சென்ற வாலிபன். அவளுக்கு நன்மை செய்ய முயலும் அப்பாவி. இவர்களைச் சுற்றிச் சமுதாயம் விரித்துள்ள சிக்கலான வலை. இவற்றிடை அவர்கள் பட்டுழலும் இன்ப துன்பங்கள் பற்றி ஆராய்ச்சியும், அறிவும், உணர்வும் பொங்க தனக்கென உரிய சிறந்த தமிழில் சமூகத்தின் நிலையைப் படம் பிடித்துள்ளார் விந்தன். ஓவியர் மணியம் உள்ளும் புறமும் ஏராளமான அழகிய படங்கள் தீட்டியுள்ளார்.

விலை ரூ. 3—8—0

## பிரேத மனிதன்

தனது விஞ்ஞானப் பேரறிவு கொண்டு ஒருவன் மனிதனைப் போன்ற பெரிய உருவமொன்றை உண்டு பண்ணி அதற்கு உயிரும் கொடுத்து விடுகிறான். அதற்குப்பின் அவன் அனுபவித்த துன்பம், அப்பப்பா! மிகப் பயங்கரமானது. மயிர் சிலிர்க்கும் நாவல். புதுமைப் பித்தனின் தமிழாக்கம் என்றால் அதன் சிறப்பு பற்றி என்ன சொல்ல விருக்கிறது?

விலை ரூ. 1—0—0

## ஒரே உரிமை

ஒரு கை கூழுக்காக ஔவை கவி பாடினாள் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அதைக்கூட எதிர்பாராது, குடிக்கக் கூழற்ற ஏழைப் பாட்டாளி மக்களுக்காகக் கதை எழுதுகின்ற ஆசிரியர் விந்தன். நித்த நித்தம் தெருவிலும், அங்காடிக் கடைகளிலும், சந்து பொந்துகளிலும் ஆந்தைபோல் வாழும் அப்பாவி ஏழைகளின் நிலைமையைத் தனது வலிமையான கதைகளின் மூலம் நமக்குச் சுட்டிக் காட்டும் முறையே அற்புதம்! முற்போக்கு இலக்கியத்திலே தலை சிறந்து விளங்குகின்றன விந்தன் எழுத்தோவியங்கள்.

**விலை ரூ. 2—8—0**

## புயல்

சிறுவயது முதற் பழகியவனைக் காதலிக்கிறாள் ஒருத்தி. ஆனால் அதை வெளிவிட்டுச் சொல்லும் சக்தி மட்டும் அவளுக்கு வரவேயில்லை. அவளை மற்றொருவனுக்கு உடைமையாக்கி விடுகின்றனர் பெற்றோர். ஆனால் அவள் உள்ளம்! அதுவும் காதலனைக் கணவன் வீட்டிற் சந்தித்தபின்!! நிலை தடுமாறுகிறது! காதலுக்கும் கற்புக்கும் போராட்டம்! வீரப்போராட்டம்!! முடிவில்......? தன்வழியே படிக்கின்றவர் உள்ளத்தை ஈர்த்துச் செல்லும் லாகவமான நடையில் எழுதியுள்ளார் ரகுநாதன்.

**விலை ரூ. 1—8—0**

# எங்கள் வெளியீடுகள்

## கவிதைகள்

| | | | |
|---|---|---|---|
| கீதாஞ்சலி | தாகூர் | 2 | 0 |
| ,, சிறுதிரட்டு | ,, | 0 | 4 |
| கனி கொய்தல் | ,, | 2 | 8 |
| தமிழ்க்குமரி | ச. து. சு. யோகி | 2 | 8 |
| உமர்கயாம் | ,, | 1 | 0 |
| மேரி மக்தலேனு | ,, | 0 | 10 |
| கண்மணி ராஜம் | ,, | 0 | 4 |
| கிளிக்காதல் | பண்டிதரத்நம் | 0 | 8 |
| சிந்தனைக் கதிர்கள் | ,, | 0 | 8 |
| தாய் | சீராளன் | 0 | 12 |
| தேடியபாதம் | பிரான்ஸிஸ்தாம்சன் | 0 | 4 |

## கட்டுரைகள்

| | | | |
|---|---|---|---|
| கடற்கரையிலே | ரா. பி. சேதுப்பிள்ளை | 1 | 4 |
| பூச்சூட்டல் | விசு. திருநாவுக்கரசு | 2 | 0 |
| நான்கு கவிமணிகள் | வி. ஆர். எம். செட்டியார் | 1 | 4 |
| அசோகவனம் | ஆ. முத்துசிவன் | 2 | 8 |
| கவிதை | ,, | 1 | 0 |
| அமரகவி பாரதி | ,, | 0 | 6 |
| தாகூரின் கவிதைக்கனி | அழ. மணிவாசகம் | 0 | 10 |

## விஞ்ஞானம்

| | | | |
|---|---|---|---|
| ரேடியோவிற்கு முதலுதவி | டாக்டர். எஸ். ஏ. சஞ்சீவி | 0 | 8 |

## அரசியல்

| | | | |
|---|---|---|---|
| வேலை நிறுத்தம் ஏன்? | விந்தன் | 0 | 12 |
| போதும் முதலாளித்துவம் | கா. அப்பாதுரைப் பிள்ளை | 0 | 14 |
| சட்டம் எதற்கு? | என். ஆர். பத்மநாபன் | 1 | 8 |

## வரலாறு

| | | | |
|---|---|---|---|
| மாக்ஸிம் கார்க்கி | அ. சிங்காரவேலு | 2 | 8 |
| ரஸிகமணி டி. கே. சி. | பாஸ்கரத் தொண்டைமான் | 2 | 0 |
| நேத்தாஜி | எஸ். எஸ். மாரிசாமி | 3 | 0 |

## இராணுவம்

| | | | |
|---|---|---|---|
| நம் போர்ப் படைகள் | Lieut Col. ஏ. என். எஸ். மூர்த்தி | 3 | 0 |

## ஹாஸ்யச் சித்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| கற்பகக் கனிகள் | சுகி | 2 | 8 |

## கதைத் தொகுதிகள்

| | | | |
|---|---|---|---|
| முல்லைக் கொடியாள் | விந்தன் | 3 | 0 |
| ஒரே உரிமை | ,, | 2 | 8 |
| சிறந்த சிறு கதைகள் | ஆஸ்கார் ஒயில்டு | 1 | 4 |
| ஜீவாவின் கதைகள் | நாரண துரைக்கண்ணன் | 3 | 0 |
| மல்லிகை | ப. கோதண்டராமன் | 1 | 8 |
| ஓவியம் தந்த பரிசு | பத்மாவதி | 2 | 0 |
| வத்சலையின் வாழ்க்கை | சாவி | 1 | 0 |
| நாலு கதைகள் | சரத் சந்திரர் | 1 | 8 |
| காதற் கடிதம் | புரசு பாலகிருஷ்ணன் | 2 | 0 |

| | | | |
|---|---|---|---|
| காதலர் | கு. நா. குமாரசாமி | 0 | 8 |
| சூரியகாந்தி | சிதம்பர சுப்ரமணியம் | 2 | 0 |

## நாடகங்கள்

| | | | |
|---|---|---|---|
| செஞ்சி | ஷெல்லி | 2 | 8 |
| அருணோதயம் | கிட்டு | 2 | 8 |
| கண்ணனும் காந்தாரியும் | கே. என். சுந்தரேசன் | 1 | 4 |
| விஜயன் | ரா. அ. பத்மநாபன் | 0 | 12 |

## நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| பாலும் பாவையும் | விந்தன் | 3 | 8 |
| புயல் | ரகுநாதன் | 1 | 8 |
| வாழ்க்கைத் தோணி | க. நாராயணன் | 2 | 0 |
| பிரேத மனிதன் | புதுமைப் பித்தன் | 1 | 0 |
| உடைந்த உள்ளம் | சரத் சந்திரர் | 2 | 12 |
| உஷா | ,, | 1 | 8 |
| சைலஜா | ,, | 1 | 8 |
| நியாயமா? | கால்ஸ் வொர்த்தி | 1 | 8 |
| புரட்சி வீரர் | அப்டன் சிங்ளேர் | 3 | 0 |
| ஆறு நவீனங்கள் | அருணன் | 0 | 12 |
| தினக் குரல் | ரா. வெங்கிடாசலம் | 1 | 8 |
| செவிலித்தாய் | சி. சு. செல்லப்பா | 0 | 12 |

# STAR PUBLICATIONS

P. B. No. 423

TRIPLICANE :-: MADRAS—5